வெளியீடு 11-02-2000 Issued 11-02-2000

396/2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 9, 1999 - தொகுதி 71 - எண் 1**

**Friday, 9th April, 1999—Volume 71 - No. 1**

பேரவைச் செயலகம், சென்னை - 600 009
ssembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

D
V2:11,31'N99 .
N99.71.1
221801

[Price Rs. 3.00

9–4–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **இரங்கல் குறிப்பு--** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 1-2 |
| *2.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-40 |
| *3.* **விதி 110-ன்கீழ் அறிக்கை--** | |
| மின்சார வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுதல் பற்றி மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை | 41 |
| *4.* **அறிக்கைகள் அளித்தல்--** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 42 |
| (ஆ) மனுக்கள் குழு | 42 |


53-92-1

22180




| | பக்கங்கள் |
|---|---|
| மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம்<br>(ஆ) கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்<br>(இ) கோரிக்கை எண் 11 - மாவட்ட நிருவாகம் | 42-149 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 42-43,47,52, 57,71,74,78, 80,90,102, 103,127-142 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 57-64 |
| திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா | 64-69 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 70-75 |
| திரு. ஜி. பழனிசாமி | 75-81 |
| திரு. குழந்தை தமிழரசன் | 81-89 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 89-103 |
| *திரு. லா. சந்தானம் | 104-108 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 108-116 |
| *திரு. ம. சண்முகம் | 117-120 |
| திரு. எ. தெய்வநாயகம் | 120-125 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 93,99,115, 125-127 |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 149-150 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சிட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education**.. **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | |
|---|---|
| 6. **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. **Minister for Public Works** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports. |
| 10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | |
|---|---|
| 13. **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 15. **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles. |
| 16. **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. **Minister for Forest** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control. |
| 18. **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity. Film Technology and Cinematography Act. Stationery and Printing and Government Press.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சிடி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆவையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. இ. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. க. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. | துணைச் செயலாளர் |
| 20. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. க. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. | தலைமை நிருபர் |
| 30. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 35. | திரு. நா. நடராஜன், பி.ஏ. .. | தலைமை நிருபர் |
| 36. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 37. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல். .. | தலைமை நிருபர் |
| 38. | திரு. தி. உமாபதி, பி.ஏ. .. | தலைமை நிருபர் |
| 39. | திருமதி பி. சரஸ்வதி .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. .. | இராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. | பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. .. | ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. .. | அம்பாசமுத்திரம் |

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

27. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)

28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்

33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு

37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்

38. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி

39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்

40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

44. கணேசன், திரு. இ. .. எடப்பாடி

45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்

46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி

55. கிருஷ்ணன், திரு. சி. வெ. .. வேடசந்தூர்

56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்

58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி

60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்

61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

62. கோபால், திரு. பா. .. மேட்டூர்

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. என்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சீ.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | திருவட்டாறு |
| 235. வெற்றிடம் | .. | நத்தம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 26, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 ஏப்ரல் 9, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பீடி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்(கு)
இறையொருங்கு நேர்வது நாடு".

புதிய சுமைகள் ஒன்று இரண்டு வரும்போது அவற்றைத் தாங்கிக் கொண்டு, அரசுக்குரிய வரி வகைகளைச் செலுத்துமளவுக்கு வளம் படைத்ததே சிறந்த நாடாகும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர் திரு. எ. துரைசாமி அவர்கள் 7-4-1999 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. எ. துரைசாமி அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம், தலைவாசல் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[பேரவைத் தலைவர்] [1999 ஏப்ரல் 9

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 321, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**321—**

### உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

***15312 - திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் சக்கரப்பநாயக்கனூர் பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திடும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதியில் சக்கரப்பநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திடக் கோரி, 1998-99 இல் கருத்துரு பெறப்பட்டது. இப்பள்ளி சார்பில் பொதுமக்கள் பங்குத் தொகை ரூ.1.00 இலட்சம் செலுத்தப்படவில்லை. மேலும் எட்டாம் வகுப்பில் நிர்ணயிக்கப்பட்ட அளவு மாணவர் எண்ணிக்கை இல்லை. இந்நிலையில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை, இப்பள்ளி பூர்த்தி செய்யாததால், உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த உயர்மட்டக் குழுவால் பரிந்துரை செய்யப்படாததால், தரம் உயர்த்தப்படவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளி ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னால், வெள்ளையர் காலத்திலே ஏற்படுத்தப்பட்ட பள்ளி. இதற்குப் பின்னால் ஏற்படுத்தப்பட்ட எத்தனையோ பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக, மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இது என்னுடைய சொந்தக் கிராமத்திலுள்ள பள்ளி. நான்கூட அந்தப் பள்ளியிலேயிருந்து படித்து வந்தவன்தான். எனவே மறுபரிசீலனை செய்து அதை—ஒரு இலட்ச ரூபாய் கட்ட வேண்டிய நிபந்தனையை ஏற்று தற்சமயம் அந்தக் கிராமத்துக்காரர்கள் கட்டுவதற்கு முன் வந்திருக்கிறார்கள். அதற்குரிய இட வசதியும் இருக்கிறது. பிள்ளைகளை அதிகமாக்குகின்ற வாய்ப்பும் இருக்கிறது. எனவே, மீண்டும் பரிசீலனை செய்து மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் அந்தப் பள்ளியிலே படித்து, இவ்வளவு உயர்ந்த நிலையை எய்தியதற்கு முதலில் வாழ்த்துகிறேன். அந்தப் பள்ளியிலே 8 ஆம் வகுப்பிலே படிக்கின்ற மாணவர்கள் — ஆண்கள் 16, பெண்கள் 19, மொத்தம் 35 பேர்கள். 35 பேர்களில் 25 பேர் 9 ஆம் வகுப்புக்கு வரக்கூடும். இப்படி ஒரு நிலை இருக்கிறது. 80 பேர், 90 பேர் இருக்கிற பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய ஒரு கட்டாய நிலை இருக்கிறது. இரண்டாவது, 1 இலட்ச ரூபாய் செலுத்தியவர்களிலே பலபேர் தொடர்ந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, குழு ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் குழு ஆய்வு செய்தபோது, இந்தப் பள்ளிக்கு முன்னுரிமை தருகிற வாய்ப்பே இதுவரையில் ஏற்படவில்லை. ஏற்படுகிற காலத்தில் அது தரம் உயர்த்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 322, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

322— [1999 ஏப்ரல் 9

## அரிகர நதியில் ஓடுபாலம்

***340—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்டம், பி.வி.டி.யில் லாலாக் குடியிருப்பினை இணைக்கும் அரிகர நதியில் ஓடுபாலம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது பாலம் அமைக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

*முற்பகல் 9-35*

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாலாக்குடி கிராமத்தையும், செங்கோட்டை-கொல்லம் சாலையையும் இணைக்கும் வகையில் அந்தக் கிராமத்திலிருந்து இணைப்புப் பாதை ஏற்படுத்தவும், அங்கே அரிகர நதியின் குறுக்கே ஒரு தரைப் பாலம் அமைக்கவும் பொதுமக்கள் நீண்டகாலமாக கோரி வருகின்றனர். ஆகவே அந்தத் திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தை மறுபரிசீலனை செய்தாலும், நிதியை மறுபரிசீலனை செய்கிற அளவுக்கு தற்போது அந்தப் பேரூராட்சியினுடைய நிலை இல்லை. 10,38,343 ரூபாய்தான் மார்ச் 31 ஆம் தேதி வரையில் அந்தப் பேரூராட்சியிலே நிதி இருக்கிறது. அதற்கு கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்ற ஒரு தோராய மதிப்பீடு கிடைத்திருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டக்கூடாது என்பதல்ல. பிரச்சனை, நிதியாதாரங்களைத் தேடுகின்ற நிலையில் வருகின்ற 1999-2000 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி, அதைப்போல இன்னும் அந்தப் பேரூராட்சியினால் ஏதாவது சேர்க்க முடியுமானால் கூட்டு நிதியாக ஏற்பாடு செய்து, அந்த நிதியின் மூலம் அந்தப் பாலத்தினைக் கட்டலாமா என்பதைப் பரிசீலிக்கலாம் என்ற தகவலைத் தெரிவிக்கிறேன்.



1999 ஏப்ரல் 9]

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்விக்கு அறிவிப்பு கொடுத்து, 28-5-1996 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 3 வருடங்கள் ஆகின்றன. இவ்வாறு கேள்விகளுக்கு 3 வருடங்களுக்கு மேல் காலதாமதம் ஆகி பதில் பெறுவதால், சில கேள்விகள் முக்கியத்துவத்தை இழந்துவிடுகின்றன. ஆகவே, இதுபோன்று நிகழாவண்ணம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் அவசர அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் பற்றி அவ்வப்போது விவாதிப்பதற்கு வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பட்டியலிலே இதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அதுமாதிரியும் ஈடுபட்டிருக்கலாம். அதற்கெல்லாம் நேரத்தை ஒதுக்குகிறபோது, அதை எதற்கோ பயன்படுத்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நல்ல காரியத்திற்கும் உபயோகப்படுத்தியிருக்கலாம். காலதாமதம் இருக்கக் கூடாது என்பதுதான் துறையினுடைய கருத்து. வருகிற கேள்விகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகிற காரணத்தால், அதிலேயும் முக்கியத்துவம் பார்த்து எடுக்கப்படுகிறது. நான் துறையில் சொல்லி இப்படிப்பட்ட நிகழ்வுகள் இல்லாமல் பார்த்துக்கொள்கிறேன் என்பதை உறுதி செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாக காலதாமதம் ஏற்படுவது உண்மை. இது தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, உரிய நடவடிக்கையை இதிலே அரசு எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வினா எண் 323, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 9

323-

## ஆதிதிராவிட மக்களின் வீடுகளைப் பழுதுபார்த்தல்

***15825-திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதியிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவை எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் கிராமங்களில் பழுதடைந்த தொகுப்பு வீடுகள் இருப்பின் அதற்கான முன்மொழிவுகளை சம்பந்தப்பட்ட கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் பெறப்படும்போது அவைபற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் 1997-98 ஆம் ஆண்டில் திருவிடைபுரத்தில் 17 வீடுகளும், மங்கலாபுரம் கிராமத்தில் 5 வீடுகளும், அச்சம்பட்டி கிராமத்தில் 3 வீடுகளும், புதுக்குடி கிராமத்தில் 16 வீடுகளும் ஆக மொத்தம் 41 வீடுகளைப் பழுதுபார்க்க ஒரு வீட்டுக்கு 7,500 ரூபாய் வீதம் ஒதுக்கப்பட்டது. அதைப் பயனாளிகள்தான் பழுதுபார்க்க வேண்டும் என்ற விதியும் உள்ளது. அந்த வீடுகளைப் பழுது பார்க்க ரூபாய் 7,500 போதாது என்று பயனாளிகள் மறுத்ததால் அந்தப் பணம் திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. அந்த வீடுகளில் குடியிருக்கும் ஆதிதிராவிடர்கள் மிகவும் ஏழைகள். எனவே, அதைக் கருத்தில்கொண்டு, ஆதிதிராவிட வீடுகளைப் பழுதுபார்க்க குறைந்தபட்சம் ஒரு வீட்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி, பழுதடைந்த வீடுகளைப் பழுதுபார்க்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அரசுக்கு சற்று ஒத்துழைப்புத் தரவேண்டும். குறிப்பாக, மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு நிதி ஒதுக்கீடு செய்கிறபோது, ஏற்கெனவே 80 சதவிகிதமும், 20 சதவிகிதமும் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். அந்த நிதிநிலையும் விலைவாசியை ஒட்டி, கணக்குப் பார்க்கிற போது ஏறத்தாழ ரூ. 32 ஆயிரம், 34 ஆயிரம் என்று இரண்டு இலக்கில் தற்போது வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் அவர்கள் ஏற்கெனவே தந்த கணக்குப்படி பார்த்தால், மேல்கூரைக்காக் தமிழ்நாடு அரசாங்கத்தால், அதிலும் தலைவர் கலைஞருடைய அரசு வருகிறபோதுதான் அந்த நிலையும் நீடிக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கொடுக்கப்படுகிற பணம் தனியாகவும், அவர்களுக்கு எனத் தனியாக 20% கொடுக்கப்படுகிறபோது, ஏறத்தாழ தமிழ்நாடு அரசாங்கம் பாதி, மத்திய அரசு பாதி என்ற நிலை இப்பொழுது வந்திருக்கிறது. இதிலே வீட்டைக் கட்டிக் கொடுத்துவிட்டால் அதைப் பாதுகாக்கிற பொறுப்புகூட அவர்களுக்கு இல்லாமல் போவது சரியல்ல என்று நீங்களெல்லாம் அவர்களுக்குச் சற்று ஆலோசனை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை இலட்சக்கணக்கில் வளர்ந்து கொண்டு வருகிறது. ஆனால் மத்திய அரசின் அனுமதி நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது. எவ்வளவுதான் இதில் மாநில அரசு தலையிட்டு செய்ய முடியும் என்பதை ஆராய்ந்து பார்த்து நீங்கள் சிந்திக்க வேண்டும். இன்னும் ஒரு படி மேலே போய் பார்க்கிறபோது, இந்தப் பழுதுபட்ட வீடுகளின் நிலையைப் பார்க்கின்ற நேரத்தில் எனக்கு மிகவும் மன வேதனையாக இருக்கிறது. 10 ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்று சட்டமன்ற உறுப்பினர் கேட்கிறார் என்றால், அந்த 10 ஆயிரம் ரூபாயில் அந்தப் பணியை செய்யமுடியுமா என்பது ஒன்று, 10 ஆயிரம் ரூபாய் தேவைதானா என்றுகூட பட்டியல் எனக்கு வந்துகொண்டிருக்கிறது. 5 ஆயிரம் ரூபாய் கொடுப்போம், 10 ஆயிரம் ரூபாய் கொடுப்போம் என்று சொன்னால் உள்ளபடியே அவை முறையாக செலவழிக்கப்படுவதில்லை. சென்ற ஆண்டில் என்னுடைய அனுபவம், அது முறையாக செலவழிக்கப்படவில்லை என்பதை நாம் பகிரங்கமாக ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்வாறு ஏற்படாமல் தடுத்து, சட்டப்படியாக அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பும் இந்த அரசுக்கு முழுமையாக இல்லை.

இதில் ஜனநாயக ரீதியில் எடுத்துக்கொள்கின்ற அதிகாரப் பரவல் உள்ளடங்கிவிட்டது. இதை தயவுசெய்து நீங்கள் எல்லாம் உணரவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு concrete கூரைகள் போட்ட வீடுகளைக் கட்டிகொடுக்க உத்தரவு போட்டார்கள். ஆனால் கிராமங்களில் இருக்கும் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் concrete கூரை பழுதுபட்டுவிட்டால் முழுமையாக வீடே போய்விடுகிறது. ஆகவே, ஓடாக இருந்தால், ஓடு உடைந்துவிட்டால் நாங்களேகூட மாற்றிக்கொள்வோம் என்ற ஒரு கோரிக்கையை எல்லா கிராமங்களிலும் வைக்கிறார்கள். ஆகவே, இந்த concrete கூரையை மாற்றி ஓடுகள் போட மறுபரிசிலனை செய்து அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு முறை இதுமாதிரி செய்யப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்கள் முதல் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு அதைப் பரிசிலித்து இது கூடாது என்ற முடிவுக்கு வந்து, அப்போது அதற்கான ஓடுகள், மரங்கள் எல்லாம் வாங்கி சேமித்து வைத்திருந்ததையும் பயன்படுத்தாமல் நிறுத்தி வைத்துவிட்டு, அதை வேறு எதற்காவது உபயோகித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி, அதிகமான தொகையைச் செலவழித்து இந்த concrete வீடுகளைக் கட்டினார்கள். அதனால்தான் அவை 15 வருடங்களாவது இருக்கின்றன. ஆனால் இந்த ஓட்டு வீடுகள் என்பது 3 வருடங்கள்கூட தாங்காது, உண்மையான மரம் போடமாட்டார்கள், சரியான ஓடு வைக்க மாட்டார்கள். இப்படிப் பல சங்கடங்களை தினசரி அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நிச்சயமாக இந்த அரசு அதை மாற்றாது, மாற்றக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 வருடங்களுக்கு, 20 வருடங்களுக்கு முன்பு கட்டிய தொகுப்பு வீடுகளில் பெரும்பாலானவை இப்போது பயன்படுத்த



முடியாத நிலையில் இருக்கின்றன. பல வீடுகள் இடிந்த நிலையிலும், பல வீடுகள் முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையிலும் இருக்கின்றன. எனவே, ஒட்டுமொத்தமாகப் பயன்படுத்த முடியாமல் இருக்கின்ற வீடுகளுக்குப் பதிலாக புது வீடுகளும், ஓரளவுக்குப் பயன்படுத்தக்கூடிய வீடுகளை முழுமையாகச் சீரமைப்பதற்கும் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து சீரமைத்துக் கொடுத்தால்தான் அவர்கள் அங்கே குடியிருக்க முடியும். ஏனென்றால் concrete வீடுகளில் மழைக் காலங்களில் மக்கள் குடியே இருக்க முடியாத அளவுக்கு ஒழுகிக் கொண்டிருக்கின்றன. பெரும்பாலான இடங்களில் கூரைகள் விழுந்து போய்விட்டன. எனவே, அவற்றையெல்லாம் சீர்செய்வதற்கும், சீரமைப்பதற்கும், தமிழ்நாடு முழுவதற்கும் ஒட்டுமொத்தமாக இதற்காக நிதி ஒதுக்கீடு செய்ய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 71 ஆயிரம் வீடுகள் கட்ட ஆரம்பித்து, இப்போது 41 ஆயிரம் வீடுகள் என்ற நிலைக்கு வந்திருக்கிறோம். மத்திய அரசு நிதியைக் குறைத்தது மட்டுமல்ல, இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் இதற்காக எவ்வளவு செலவானாலும், மத்திய அரசு தருகின்ற தொகையோடு சேர்த்துக் கொடுத்து அந்த வீடுகளைக் கட்ட முயற்சிக்கலாம் என்றுதான் முதல்வர் அவர்கள் விரும்புகிறார்கள், ஆனால் இதற்கு நிதி குறைந்துவிட்டது, வீட்டின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. ஆனால் வீட்டினுடைய தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது. இதுவரையில் சாதாரண குடிசை வீட்டைத் தவிர வேறு எதையும் பார்த்திராதவனுக்கு இந்த வீட்டையாவது கொடுக்கலாம் என்ற அடிப்படையில் ஒரு எண்ணம் இருக்கிறது. இன்னொன்று, இருந்தவர்களால் பழுது பார்க்க முடியாத காரணத்தாலும், பழுது பார்க்காமல் இருந்த காரணத்தாலும் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. முடியாது என்று சொல்வதற்கு நிச்சயமாக எங்களுக்கு மனம் இல்லை. யாரோ கட்டுகிறார்கள், யாரோ போகிறார்கள், அவர்கள் கட்டிக்கொடுப்பார்கள் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் 'எதை எதையோ யோசனையாகச் சொல்லிக் கொடுப்பவர்' – இது உங்களுக்காகக் கட்டப்பட்ட வீடு, இது உங்களுக்குச் சொந்த வீடு, இதைப் பாதுகாக்க வேண்டும், பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவுரை சொன்னால் அது கொஞ்சம் நாட்டுக்கு நலமாக இருக்கும். வேறு காரணங்களைக்

[1999 ஏப்ரல் 9

கூறுவதைக் குறைத்துக்கொண்டு இந்த முயற்சியிலே ஈடுபடவேண்டுமென்று பணிவோடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 324, திரு. சீ.வெ. கிருஷ்ணன் மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

*முற்பகல் 9-45*

**324—**

**உரம், யூரியாவிற்கு மானிய விலை**

***17644—திரு. சீ.வெ. கிருஷ்ணன் :**

**திரு. ஐ. கணேசன் :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயன்படுத்தும் உரம், யூரியா ஆகியவற்றைக் கூட்டுறவு மூலம் மானிய விலையில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

யூரியா கூட்டுறவு மூலம் மானிய விலையில் கிடைக்க தற்போது அரசின் செயலாக்கத்தில் திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விவசாயிகள் பயன்படுத்தி வருகிற யூரியா உரத்திற்கு மத்திய அரசு எவ்வளவு மானியம் தருகிறது? மாநில அரசு எவ்வளவு மானியம் தருகிறது? கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நம்முடைய விவசாயிகளுக்கு மானிய விலையிலே வழங்கப்படுமா என்று அமைச்சர் அவர்களின் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூரியா உரத்திற்கு உர மானியத்தினை மத்திய அரசு அந்தந்த நிறுவனத்தின் உற்பத்திச் செலவிற்கேற்ப நேரடியாக வழங்குகிறது. உரம் வாங்கிப் பயன்படுத்தக் கூடியவர்களுக்கு அந்த மானியம் தற்போது பயன்படக்கூடிய நிலையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். டி.ஏ.பி. உள்ளூர் உரத்திற்கு



1999 ஏப்ரல் 9]

ஒரு டன்னிற்கு ரூ.4,400 மானியம் வழங்கப்படுகிறது. டி.ஏ.பி. இறக்குமதி உரத்திற்கு ஒரு டன்னிற்கு ரூ. 3,400 வழங்கப்படுகிறது. பொட்டாஷ் உரத்திற்கு ஒரு டன்னிற்கு ரூ. 3,000 மானியமாக வழங்கப்படுகிறது. சூப்பர் பாஸ்பேட் உரத்திற்கு ஒரு டன்னிற்கு ரூ.900 வழங்கப்படுகிறது. 17:17:17 உரத்திற்கு ரூ.3,189 வழங்கப்படுகிறது. 15:15:15-க்கு ஒரு டன்னிற்கு ரூ.2,814 வழங்கப்படுகிறது. 10:26:26-க்கு ரூ.3,777 வழங்கப்படுகிறது. 14:28:14-க்கு ரூ.3,590 வழங்கப்படுகிறது. 16:20:0-க்கு ரூ.2,477 வழங்கப்படுகிறது. 20:20:10 உரத்திற்கு ரூ.2,572 வழங்கப்படுகிறது. இந்த அடிப்படையிலே ஒரு டன்னிற்கு மத்திய அரசு, உற்பத்தி நிறுவனத்திற்கு மானியமாக வழங்குகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், மத்திய அரசு ஒரு டன்னிற்கு எவ்வளவு மானியம் வழங்குகிறது என்று படித்தார்கள். மாநில அரசு எவ்வளவு மானியம் வழங்குகிறது? குறிப்பாக, இப்போது விவசாயிகளுக்கு முட்டுவளிச் செலவு மிக அதிகமாக ஆவதால், விளைபொருட்களுக்குச் சரியான விலை கிடைக்காமல், விவசாயிகள் நாளுக்குநாள் மிகக் கீழ்த்தரமாகத் தங்களுடைய வருமானத்தை இழந்து கூலி வேலைக்குக்கூடச் செல்லமுடியாத அவல நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசு உணருமா? விவசாயிகளுக்கு, ஓரளவிற்கு நுகர்வோருக்கு மானியம் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 16,872 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதிலே, 11,119 தனியார் கடைகளும், 5,753 கூட்டுறவு விற்பனை நிலையங்களும் அடங்கும். மாநில அரசாங்கம் மானியம் கொடுப்பதில்லை. மத்திய அரசாங்கம்தான், இறக்குமதி அல்லது உள்ளூர், அதாவது நம்முடைய நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய உரத்திற்கு ஒரு டன்னிற்கு இவ்வளவு மானியம் என்று வழங்குகிறது. மாநில அரசாங்கம் அந்த விலையின் அடிப்படையிலே குறைத்து, விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்ற அந்தக் கொள்கையைத்தான் எடுக்கிறது.

*முற்பகல் 9-50*

கடந்த ஆண்டு மத்திய அரசாங்கம் உர விலையை அல்லது மானியத்தை, ஆலைகளுக்கு அல்லது உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்தவிட்டு, 50 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு அல்லது ஒரு

டன்னுக்கு உண்டான விலையை உற்பத்தியாளர்களே நிர்ணயம் செய்துகொள்ளலாம் என்று ஒரு கொள்கை முடிவெடுத்து அறிவித்தது. உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு உற்பத்தியாளர்களே விலையை நிர்ணயம் செய்தால் அவர்கள் கூடுதலாகத்தான் நிர்ணயிப்பார்கள். அந்தச் சுமை விவசாயிகளுடைய தலையிலே போய் விழும். ஆகவே, அந்த விலையை மானியம் வழங்குகிறபோது இந்த விலைக்குத்தான் விற்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம்தான் முடிவு செய்யவேண்டுமே தவிர, உற்பத்தியாளர்களே முடிவு செய்துகொள்ளலாம் என்பது சரியல்ல என்று மாநில அரசாங்கத்தின் சார்பில் எடுத்துச் சொன்ன காரணத்தினால் மீண்டும் பரிசீலித்து மத்திய அரசாங்கம் ஒவ்வொரு உரத்திற்கும் விலையை நிர்ணயம் செய்திருக்கிறது.

நம்முடைய மாநில அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் 1997-லேயே நிதிநிலை அறிக்கையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விற்பனை வரியை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைத்து விவசாயிகள் பயனடையக்கூடிய வகையிலே ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, அந்த அளவுக்குத்தான் செய்ய முடிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்குப் பயன்படுத்த, விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற வேளாண்மைக் கருவிகள் மார்ச் மாதத்தில் வழங்கப்படுகின்றன. அதை ஆண்டு முழுவதும் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எல்லாவிதமான உரமும் அரசாங்கத்திலே கையிருப்பிலே இருக்கிறது. அதில் எந்தத் தட்டுப்பாடும் இல்லை. எப்போது வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்திய அரசு கொடுக்கக்கூடிய மானியம்கூட உர கம்பெனிகளுக்குச் சென்றுவிடுகின்ற காரணத்தினாலே விவசாயிகள்



அதன் பலனைப் பெறமுடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் - ஏற்கெனவே நம் தமிழகத்தில் இருக்கக்கூடிய நகராட்சிகள் அனைத்திலும் வரக்கூடிய மனிதக் கழிவுகள் போன்றவற்றை எல்லாம் வைத்து உரக் கிடங்கு என்று வைத்திருக்கிறோம். அவற்றை எல்லாம் யாருமே பயன்படுத்த முடியாமல் ஆங்காங்கே வீணாகிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட மனிதக் கழிவு போன்றவற்றையெல்லாம் சேர்த்து ஒரு தொழிற்சாலையையே நம்முடைய அரசு உருவாக்கி, மானிய விலையிலே நீங்கள் அதுபோன்ற உரங்களைத் தயார்செய்து விவசாயிகளுக்குக் கொடுத்தால்தான் நீங்கள் century-யே அடிக்கமுடியும். ஆகவே அப்படி அடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதல்வரோடு கலந்து ஆலோசித்து நகராட்சிகளிடமுள்ள அத்தனை கழிவுகளையும் ஒன்றாகச் சேர்த்து பெரிய உரத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருவார்க்ளா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியிலோ அல்லது மாநகராட்சியிலோ உள்ள மனிதக் கழிவுகளைக் கொண்டு அதுபோன்ற உரத் தொழிற்சாலை அமைக்க இயலாது. ஏனென்றால் குப்பையிலிருந்து சில உரங்களை நாம் தயாரிக்கலாம். அதற்கு அந்தந்த நகராட்சியோ அல்லது வேளாண்மைத் துறை மூலம் தாய் நிறுவனமோ ஈடுபட்டால் மாநில அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலிக்கலாம். தற்போது அதுபோன்ற நிலை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயத் துறையில் கொடுக்கிற மானியங்கள் விவசாயிகளுக்குச் சென்றடைவதில்லை என்கிற குறை இருக்கிறது. உதாரணமாக மண்வெட்டி, கடப்பாரை, நீர்த் தெளிப்பான், சொட்டுநீர்ப் பாசனம் இவற்றிற்காக மானியங்கள் வழங்கப்படுகின்றது, ஆனால் வெளிச்சந்தையிலே சென்று வாங்குகிறபோது, மானியத்தோடு விவசாயத் துறையிலே கொடுப்பதைவிட குறைவான விலைக்குக் கிடைக்கிறது; தரமான பொருளாகவும் கிடைக்கிறது. உதாரணமாக, அமைச்சரிடம்

[1999 ஏப்ரல் 9

நானே வந்து எனக்கு சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் தேவையென்று சொன்னேன். உடனடியாக எனக்கு அதை அவர்கள் வழங்கினார்கள். ஆனால் சந்தையில் சென்று கேட்கின்றபோது அரசாங்கம் கொடுப்பதைவிட குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். பினோலக்ஸ் குழாய் தருகிறார்கள். தரமான குழாய் தருகிறார்கள். எனவே, விவசாயத் துறை வெளிச்சந்தையிலே கொடுப்பதைவிட குறைந்த விலைக்கு கொடுப்பதற்கு மானியத்தோடு கூடிய அந்த உதவியை விவசாயிகள் பெறுவதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உரத்தைப் பற்றிய கேள்வி. சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்புநீர்ப்பாசனம், அதேபோல் உழவர்களுக்கு அல்லது விவசாயத் தொழிலாளர்களுக்கு, மண்வெட்டி, கடப்பாரை போன்ற கருவிகளை எல்லாம், இந்த அரசு, 1996-லே மீண்டும் நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்ற பிறகு, முறையாக வழங்கி வருகிறது. கடந்த காலத்திலே இருந்ததைப்போல இப்போதும் இருப்பதாக யாரும் கருதவேண்டியதில்லை. அப்படி எந்தத் தவறும் இப்போது இல்லை. அப்படிப்பட்ட புகாரும் வரவில்லை. இன்னும் சொல்லப்போனால், ஒட்டுமொத்தமாக, கடந்த ஆட்சிக் காலத்திலே கடப்பாரை, மண்வெட்டி, ஒருவழிக் கலப்பை, இருவழிக் கலப்பை போன்ற கருவிகள் எல்லாம் வாங்கி, அதிலேயும் சிலபேர் Commission பெற்றிருக்கிறார்கள். பிறகு அவை Depotகள் அல்லது அந்தந்த மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவை விநியோகிக்கப்படாமல், இன்னும் சில மாவட்டங்களில் அப்படியே இருக்கின்றன. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, சேலம் மாவட்டத்திலே, மண்வெட்டி, கடப்பாரை, கொந்தலம் போன்ற கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். தஞ்சாவூரிலே, மண்வெட்டி கருவிகளைப் பயன்படுத்துவது ஒருவகையாக இருக்கலாம். கடலூர் மாவட்டத்திலே ஒரு மாதிரியாக இருக்கலாம். ஆகையால், எந்தெந்த மாவட்டத்திலே விவசாயிகள் எந்தெந்தக் கருவிகளைப் பயன்படுத்துகிறார்களோ, அவற்றை வாங்கி அந்தப் பகுதி விவசாயிகளுக்கு அல்லது விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டு, அவை வாங்கித் தரப்படுகின்றன. உரிய முறையிலே, சம்பந்தப்பட்டவர்கள் பெற்று பயனடைந்துதான் வருகிறார்கள்.



1999 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 325, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**325—**

## நகரப் பேருந்து இயக்குதல்

***6307—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூரிலிருந்து ஊர்க்குடி, தக்கண்டராயபுரம், தென்சேந்தமங்கலம் வழியாக வந்தவாசிக்கு புதிய தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில், 1-4-1998 முதல் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கோரிக்கை வைத்த அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்கியமைக்காக, அந்தப் பகுதிவாழ் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்தப் பேருந்து பெரணமல்லூரிலிருந்து காலை 5 மணிக்குப் புறப்பட்டு, பகலிலே ஒருவேளைதான் வருகிறது. மறுபடியும் 8 மணிக்குத்தான் பெரணமல்லூரிலிருந்து திரும்புகிறது. பகலிலே அந்தப் பேருந்தைப் பார்க்க முடியவில்லை என்று அந்தப் பகுதிவாழ் மக்கள் கூறுகிறார்கள். எனவே, கூடுதலாக அந்தப் பகுதியிலே பகலிலே ஒரு முறை பேருந்து விடவேண்டும். அதேநேரத்தில் அந்தப் பேருந்து பழையதாக இருக்கிறது என்று அந்தப் பகுதிவாழ் மக்கள் மற்றும் ஓட்டுநர்கள் கூறுகிறார்கள்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி இளமையோடும் அழகோடும் காட்சி தருகிறார்களோ (சிரிப்பு) அதேபோல், அந்தப் பேருந்தையும் புதிய பேருந்தாக மாற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றி. (சிரிப்பு) பொதுவாக,

[1999 ஏப்ரல் 9

உறுப்பினர்கள் அனைவரும் ஒரு வழித் தடத்தில் பேருந்தை விட்டால் போதும் என்றுதான் முதலில் கோரிக்கை வைக்கிறார்கள். வைத்த பிறகு, கூடுதல் பேருந்து இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். கூடுதல் பேருந்து வந்த பிறகு, புதிய பேருந்தாக அதை விடவேண்டுமென்று கேட்கிறார்கள். அது இயற்கையாக நடந்து கொண்டிருக்கிறது. தேவைகள் வளர்ந்து கொண்டுதான் இருக்கும். அதை நான் குறைகூறத் தயாராக இல்லை. ஆனால், நேற்றே நான் சொல்லியிருப்பதைப் போல, போக்குவரத்திலே இருக்கிற நிதிநிலைமையைப் பொறுத்து, வருகிற காலங்களில், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 326, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**326—**

### அச்சரப்பாக்கத்தில் பேருந்துப் பணிமனை

*** 21963—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதியில் பேருந்துப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 327, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 9]

**327—**

### கொசத்தலை ஆற்றுப் பாலம்

***11256—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி பகுதியில், நாபாளையம் அருகில் கொசத்தலை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு, சுமார் 15 ஆண்டுகளாக முடிக்கப் பெறாத நிலையில் உள்ள பாலம் கட்டி முடிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்மட்ட பால வேலைகள் முழுமையாக முடிக்கப்பட்டு, 2-1-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் போக்குவரத்திற்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 328, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**328—**

### சாலைகள் இணைப்பு

*** 24999—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம்-இரும்புலியூரிலிருந்து கோயம்பேடு செல்லும் ஆரச்சாலை, அனகாபுத்தூர் பகுதியைக் கடக்கும்போது அனகாபுத்தூர்-குன்றத்தூர் சாலையை ஆரச்சாலையோடு இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அமைக்கிற பணி குறித்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற நேரத்தில் கேள்வி எழுப்பப்பட்டு, தற்போது அமைக்கப்படுகிற ஆரச்சாலை எந்த இடத்திலே குறுக்கிடுகிறதோ, அங்கு பாலம் அமைக்கிற காரணத்தால், தற்போது தரைப் பாலத்தை, உயர்மட்டப் பாலமாக ஆக்குவதற்கு வழி இல்லை என்று சொல்லியிருந்தார்கள். இப்போது உயரப்படுத்துகிற அந்தப் பாலம் குறுக்கிடுகிற அந்த இடத்திற்கும், அனகாபுத்தூரிலிருந்து குன்றத்தூரை இணைக்கிற சாலைக்கும் கிட்டத்தட்ட 6 அடிக்குமேல் வித்தியாசம் வருகிற காரணத்தினால், அந்தப் பாலம் அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படாத நிலையில் இருக்கிறது. எந்த நோக்கத்திற்காக, இந்தத் தரைப்பாலம் உயர்த்தப்படாமல் இருந்ததோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் மீண்டும் மழைக் காலத்தில் அனகாபுத்தூர் துண்டிக்கப்பட்டுவிடும் காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்து, அந்தச் சாலையோடு இணைப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கேட்ட கேள்வியைப் போல அவர் எழுத்துமூலமாகத் தந்திருக்கிற அந்தக் கேள்வி விளக்கமாக இல்லை. தாம்பரம், இரும்புலியூரிலிருந்து கோயம்பேடு வரை செல்லும் ஆரச்சாலை என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அது அந்தச் சாலை இல்லை. தாம்பரம், இரும்புலியூரிலிருந்து செல்லக்கூடிய சென்னை புறவழிச் சாலையைத்தான் அவர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். சென்னை புறவழிச் சாலையும், இந்த அனகாபுத்தூர் - குன்றத்தூர் சாலையும் இணைகிற இடத்திலே அடையாறு இருக்கிறது. அங்கே புறவழிச் சாலை சார்பிலே ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்கப்படுகிறது. அதற்கு அருகிலேயே நம்முடைய ஆரச்சாலையிலே வருகிற பாலமும் வருகிறது. இரண்டு பாலங்களும் ஒன்றாக இணையக்கூடிய வகையிலே



இல்லாத காரணத்தினால், அந்தச் சாலைக்குக் கீழே, அதாவது புறவழிச் சாலைக்கு கீழே நம்முடைய சாலையைக் கொண்டு போவதற்காக, இந்த உயர்மட்டப் பாலத்தை மூழ்கு பாலமாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. எப்படியும் அனகாபுத்தூர்-குன்றத்தூர் சாலையில் பாலம் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற தரைப்பாலம் மழைக்காலம் வந்தால் குன்றத்தூரையும் அனகாபுத்தூரையும் இணைக்க முடியாமல் ஒரு தீவாக, கிட்டத்தட்ட ஒரு மாத காலம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கற அந்தப் பாலம் என்பது இப்போது இருக்கிற தரைப் பாலத்தை உயர்த்தி அமைக்கப்பட இருக்கிறதா அல்லது புறவழிச்சாலை செல்வதற்காக அமைக்கப்படுகிற பாலத்தோடு இணைக்கப்பட்டு அமைக்கப்பட இருக்கிறதா அல்லது வேறு இடம் மாற்றி அமைக்கப்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரைப்பாலம் என்பது இப்போது இருப்பது. உயர்மட்டப் பாலம் மிக அதிக உயரம் இருப்பது. இரண்டுக்கும் இடையில் submersible bridge என்று சொல்லக்கூடிய மூழ்கு பாலம் அமைக்கப்படவிருக்கிறது. இந்தப் பாலம் அமைக்கப்பட்ட பிறகு குன்றத்தூர்-அனகாபுத்தூர் சாலையில் போக்குவரத்துக்கு எந்த இடைஞ்சலும் இருக்காது. அந்தப் புறவழிச் சாலை மேலே செல்லும், இந்தச் சாலை அதற்குக் கீழே செல்லும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக திருவாரூர் மாவட்டத்திலே நிறைவேற்றுகிற பணிகளிலே குறிப்பாக, தென்பரை கிராமத்தில் கட்டப்பட்டு வரும் பாலங்கள் பாதியிலே நிறுத்தப்பட்டு விட்டது. தண்ணீர் திறந்துவிடப்பட்டு பாசன வசதிகளைப் பெறுவதற்கு முன்னாலே அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்குரிய அறிவிப்பை அல்லது அந்தப் பணிகளைத் தொடங்குவதற்காக அமைச்சர் அவர்கள் தனிக்கவனத்தைச் செலுத்தி நடவடிக்கையினை மேற்கொள்ளுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையது

[1999 ஏப்ரல் 9

இல்லையென்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆதங்கத்தை நான் புரிந்துகொள்கிறேன். வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல பணிகள் தமிழ்நாட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அந்தப் பணிகளில் பல முடிந்திருக்கின்றன; பல முடியாமல் இடையிலே நிற்கின்றன. இருந்தாலும், வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உலக வங்கியிலிருந்து நாம் பெற்ற கடன் முடிந்துவிட்டது. இனிஅதற்கு அனுமதியில்லை. என்றாலும் இடையிலே விடுபட்டிருக்கின்ற, அந்தப் பணிகளை முடிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். தமிழக அரசின் நிதியைக் கொண்டு, அந்தப் பணிகள் எல்லாம் முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றி ஆரச்சாலை அமைப்பது என்பது நெரிசலுக்கு நிச்சயமாக ஒரு சுவாச வழியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலே சாலைகளை இரப்பர் சாலைகளாக அமைக்கிறார்கள். இந்த ஆரச் சாலையை ஒரு சோதனை முயற்சியாக இரப்பர் சாலையாக அமைக்கும் திட்டம் அரசிடம் இருக்கின்றதா ? ஏற்கெனவே இரப்பர் சாலை அமைப்பதற்கு எங்கேயாவது பரீட்சார்த்தமாக முயற்சி செய்யப்பட்டுள்ளதா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியும் மூலக்கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி. இருந்தாலும், நம்முடைய தமிழ்நாடு அரசு வன இலாகாவுக்கு மத்திய அமைச்சரவையிலே இருக்கக்கூடிய மத்திய அமைச்சர் திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இரப்பர் விலை குறைந்திருப்பதைப் பயன்படுத்தி, இப்படிப்பட்ட இரப்பர் சாலையைப் போடுவதற்கான முயற்சி குறித்து நெடுஞ்சாலைத் துறையினுடைய ஆராய்ச்சி நிலையத்தில், ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வு முடிந்த பிறகு எந்த அளவிற்குப் பலன் நமக்குக் கிடைக்கும் என்பது குறித்தும், அதிலே ஏற்படக்கூடிய மதிப்பீடு எந்த அளவிற்கு உயரும் அல்லது குறையும் என்பது குறித்தும் ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்று, அதனைப் பயன்படுத்த முயற்சிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 329, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 9]

முற்பகல் 10-00

**329—**

### கோயில் புனரமைப்பு நிதி

***3167—திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆட்சியில் தமிழ்நாட்டில் கோயில் புனரமைப்பு நிதி என்ற பெயரில் பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அத்தொகை செலவழிக்கப்பட்டதற்கான கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டனவா?

முற்பகல் 10-05

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2-8-1991 அன்று உருவாக்கப்பட்ட இந்நிதி தற்போது 'திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப் பணிகள் நிதி' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிதிக்கு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், அரசுப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த நன்கொடை ரூ.5.95 கோடிகளாகும். இந்நன்கொடைத் தொகை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் அரசு நிதி நிறுவனங்களில் பல்வேறு வகையான முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.4,00,15,242 வட்டி பெறப்பட்டது. ஆகையால் நிதியில் இப்போது மொத்த வரவு ரூ.9,95,15,242 ஆகும். இந்நிதியிலிருந்து இதுவரையில் ரூ.5,74,64,290 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.30,19,335 பயன்படுத்தப்படாமல் திருப்பி அரசு கணக்கிற்கு வரப்பெற்றுள்ளது. இந்நிதியின் கணக்குகள் ஆண்டுதோறும், பட்டயக் கணக்கரால் தணிக்கை செய்யப்பட்டு, வருமான வரித் துறைக்கு தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. கடைசியாக 1998-99 ஆம் ஆண்டிற்கு சில கணக்குகள் வருமான வரித் துறைக்கு 30-10-1998 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

[1999 ஏப்ரல் 9

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பள்ளிக்கூடங்கள், நூலகங்கள் போன்றவற்றிற்க்கு நிதி கொடுப்பவர்களைப் புரவலர்களாக நியமிக்கிறது அரசு. அதேபோல் கோயில்களுக்கு நிதி தருபவர்களை புரவலர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா? போளூர் தொகுதியில் டி.வி.எஸ். சுசுகி கம்பெனியைச் சார்ந்த வேணு சீனிவாசன் அவர்கள் 1 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து ரேணுகாம்பாள் திருக்கோயிலைச் செப்பனிட்டிருக்கிறார்கள். இப்படி அவர்களையும் புரவலர்களாகச் சேர்த்தால், தமிழகத்தில் இருக்கின்ற திருக்கோயில்களில் எல்லாம் திருப்பணி செய்ய ஏதுவாக இருக்கும் என்று கூறி, அரசு அதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே ஒரு கோயிலுக்குத் திருப்பணி மேற்கொள்ளப்படுகிறபோது, அரசு தருகிற நிதி ஒரு கணிசமான தொகையாகவும், நன்கொடையாளர்கள் என்று சொல்லப்படுகிற உபயதாரர்கள் தருகிற நிதி பெருமளவிற்கும் இருப்பதுதான் மரபு. அந்த அடிப்படையிலே எந்தெந்த நன்கொடையாளர்கள் நிதி தருகிறார்களோ அவர்களுடைய பெயர்களெல்லாம், திருப்பணி எந்தக் கோயிலில் செய்யப்படுகிறதோ அந்தக் கோயிலில் பொறிக்கப்படுகின்றன. அந்த அளவிற்கு அவர்கள் புரவலர்களாகப் போற்றப்படுகின்றனர். மற்றபடி அவர்களை வேறு கோயிலுக்குப் புரவலர்களாக அறிவிக்க முடியாது. அதற்கென்று ஒரு திட்டமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 330, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**330—**

### கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு வீடு

***4624—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1999 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூரில் கல்லுடைக்கும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் கல் உடைக்கக் கூடிய தொழிலாளர்கள் ஏராளமாக மலையடிவாரத்திலே வாழ்ந்து கொண்டு, அவர்கள் எல்லாம் குடிசைகளிலே அதுவும் ஆண்டுக்கு ஒரு குடிசை என்று, சில நேரங்களில் அந்தப் பாறை தீர்ந்துவிடுமானால், இன்னொரு பாறைக்கு அவர்கள் போகிறபோது குடிசைகளையெல்லாம் மாற்றிக்கொண்டு போகவேண்டிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு மிகவும் கீழே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இதுபோன்ற தொழிலாளர்களுடைய நலனைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தோடாவது பேசி, அவர்களுக்கெல்லாம் வீடு கட்டிக்கொடுக்க ஆவன செய்வாரா? வேலூரில் மட்டும் அல்ல, தமிழகத்தில் கிட்டத்தட்ட 30 இலட்சம் தொழிலாளர்கள் இத்தகைய தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படி வேலூரில் மட்டும் அல்லாமல் தமிழகத்தில் எங்கெல்லாம் கல் உடைக்கும் தொழிலாளர்கள் இருக்கின்றார்களோ, அவர்களுடைய வறுமை நிலையைக் கருத்தில் கொண்டு, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் கருத்துருவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனியாவது உருவாக்கி, வருங்காலத்தில் அதைச் செய்வதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல் உடைக்கும் தொழிலாளர்களின் கஷ்டங்கள் குறித்து கழக அரசு என்றும் கவனத்திலே வைத்திருக்கிறது. குறைந்தபட்ச ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்தப் பட்டியலில் அவர்கள் இணைக்கப்பட்டு, அதற்கான வழிமுறை செய்து வருகிறோம். பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம் இப்போது நடைமுறையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற யோசனையை அரசு கவனத்தில் கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 331, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

331— [1999 ஏப்ரல் 9

## பட்டுநூல் வழங்குதல்

***20858—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கைத்தறித் துறையின்கீழ் இயங்கி வரும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பட்டுநூல் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் கைத்தறித் துறையின்கீழ் 100 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஓர் ஆண்டுக்குத் தேவைப்படும் சுமார் 3.00 இலட்சம் கிலோ பட்டுநூல், அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனங்களான டான்சில்க் மற்றும் அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-10

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறைகளில் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்கு கவர்ச்சியான முறையிலே புதிய டிசைன்களில் பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறார்கள். அதேபோன்று நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக தரமான பட்டு நூல்கள் வழங்குவதன் மூலமாக, அதே நேரத்தில் பெண்களைக் கவரக்கூடிய அளவிற்கு காலத்திற்கேற்றவாறு புதிய வடிவங்கள் அமைத்து பட்டுச் சேலைகள் தயார்செய்து தமிழ் மாநிலம், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாக பொருளாதார வளர்ச்சி ஏற்படும். அந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்தப் பட்டு நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரமும் உயரமுடியும். எனவே, அதற்கான முன்னுரிமை அளித்து, இதுபோன்ற வசதிகளை அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் செய்துதர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூட்டுறவுச்



1999 ஏப்ரல் 9]

சங்கங்களுக்கு பட்டு நூல் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியைத்தான் எழுப்பினார்கள். ஆனால், இப்போது அவர் கேட்டிருக்கின்ற கேள்வியில் தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டுச் சேலைகள் தரம் இல்லாததைப் போலவும், தனியார் துறையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சேலைகள் தரம் உள்ளதைப் போலவும் ஒரு கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கும் இந்த அவைக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு ஆண்டு காலத்தில் தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டுச் சேலைகள் எந்தெந்த கடைகளில் இருக்கின்றனவோ, அந்தக் கடைகளில்தான் மற்ற பொருட்களும் விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் தனியார் விற்பனை நிலையங்களில் சங்கத்தினுடைய பட்டுச் சேலைகள் இருந்தால்தான் விற்பனை செய்ய இயலும் என்ற அடிப்படையில் பலபேர் இன்று தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் சேலைகளுக்குத்தான் agency கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல தனியார் பட்டு உற்பத்தியாளர் சங்கங்களிலேயிருந்து வந்த நெசவாளர்கள் இந்த ஆண்டு மேலும் கூட்டுறவுச் சங்கங்களிலே இணைவதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதும், அதையொட்டி கைத்தறித் துறை தேவையானவர்களை மீண்டும் கூட்டுறவுச் சங்கங்களிலே இணைத்து, அவர்களுக்கு உற்பத்தித் திட்டம் கொடுத்திருப்பதும் இந்த ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதையொட்டிய விவரத்தை வர இருக்கின்ற மானியக் கோரிக்கையின்போது தெளிவாகத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

**திரு ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உற்பத்திச் செய்யப்படும் பட்டு, சீதோஷ்ண நிலையின் காரணமாகத் தரத்தில் சுமாராகத்தான் உள்ளது. எனவே பட்டு கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான தரமான கச்சாப் பட்டு கர்நாடக மாநில Silk Board மூலம் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படுமா? மேலும் சீனா போன்ற நாடுகளிலிருந்து பிளேச்சர் பட்டினை அரசே கொள்முதல் செய்து கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 9

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு வளர்ச்சித் துறை கைத்தறித் துறையோடு இணைந்து இல்லாமல் வேறு அமைப்போடு இணைந்திருக்கிறது. இருந்தாலும் தமிழகத்திலே பட்டு வளர்ச்சி (Sericulture farming) சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காக நாம் அண்ணா பட்டு பரிமாற்றகம் என்ற திட்ட அடிப்படையிலே தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டைப் பொது ஏலத்தில் அனுமதித்தும், அதேபோல் TANSILK என்ற நிறுவனத்தின் மூலம் மற்ற சங்கங்களுக்கு அளித்தும் சிறப்பாக நல்ல முறையிலே தரமான பட்டு இப்போது கொடுக்கப்படுகிறது. தேவைப்படுகின்ற பட்டை வெளி மாநிலங்களிலேயிருந்து, கர்நாடகத்திலேயிருந்து வாங்க வேண்டியிருந்தாலும் அதுவும் முறையாக TANSILK மூலமோ பட்டு பரிமாற்றக நிலையத்தின் மூலமோ பெற்றுதான் தமிழகத்திலே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 332, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

332—

**அன்றில் பறவை இனம்**

***18888—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அழிந்து வரும் அன்றில் பறவையினத்தைக் காப்பாற்ற அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை ?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அன்றில் பறவைகள் எவ்வித இடையூறுமின்றி, கூட்டம் கூட்டமாக போதிய எண்ணிக்கையில் வாழ்ந்து வருகிறன்றன. மேலும், இப்பறவைகள் வன உயிரினப் பாதுகாப்புச் சட்டப்படியும் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



1999 ஏப்ரல் 9]

முற்பகல் 10-15

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அன்றில் பறவையானது,

'ஒன்றில் காலை அன்றில் போல்
புலம்ப உறையும் புன்கண் வாழ்க்கை'

என்று நற்றிணையிலே தொடங்கி,

'அன்றில் பறவை இரட்டைக் கிளவி,
ஒன்றில் ஒன்றாய் வாழும் பிறவி,
பிரியாதே, விட்டுப் பிரியாதே'

என்று ஜீன்ஸ் படத்திலே கவியரசு வைரமுத்து காலம்வரை தொடர்ந்து சிறப்பாகப் பாடப்படக்கூடிய ஒரு பறவை. பாடல் பெற்ற ஸ்தலம் என்று சொல்வதைப்போல பாடல் பெற்ற பறவையினம் இந்த அன்றில். எங்களுடைய பகுதியிலே ஒரு காலத்திலே அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல கூட்டம் கூட்டமாக வாழ்ந்த இந்தப் பறவை, இப்பொழுது வேட்டையாடுதலின் காரணமாக முற்றிலுமாக அழியக்கூடிய நிலையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை Endangered Species என்ற இனத்திலே இணைத்து, அந்தப் பறவையினத்தைக் காப்பாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்று தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றில் என்ற பறவையினத்தைப் பற்றி தற்போதைய பறவைகள் பற்றிய அறிவியல் நூல்களில் டாக்டர் சலீம் அலி ஆய்வு உட்பட குறிப்புகள் ஏதும் இருப்பதாக அறிய இயலவில்லை. இருப்பினும், சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, நளவெண்பா ஆகிய நூல்களில், இந்த அன்றில் பறவைகளைப் பற்றிய சில செய்திகள் இருப்பதாக திரு. பி.எல். சாமி அவர்களால் எழுதப்பட்ட 'சங்க இலக்கியங்களில் புள்ளின விளக்கம்' என்ற சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழக வெளியீட்டின் வாயிலாக அறிய முடிகிறது. மேற்படி நூலாசிரியர் கொடுக்கும் பறவை பற்றிய விவரங்களை வைத்துப் பார்க்கும்போது, கொடுக்கப்பட்டுள்ள விளக்க உருவப்படத்திலும், அது வாழ்கின்ற சில சூழ்நிலைகளாகிய கடற்கரைக்கு அருகிலுமுள்ள சூழ்நிலைகளையும், உள்நாட்டு நீர்நிலைப் பகுதிகளையும், அது இரவில் இரை தேடிச்சென்று, 'குவாக்' 'குவாக்' என்று குரல் (சிரிப்பு) கொடுப்பதையும், நூலாசிரியர் கொடுத்துள்ள ஆங்கிலத் தலைப்பையும் வைத்து, இப்பறவையானது தற்போது 'வக்கா' -- 'குவாக்'

'குவாக்' என்ற பெயரிலிருந்து 'வக்கா' -- என்று பெயர் கொடுக்கிறார்கள். ஆங்கிலத்திலே Nighto Heron என்றும் Nighto Chorus என்றும் அந்தப் பறவையைக் குறிப்பதாகக் கொண்ட 'வக்கா' என்ற பறவையினத்தைப் பற்றிய விவரங்கள் பின் வருமாறு தெரிவிக்கப்படுகிறது:

இப்பறவையானது, கடற்கரை மற்றும் உள்நாட்டு நீர்நிலைப் பகுதிகளாகிய முத்துப்பேட்டை, பிச்சாவரம், வேடந்தாங்கல் ஆகிய பகுதிகளில் பெருமளவுக்குக் காணப்படுகிறது. இரவில் மட்டும் விழித்து, நத்தை, நண்டு, மீன், தவளை ஆகிய பிராணிகளை உணவாகக் கொண்டு, டிசம்பர் முதல் பிப்ரவரி வரை தென்னிந்தியாவிலும், ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை வட இந்தியாவிலும் தங்கி இன விருத்தி செய்து வருகிறது. அடர்ந்த மரங்களில் யாரும் எளிதில் காணமுடியாதபடி சிறுசிறு சுள்ளிகளைக் கொண்டு இலை கிளைகளுக்கிடையே மறைவான சூழ்நிலையில் கூடுகட்டி வாழ்கிறது. தற்போது இப்பறவையினங்கள் எவ்வித இடையூறும் இன்றி கூட்டம் கூட்டமாகப் பெரிய எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றன. மேலும், இப்பறவையினம், வன உயிரினப் பாதுகாப்புச் சட்டப்படியும் நன்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றில் பறவை எங்களுடைய பிச்சாவரம் பகுதியில் மிக அதிகமாக இருக்கிறது. அனிச்ச மலரும், அன்றில் பறவையும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அனிச்ச மலர் எப்படி நம்முடைய மூச்சுக்காற்றுப் பட்டாலே வாடிவிடுமோ, அதேபோல அன்றில் பறவையும் தன்னுடைய துணை இல்லாமல் வேறு ஏதாவது துணை நெருங்கி வந்தால் கீழே விழுந்து மரித்து விடும் என்று சொல்கிறார்கள். எனவே, அந்த அளவுக்கு மனித நேயத்தோடும், அன்போடும் இருக்கிற அன்றில் பறவைகளைப் பெருமளவில் காப்பாற்ற வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றில் என்றாலே அன்று இல் என்று அர்த்தம். தன்னுடைய துணை அன்று மாய்ந்துவிட்டால் அது இறந்துவிடுவதாகச் சொல்வார்கள். ஆகவேதான் அதனை அன்றில் பறவை என்று சொல்வார்கள். உண்மையோ, பொய்யோ தெரியாது. இருந்தாலும்கூட அன்றில் பறவையைப் பாதுகாக்க இந்த அரசு தீவிர முயற்சிகளை அன்றாடம் மேற்கொள்ளும் (சிரிப்பு).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 333, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

333—

**காமராசர் நினைவு மண்டபத்தைப் புதுப்பித்தல்**

***19988—திரு. டி. அமரமூர்த்தி :**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, கிண்டியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் நினைவு மண்டபத்தை நல்ல வகையில் புதுப்பித்துத்தர அரசு முயற்சி மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இந்த அவைக்கு அளிக்கிறேன்.

சென்னையில், கிண்டியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவகத்தின் முன்பு காமராஜரின் மார்பளவு திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 1997 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் திறந்து வைக்கப்பட்டது. அதுமட்டும் இன்றி, பெருந்தலைவர் காமராஜர் நினைவிடத்தில், நுழைவாயில் முகப்பு, நடைபாதை, கழிவு நீர்க் கால்வாய், 1732 சதுர மீட்டர் பரப்பளவில் பெரும் நீருற்று, மற்றும் மின் விளக்குகள் ரூபாய் 15 இலட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்டு, புதுப் பொலிவுடன் திகழ்கிறது.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மின் விளக்கு அமைத்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக மேடைகளிலே பேசும்போது தலைவர் காமராஜர் என்று பேசாமல் நமது முதல்வர் பெருந்தலைவர் என்றுதான் பேசுவார்கள். அதையெல்லாம் நாங்கள் அறிவோம். பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நினைவிடங்களுக்கு இணையாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய நினைவிடத்தையும் மேம்படுத்த இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 9
முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மறைந்தபோது அன்றைய முதலமைச்சராக இருந்த நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைப்பதற்காக காந்தி மண்டபம் அருகிலே ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்து மண்டபம் அமைக்கின்ற பணியை முழுமையாக நிறைவேற்றித் தந்தார்கள். அதேபோல, இடைப்பட்ட காலத்தில் கேட்பாரற்றுக் கிடந்த, கிண்டி அருகில் இருக்கிற அந்த காந்தி மணிமண்டபத்தை, மொத்தத்திலே 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு அந்த வளாகத்தைச் செம்மைப்படுத்துகிற அளவிற்குப் பல பணிகளை இப்போது நிறைவேற்றி சிறப்புச் சேர்த்திருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜருடைய மார்பளவுச் சிலையும் அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. தியாகராய நகரிலும், விருதுநகரிலும் இருக்கிற காமராஜருடைய நினைவில்லங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், குமரியிலே அவருடைய மணிமண்டபம் அமைக்கப்பட மத்திய அரசினுடைய சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறையினுடைய பாதுகாப்பு விதிகளில் தடை இருந்தாலும் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி அனுமதி வேண்டியிருக்கிறார்கள். அந்த அளவிற்குக் கலைஞர் அவர்கள்தான் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்குச் சிறப்புச் சேர்த்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிப்பதோடு, மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் பெருந்தலைவர் என்று அழைப்பதைப் போல நம்முடைய மாற்றுக்கட்சி நண்பர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களைப் பெரும் மரியாதையோடு பேரறிஞர் அண்ணா என்று அழைப்பார்களேயானால் அது பெருமைக்குரியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகிகளையும் அதேநேரத்தில் தேசியத் தலைவர்களையும் கௌரவித்துச் சிறப்பு சேர்க்கும் தமிழக அரசு கடந்த ஆண்டு தியாகிகளின் மணிமண்டபத்தையும் நினைவில்லங்களையும் புதுப்பிக்க எவ்வளவு தொகை செலவிட்டது என்பதுடன், என்னென்ன பணிகள் செய்யப்பட்டன, அதேபோல் கடந்த ஆண்டு இதே மன்றத்திலே அறிவிக்கப்பட்ட அதியமான் — ஔவை கோட்டத்தை விரைவில்



1999 ஏப்ரல் 9]

அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகிகளுக்கு கலைஞர் அவர்களுடைய அரசு என்ன செய்தது என்று ஒரு நாள் முழுவதும் சொல்லிக்கொண்டே போகலாம். அந்த அளவிற்குத் தியாகிகளுக்கு கலைஞர் அவர்களுடைய அரசு ஏராளமான மணிமண்டபங்களையும், நினைவுச் சின்னங்களையும் அமைத்ததோடு, ஓய்வூதியங்களை எல்லாம் வழங்கியதோடு அவர்களுக்குப் பெருமை சேர்க்கிற அளவிற்கு ஒவ்வொரு தலைவருக்கும் கட்சிப் பாகுபாடு இல்லாமல், மனமாச்சரியங்கள் இல்லாமல் பல்வேறு சிறப்பான செயல் திட்டங்களை உருவாக்கியிருப்பதும் வரலாற்றில் நிலையான இடத்தை அளித்திருப்பதும் நீங்கள் எல்லாம் அறிந்த ஒன்றுதான். மூலக்கேள்வி காமராஜர் நினைவிடத்தைப் பற்றியது. எனவே, வருகிற நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு விளக்கமான பதில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 334, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**334—**

**கால்நடை மருத்துவமனை**

***8713—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, அரசம்பட்டி மற்றும் பஞ்சப்பள்ளியில் புதிய கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு தற்சமயம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் தொகுதியிலே அரசம்பட்டி, பஞ்சப்பள்ளி இரண்டும் விவசாயிகள் நிறைந்த பகுதிகளாகும்.

[1999 ஏப்ரல் 9

நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே வெண்மைப் புரட்சி செய்ய வேண்டும் என்பதற்காகப் பால் உற்பத்தி செய்யக்கூடிய அளவிலே இப்போது அதிகமான அளவிலே ஆங்காங்கே வங்கிகள் மூலம் மாடுகள் வாங்கக் கடன் பெற்று மாடுகள் வளர்க்கப்படுகின்றன. இந்தக் காலகட்டத்திலே அரசம்பட்டியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், பஞ்சப்பள்ளியில் ஒரு கால்நடை மருத்துவமனையும் அமைக்க வேண்டும் என்று கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்திருக்கின்றோம். பஞ்சப்பள்ளியிலே கால்நடைகள் வளர்க்கப்பட்டு, அவற்றுக்கு நோய்நொடிகள் என்று சொன்னால் கிட்டத்தட்ட 10, 12 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்ற மாரணஹல்லிக்குத்தான் செல்ல வேண்டும். அதேபோல அரசம்பட்டியிலும் மருத்துவமனை இல்லாத காரணத்தாலே 10 கிலோமீட்டரில் இருக்கின்ற போச்சம்பள்ளி மருத்துவமனைக்குத்தான் மாடுகளைக் கொண்டு செல்ல வேண்டும். ஆகவே, இந்த இரண்டு குறைகளையும் போக்க அரசு மறுபரிசீலனை செய்து பஞ்சப்பள்ளியிலும் அரசம்பட்டியிலும் புதிய கால்நடை மருத்துவமனைகளை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அரசம்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்று உள்ளது. அதேபோல் கிளமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள பஞ்சப்பள்ளி கிராமம், கும்மலூர் கிளை நிலையத்திற்குப் பார்வைக் கிளை நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய இரண்டு ஊர்களிலுமே ஒன்றில் கால்நடைக் கிளை நிலையமும் மற்றொன்றில் பார்வைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் காவேரிப்பட்டினத்தில் , மருத்துவமனையும், நாகரசம்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகமும், அரசம்பட்டியோடு, சாப்பர்டி, வேலம்பட்டி என்ற மூன்று கிளை நிலையங்களும், அவற்றுக்கு முறையே பன்னந்தூர், இராமேந்தம், நெடுங்கல் ஆகிய மூன்று பார்வைக் கிளை நிலையங்களும் தற்போது இயங்கி வருகின்றன. எனவே, எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலையைப் பொறுத்துப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 335, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 9]

**335—**

## முதியோர், ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம்

***18872—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கென காப்பகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில், முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் தொடங்குவதற்கு அரசின் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேராவூரணி தொகுதியில் கிட்டத்தட்ட 75 சதவீதம் ஏழை கூலித் தொழிலாளர்களின் குழந்தைகளும், ஆதரவற்ற முதியோர்களும் உள்ளனர். ஏழைக் குழந்தைகள் படிக்கவும், ஆதரவற்ற முதியோர்கள் தங்கவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து பேராவூரணியில் குழந்தைகள் காப்பகம் அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையில் அரசு சார்பில் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் ஒன்று ஏற்கெனவே நடைபெற்று வருகின்றது. அதில் 248 குழந்தைகள் தங்கிப் பயின்று வருகிறார்கள். அந்த மாவட்டத்தில் ஆதரவற்ற குழந்தைகள் இருப்பார்கள் என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்தக் குழந்தைகளை அங்கு சேர்ப்பதற்கு முன்வந்தால் கூடுதலாக அந்தக் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூரிலேயே Margret Social Development Society மானாம்பூசாவடி என்ற இடத்திலும், Victoria Destitute Home புதுக்கோட்டை ரோடு மாதா கோட்டை என்ற இடத்திலும் ஆக இரண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக முதியோர் இல்லம் மற்றும் ஆதரவற்ற

குழந்தைகளுக்கான காப்பகம் நடத்தப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 336, திரு. இ. ஜி. சுகவனம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

336—

**வருவாய் உச்சவரம்பை உயர்த்துதல்**

*14073-அ—**திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மக்களுக்குக் கல்வி நிலையங்களில் பயில்வதற்கு அளிக்கப்பட்டு வரும் உதவித் தொகையைப் பெறுவதற்கு தகுதி அளிக்கும் வருவாய் உச்சவரம்பை உயர்த்தி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆய்வில் உள்ளது.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஆய்வில் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்பொழுது இந்த நிதி உதவி உயர்த்தப்படும்? இந்த ஆண்டே அது நடைமுறைப் படுத்தப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1-10-1995 முதல் ரூ. 44,500 ஆக இருந்தது. இந்தத் தொகையை 1-4-1998 முதல் ரூ. 50,920 ஆக மைய அரசு உயர்த்தி உள்ளது. மைய அரசுக்கு இணையாக மாநில அரசும் செயற்குறிப்பில் பரிசீலனை செய்து இந்த ஆண்டே அதற்குரிய முடிவெடுக்கப்படும்





என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 337, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

337—

**ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகள்**

*18908—**திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனித் தொகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகள் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தனித் தொகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் ஆதிதிராவிடர் மாணவ/மாணவியர் விடுதிகள் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை. அவசியத்தை முன்னிட்டு தேவையுள்ள இடங்களில் மட்டுமே நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு புதிய ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகளை அரசு தோற்றுவித்து வருகின்றது.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தாராபுரம் நகரில் பல ஆண்டுகளுக்குமுன் குறைந்த எண்ணிக்கையுடன் தொடங்கப்பட்ட ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகள் தற்போது அரசால் வழங்கப்படும் நல்ல தரமான உணவினாலும், இன்னும் படிப்புக்காக எல்லாவித சலுகைகளும் வழங்கப்படுவதாலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி உள்ளது. 10 பேர் தங்கும் அறையில் 30-க்கும் மேற்பட்ட மாணவியர் மிகவும் சிரமத்திற்கிடையில் தங்கி படித்து

வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வில் அதிகக் கவனம் செலுத்தும் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சியில் மாணவ மாணவியர் புதிதாகத் தங்கிப் படிக்க வசதியாக விடுதி கட்டித் தர மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு உண்மையை ஒத்துக் கொண்டிருக்கின்றார்கள். நன்றி. ஆதிதிராவிட நலத் துறையின் சார்பாக - தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 4-வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு - அந்த மாணவர்களுக்கு உணவுக் கட்டணத்தை உயர்த்தியளித்திருக்கின்றார்கள். பள்ளி மாணவர்களுக்கு 138 ரூபாய் 75 பைசாவாக இருந்ததை இன்று 225 ரூபாயாக உயர்த்தியிருக்கின்றார்கள். அதைப்போல, கல்லூரி மாணவர் விடுதி மாணவர் கட்டணம் 192 ரூபாய் 50 பைசாவாக இருந்து, இப்போது 400 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதைப்போல இந்திய ஆட்சிப் பணிக்குப் படிக்கும் மாணவர்கள் விடுதிகளுக்கு 200 ரூபாயாக இருந்தது இப்போது ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால் தரமான உணவு மாணவர் விடுதியில் வழங்கப்படுவது உண்மை. அந்த அடிப்படையில் மாணவர்களும் அதிகமான எண்ணிக்கையில் வந்து சேருவதும் உண்மை. கடந்த காலங்களில் மாணவர்களுடைய விடுதிகளை ஏனோ தானோ என்று அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் கட்டிவிட்டார்கள். இப்போது கட்டப்படும் விடுதிகளில் சமையலறை, குளியலறைகள் மற்றும் அத்தியாவசியமான அத்தனை அறைகளையும் அழகாக அமைத்து மாணவர்களை அனுமதிக்கிற காரணத்தால் நெருக்கடி ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, அவசியமாகத் தேவையிருந்தால் அந்தப் பகுதியை சிறப்பு இனமாகக் கருதி அந்த மாணவர் விடுதிகள் முன்னுரிமை அடிப்படையில் கட்டிக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 338, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.





**338—**

**கோடை வாழ்விடம்**

***8697—திரு. பா. வேல்துரை:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், மாஞ்சோலை எஸ்டேட், கோதையாறு பகுதியில், கொடைக்கானல், ஊட்டி போன்ற தட்பவெப்ப நிலை உள்ளதால் இப்பகுதியை மேம்படுத்தி கோடை வாழ்விடமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த எஸ்டேட் பகுதி தேயிலைத் தோட்டம் வளர்க்க நீண்டகால குத்தகையில் உள்ளதாலும், வனப்பகுதியாக இருப்பதாலும், கோடை வாழ்விடமாக மாற்ற இயலாது. எனவே, திருநெல்வேலி மாவட்டம், மாஞ்சோலை எஸ்டேட் கோதையாறு பகுதியை கோடை வாழ்விடமாக மாற்றும் திட்டம் குறித்து அரசின் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே பணக்காரர்கள் மட்டுமே கோடை வாசஸ்தலங்களுக்குப் போய் வந்தார்கள். இப்போது நடுத்தர மக்கள் வரை அந்தக் கோடை வாசஸ்தலத்தைப் பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டிலே ஊட்டி, கொடைக்கானல் போன்ற இரண்டு கோடை வாசஸ்தலங்கள் மட்டுமே இருக்கின்றன. தென்மாவட்ட மக்கள் கோடையை ஒரு நல்ல இடத்தில் கழிப்பதற்கான இடம் இல்லை. ஆனால் மாஞ்சோலை, கோதையாறு போன்ற பகுதிகளில் சீதோஷ்ண நிலை, குளிர்ந்த நிலையில் இருக்கிறது. அந்த இடத்தில் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதேசமயத்தில் கோதையாற்றில் மின்சாரத் திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. பொதுமக்கள் போவதற்கு சாலை வசதியும் இருக்கிறது. மிகக் குறைந்த செலவிலே ஒரு கோடை வாசஸ்தலத்தை அங்கே உருவாக்கலாம். Resort கட்ட அனுமதி அளித்தால் தென்மாவட்ட ஏழை எளிய மக்கள் எல்லாம்

கோடைகாலத்தில் அங்கே செல்ல வசதியாக இருக்கும். அமைச்சர் தென் மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர். ஆகவே அமைச்சர் முதலமைச்சர் அவர்களிடத்தில் பேசி, அந்தத் திட்டத்தை அமைச்சர் உருவாக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும், முயற்சி செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாரிடத்திலிருந்து அந்த இடத்தைப் பெற்றுத் தந்தால் கோடை வாழ்விடமாக மாற்றுவதற்கான முயற்சியில் இந்தத் துறை ஈடுபடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 339, திரு. செங்கை சிவம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**339—**

## சென்னையில் சுற்றுலா தகவல் மையம்

***14748—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அனைத்து மாநில சுற்றுலா தகவல் மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையைப் படிக்க அனுமதி கோருகிறேன்.

(அ) ஆம்.

(ஆ) அனைத்து மாநில சுற்றுலா தகவல் மையங்களும் மற்றும் சுற்றுலா தொடர்புடைய அமைப்புகளும் செயல்படும் விதத்தில் மாநில சுற்றுலாத் துறையால் பல மாடிக் கட்டடம் கட்ட, சென்னை திருவல்லிக்கேணியில் கலைவாணர் அரங்கம் அருகில் சுமார் 8 கிரவுண்டு 962 சதுர அடி நிலம் அரசால் ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இது



தொடர்பான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் மத்திய அரசால் 1998-99 ஆம் ஆண்டிற்கு முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ. 200 இலட்சம் என்ற தகவல், மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்குத் தொகை ரூ. 24 இலட்சமும், மைய அரசின் பங்குத் தொகை ரூ. 56 லட்சமும் ஆகும். எஞ்சிய ரூ. 120 இலட்சத்தைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற்று திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மையத்தில் பங்கேற்கும் பிற மாநிலங்கள் எவை? அந்த மாநிலங்கள் இதனுடைய செலவை ஏற்கின்றனவா? இம்மையத்தில் என்னென்ன வசதிகள் செய்துகொடுக்கப்பட உள்ளன என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுற்றுலா வளாகத்தில் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களினுடைய சுற்றுலா தகவல் மையங்களும் ஒரே பகுதியில் அமைவதற்கான அனைத்து வசதிகளும் செய்யக்கூடிய விதத்தில் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 340, திரு. டி. மணி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**340—**

## மீன் குஞ்சுகள் வளர்ப்பு

***21565—திரு. டி. மணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமம், சிவலோகத்தில் மீன்குஞ்சுகள் வளர்ப்பதற்காகக் கட்டப்பட்ட தொட்டிகள் தற்போது செயல்படுகின்றனவா?

[1999 ஏப்ரல் 9

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனியர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவலோகத்தில் இருக்கிற மீன்குஞ்சுகளைப் பராமரிக்கின்ற அந்தப் பணி என்பது, பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பித்து கடந்த ஆண்டு முதல் அது செயலற்றுப் போகின்ற நிலை தொடங்கி, அதற்கு அருகில் இன்னொரு இடத்தில் அப்படியொரு அமைப்பை உருவாக்கினார்கள். ஒரு மாதத்திற்கு முன்னால் அந்த மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவரோடு சென்று பார்க்கிறபோது சில அறைகள் காலியாக இருந்தன. மீதி அறைகளில் மீன்குஞ்சுகள் இல்லை. அதுபோன்று பேச்சிப்பாறையில் உள்ள மீன்குஞ்சுகளைப் பராமரிக்கிற அந்த அறைகளும் காலியாக இருந்தன. ஏற்கெனவே மணிமுத்தாறு நீர்தேக்கம் அருகிலுள்ள இடத்திலேதான் இந்த மீன் குஞ்சுகளைக் கொண்டு சென்று, வளர்த்து சிற்றாறு 1, 2, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்ற நீர்த்தேக்கத்திலே விட்டு அதன்மூலமாக அரசினுடைய வருவாயைப் பெருக்குவதற்காகத்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இது சரிவர பராமரிக்கப்படாததன் காரணமாகவும் இந்த அறையினுடைய leakage காரணமாகவும் இந்த நிலை உருவாக்கப்பட்டுள்ளது. எனவே அதைப் பரிசீலனை செய்து leakage ஆகின்ற அறைகளில் leakage ஐ அடைத்து இந்த மீன் குஞ்சுகளை முறையாக அப்பகுதிக்கு எடுத்துச் சென்று வளர்த்து நீர்த்தேக்கத்திலே விடுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனியர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1999 ஏப்ரல் 9]

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### மின்சார வாரிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுதல் பற்றி மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிப்பதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள்; அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றினை இந்த அவைக்கு அளிக்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆணைக்கிணங்க தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்ற ஒப்பந்தத் தொழிலாளர்கள் (Contract Labourers) பணி நிரந்தரம் செய்வது குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் ஆழ்ந்து பரிசீலனை செய்தது. இதன் முதற்கட்டமாக தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நான்கு அனல் மின் நிலையங்கள், இரண்டு எரிவாயு சுழல் நிலையங்கள் மற்றும் 31 புனல் மின் நிலையங்களில் தற்போது பணியாற்றும் சுமார் 11,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் 1-5-1999 முதல் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி 4 அனல் மின் நிலையங்களில் 9,927 ஒப்பந்தத் தொழிலாளர்களும், 2 எரிவாயு சுழல் நிலையங்களில் 259 ஒப்பந்தத் தொழிலாளர்களும், மற்றும் 31 புனல் மின் நிலையங்களில் 843 ஒப்பந்தத் தொழிலாளர்களும், ஆக 11,029 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள். மின் பகிர்மான வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது குறித்து மின்சார வாரியம் தொடர்ந்து பரிசீலித்து வருகிறது. இதுபற்றி விரைவில் ஒரு நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்பதையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[1999 ஏப்ரல் 9

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. செ. இராமலிங்கம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் தொழில்நுட்பக் கல்வி குறித்த அறிக்கையின்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் 16-வது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கையினை அளித்தல், திரு. பா.மு. முபாரக், மனுக்கள் குழுவின் தலைவர்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 14, 15 மற்றும் 16-வது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்

### (ஆ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

### (இ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் - நிருவாகம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 99,56,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1808, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மீன் பிடிக்கும் தூண்டில் முள்ளுக்குப் போடும் விற்பனை வரியை மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல் நீக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 275, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கேபிள் தொலைக்காட்சியின்மீது விதிக்கப்பட்டுள்ள கேளிக்கை வரியினைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 136, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 626, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தேங்காய் எண்ணெய் உற்பத்தியை ஊக்கப்படுத்தவும், வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவும், கொப்பரை மீதான விற்பனை வரியை நீக்கிவிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1085, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 720, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1582, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 970, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அன்னியச் செலாவணி அதிக அளவில் ஈட்டிக் கொடுக்கக்கூடிய பதனிடப்பட்ட தோல்கள் மீது விதிக்கப்படுகின்ற வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1754, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"டைஸ் மற்றும் கெமிக்கல்ஸ்க்கான வரியைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1569, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2905, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ந. கருப்பண்ண உடையார்] [1999 ஏப்ரல் 9

"வேளாண் இடுபொருட்கள்மீது விற்பனை வரி விதிப்பதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 464, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1636, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 67, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பூமியில் வெட்டி எடுக்கப்படும் கனிமங்களுக்கு விற்பனை வரி 11 சதவிகிதம் என்று இருப்பதை 4 சதவிகிதம் ஆகக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 680, திரு. பி. வெங்கடசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1192, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**Dr. E.S.S. RAMAN:** Hon. Speaker Sir,

"To discuss the need to grant exemption from levy of Tax on sale of Medicinal plants and Herbs in Tamil Nadu" I move—



1999 ஏப்ரல் 9] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

"That the allocation of Rs. 99,56,93,000 under Demand No.4 - General Sales Tax and Other Taxes and Duties-Administration, be reduced by Rs. 100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விற்பனை வரி பதிவு சான்றிதழ்கள் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,56,93,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 147,08,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1801, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முதல்வர், அமைச்சர்கள் தங்கள் துறையைச் சார்ந்த அலுவலகங்களை மாதம் ஒரு மாவட்டமாகச் சென்று பார்வையிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 279, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் கொடுக்கும் மனுக்கள் மீது 15 நாட்களுக்குள் பதில் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 135, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 527, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1087, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"மாவட்ட ஆட்சித் தலைவர் மாதமொருமுறை காவல்துறை, மக்கள் பிரதிநிதிகளுடன் ஒரு கூட்டம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1584, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 979, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற விண்ணப்பங்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் அமைச்சர்கள் பதில் அனுப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1746, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலைமை செயலகத்திற்கென்று பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1567, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3035, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 465, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலைமையிடத்தில் தற்காலிகமாக உள்ள பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 63, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1463, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்களுக்கு 5 சதவீதம் ஊதியம் உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1370, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அனைத்து அமைச்சர்களும் மாவட்ட வாரியாக அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தங்கள் துறைப் பணிகள், மற்றும் தேவைகள் பற்றி நேரில் சென்று ஆய்வு செய்து தேவையான முடிவுகள் எடுத்து நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 147,08,69,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1291, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

**கோரிக்கை எண் 11 — மாவட்ட நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11— மாவட்ட நிருவாகம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 489,91,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2658, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் மாவட்டத்தில், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாலுகா அலுவலகங்களில் கம்ப்யூட்டர்களைப் பொருத்தி, வரும் மனுக்களைப் பதிவு செய்து உடனுக்குடன் பதில்களை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 288, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்டத் தலைநகரங்களில் கூடுமானவரை எல்லா துறை அலுவலகங்களும் ஒரே வளாகத்தில் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 628, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்ட அளவில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து 60 நாட்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1585, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 988, திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மிகவும் ஊனமடைந்து, வெளியில் வரமுடியாத நிலையில் உள்ளவர்கள் விண்ணப்பம் அனுப்பினால், அதிகாரிகளே நேரடியாகச் சென்று அவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[1999 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1740, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டக் கருவூலத்தில் பணிச் சுமையால் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க, போதிய பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1565, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3044, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 467, திரு. கே. சுப்பராயன்.



1999 ஏப்ரல் 9]

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூர் வீரபாண்டி ஊராட்சி க.ச.(எஸ்.எப்.) நெ. 481/3, ஜனசக்தி நகரில் அரசுக்கு எதிராக ஒரு தனி நபர் தடை ஆணை பெற்றுள்ளதை நீக்க மாவட்ட நிருவாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 62, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓமலூர் தாலுகா அலுவலகத்தைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4222, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1369, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்டங்களில் மாதந்தோறும் நடைபெறும் விவசாயிகளின் குறை தீர்க்கும் நாள் கூட்டங்களில் கூறப்படும் கருத்துக்கள் அனைத்தையும் பதிவு செய்து மாநில அரசுக்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானம் எண் 15, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே மாவட்ட அளவிலான எல்லா துறை அலுவலகங்களையும் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 377, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1196, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு திருவள்ளூரில் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,91,90,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிருவாகம் ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே அச்சடிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாக ஏற்று, அவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

கோரிக்கை எண் 9 - என்பது மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகியோரின் செலவினம் கொண்ட ஒரு கூட்டுக் கோரிக்கையாகும். இதில் மாநில ஆளுநர் அவர்களின் செலவினம் வருவதாலும், மாநில ஆளுநர் அவர்களின் செலவினம், சாட்டிய செலவினத்தின்கீழ் வருவதாலும், இந்தத் தலைப்பின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் எதுவும் சட்டமன்றத்தில் வைக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகள்மீது தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது, திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொது விற்பனை வரி, நிருவாகம் மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த அன்புத் தலைவர் மூப்பனாருக்கும், முருகனுக்கும் நன்றி சொல்லி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

---

*@ 151 முதல் 185 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றும் நேற்றைக்கு முன்தினமும் அருமையான ஒரு கருத்தரங்கு நடந்தது.

நம்முடைய நிதித் துறைச் செயலாளர் அவர்களும், அருமை நண்பர் சொக்கர் அவர்களும் அதற்காக முயற்சித்து ஓர் ஏற்பாட்டினைச் செய்து, இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அதிலே கலந்து கொண்டோம். எங்கள் அத்தனை பேருக்கும் மிகவும் உபயோககரமான ஒரு கருத்தரங்காக இருந்தாலும், ஒரு அதிர்ச்சியான செய்தியை அதிலே தெரிந்து கொண்டோம். நம்முடைய வரி முழுவதுமாக ஊழியர்களுடைய சம்பளமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நேற்றைக்கு நாங்கள் அறிந்தபோது அதிர்ச்சி அடைந்தோம். அதுமட்டுமல்ல, பொதுவாக வருகின்ற வருமானத்திலே 67 சதவீதம் நம்முடைய அரசு அலுவலர்களுக்குச் செல்கிறது என்பதைப் பார்க்கும்போது அவர்கள் நன்றியோடு இந்த நாட்டிற்கு இந்த அரசு செய்கின்ற, சொல்கின்ற பணிகளை எப்படி ஆற்றுகிறார்கள் என்று நினைக்கும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது.

பாராட்டப்பட வேண்டிய பல அம்சங்கள் இந்த மானியக் கோரிக்கையிலே இருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். அதிலே, தமிழ்நாடு, தொழில் துறையிலே முதலீட்டிற்கு வர வேண்டுமென்ற ஆவலோடு சில கோரிக்கைகளை நான் முன்வைக்க விரும்புகிறேன். வரிகளே இல்லாமல் ஓர் அரசை நடத்த முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், அதே சமயம் அண்டை மாநிலங்களுக்கும் நமக்கும் உள்ள வரி ஏற்றத் தாழ்வுகள், அந்த ஏற்றத் தாழ்வுகளால் நம்முடைய சிறு தொழில் பாதிக்கப்படக் கூடாது என்பதை நாம் நினைத்து நம்முடைய வரிகளைப் போட வேண்டும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செல்லையா கமிட்டியினுடைய பரிந்துரையை அமல்படுத்தினால்தான் நம்முடைய சிறு தொழில் முதலீடம் பெறுவதற்குள்ள வழிவகைகள் இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிகரெட், பான்மசாலா, மதுபானம் போன்ற பொருட்களுக்கு வரி அதிகமாக விதித்துள்ளதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்தில், இன்னும்கூட 5 சதவீதம் அதற்குக் கூட்டலாம் என்கிற யோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், செல்லுலார் தொலைபேசிக்கு வரியைக் குறைத்து, ஏழைகளுக்கு இப்போது பொழுதுபோக்காக இருக்கக்கூடிய தொலைக்காட்சிப் பெட்டிக்கு வரியை ஏற்றியிருக்கிறீர்கள். எனவே, செல்லுலார் தொலைபேசிக்கு முன்பு மாதிரியே வரியைப் போட்டு, தொலைக்காட்சிப் பெட்டிக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





விவசாயிகள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய Sprayer, விசைத் தெளிப்பான், அதற்குக்கூட வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், வெளி மாநிலங்களிலே அதற்கு வரியில்லை. விவசாயிகள் உபயோகிக்கக்கூடிய Tractor Engine வெளி மாநிலங்களிலிருந்து பெறுகிறோம். அதற்கு 4 சதவீதம் வரி செலுத்தி வாங்குகிறோம். இங்கே அதற்குள்ள பாகங்களைத்தான் தயாரிக்கிறோம். எனவே, அதற்கு முழுமையாக வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரூ. 200 பெருமானமுள்ள Stove-க்கு வரி விலக்கு அளித்திருக்கிறீர்கள். ஆனால், ரூ.75 மட்டுமே விலையுள்ள மண்ணெண்ணெயில் எரியக்கூடிய stove-க்கு வரியிருக்கிறது. ஆகவே, அந்த வரியை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரப் பொருட்கள், அதாவது electric பொருட்களுக்கு நம்முடைய மாநிலத்தில் விற்பனை வரி 16 சதவீதம் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் விற்பனை வரி குறைவாக இருக்கிறது. எனவே, இங்கே பொருள்கள் வாங்கக்கூடியவர்கள் அண்டை மாநிலங்களுக்குச் சென்று அதைப் பெற்று வந்துவிடுகிறார்கள். இங்கு அதிகமான வரி இருப்பதன் காரணமாக, அவர்கள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று பொருள்களை பெற்றுவரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, அவற்றை நம்முடைய மாநிலத்தில் விற்க வேண்டுமென்று சொன்னால், இங்கு அந்த வரியைக் குறைக்க வேண்டும்; மற்ற மாநிலங்களில் இருப்பதுபோன்று, அந்த வரியைக் குறைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

அடுத்து, ஏழைகளின் உணவு வறுகடலை. பொதுவாக கிராமங்களில் 'பொரியைத் தின்று தண்ணீரைக் குடித்தால் பொழுது போகும்' என்று சொல்லுவார்கள். இங்கு கடலைக்கு வரி இல்லை. ஆனால், அதேநேரத்தில் வறுத்த பொட்டுக் கடலையைப் பொரியில் கலக்கி தின்பதற்கு வரி இருக்கிறது. எனவே, அந்த 4% வரியை நீக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கல்கண்டு. அதுபற்றி கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட பேசினேன். கல்கண்டுக்கு வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சூடத்திற்கு வரியை நீக்கி தந்து இருக்கிறீர்கள். ஆனால், அதில் தயாரிக்கப்படும் பவுடருக்கு—அந்தத் தொழிற்சாலை இங்கே நல்ல முறையிலே நடந்து கொண்டிருந்தது; ஆனால், அதற்கு - 11% வரி விதித்ததன் காரணமாக, அந்தத் தொழிற்சாலை இப்போது அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிட்டது; எனவே, அந்த சூட பவுடருக்கு வரியை நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ் தினசரி நாட்காட்டிக்கு 8% வரியை 4% ஆக்கினோம். ஆனால், பிற மாநிலங்களில் இருக்கிற தமிழர்கள்தான் அந்த நாட்காட்டியை வாங்குகிறார்கள். அதற்கு வரி போட்டதன் காரணமாக அதை விற்பதற்கு 'C-Form' வாங்க வேண்டியிருக்கிறது. 'C-Form' இதற்காக கொடுக்க மாட்டார்கள். ஆகவே அதற்கு முழுமையாக வரியை நீக்கிக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இப்போது எல்லாம் பிளாஸ்டிக் யுகமாகிவிட்டது. காகிதப் பைக்கு இப்போது வரி போட்டு இருக்கிறீர்கள். அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சலவை சோப்பு நம்முடைய மாநிலத்திலே கொஞ்சம் பேர்தான் தயார் பண்ணுகிறார்கள். அந்த டிடர்ஜண்ட் பவுடர் தயாரிக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கு, அந்தப் பவுடருக்கு 4% வரி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஏலக்காய் கேரளாவிலே அதிகம் விளைகிறது. நம்முடைய நண்பர்கள் அங்கே போய் ஏலக்காயை ஏலக்காய் கம்பெனியிலே ஏலத்திலே வாங்கி வந்து, இங்கே தரம் பிரித்து வெளி மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்கிறார்கள். அதில் என்ன பிரச்சினை என்றால், இங்கு வரி இல்லை என்பது உண்மை. ஆனால், நம்முடைய அதிகாரிகள் வெளி மாநிலங்களுக்கு விற்பனை செய்யும்போது, சேல்ஸ் பட்டியலில் Form-F வேண்டும் என்று சொல்கிறார்கள். ஏற்றுமதி செய்யும்போது Form-H. வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், அதையெல்லாம் அவர்கள் வாங்க முடியாமல் இருப்பதனால், அதற்கு 10% வரி போட்டு, அந்த வரியை அவர்கள் கட்டாமல், அத்தனை வழக்குகளும் நீதிமன்றத்தில் இப்போது இருக்கின்றன. ஆகவே, அதற்கு வரியை முழுமையாக நீக்கிக் கொடுத்தால், ஏற்றுமதிக்கும் அதேநேரத்தில்



இங்கு இருக்கின்ற அந்த வியாபாரிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். அதற்கு 10% வரி வாங்குகிறார்கள். அதற்குப் பதிலாக 1% போட்டீர்கள் என்றரல், நமக்கு வரிக்கு வரியும் வந்துவிடும்; அதிகாரிகளுடைய தொல்லைகளும் நீங்கும். இப்போது அவர்கள் C-Form போன்றவற்றை எல்லாம் கேட்டு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் 1% ஆக வரியைக் குறைத்துப் போட்டால் அந்தத் தொல்லைகள் எல்லாம் நீங்கும் என்று நான் நினைக்கிறேன்.

இங்கிருந்து தோல் ஏற்றுமதி ஆகிறது. ஏற்றுமதி செய்யப்படும் தோல் நமக்கு ஏராளமான அந்நியச் செலவாணியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, தோலுக்கு உள்ள வரியை நீக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி நம்முடைய நாட்டிலே டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் சாய பட்டறைகள் உருவாகி நல்ல முறையில் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள், அந்த டைஸ் அண்டு கெமிக்கல்ஸுக்கு வரியை 4% ஆகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. வர்த்தகர்கள் கோடிக்கணக்கான ரூபாயை கட்ட முடியாமல், அவர்கள் மீது வழக்குகள் போட்டு, அவை நீதிமன்றங்களிலேயும் விற்பனை வரி தீர்ப்பாயத்திலும் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தக் குறிப்புப் புத்தகத்திலே 1700 கோடி ரூபாய் நிலுவை இருப்பதாக பார்க்கிறோம். இந்த 1700 கோடி ரூபாய் அப்படியே நிலுவையிலே இருந்துகொண்டிருந்தால், அது இழுத்துக்கொண்டே போகும். அதற்கு ஏதாவது Compromise, ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்து, சமாதானத் திட்டம் போல் நடவடிக்கை எடுத்து, அதை வசூலிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் நம்முடைய மீனவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய தூண்டில் முள்,—இப்போது டில்லியிலே M.P-களுக்கு எல்லாம் தூண்டில் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு கோடி கோடியாக பேரம் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்—ஆனால், இங்கு நம்முடைய மீனவர்கள் மீன் பிடிக்கக்கூடிய தூண்டில் முள்ளுக்கு 11% வரி போட்டு இருப்பதனாலே, இங்கே அதை வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற தூண்டில் முள்ளுக்கு வரியை 4% ஆகக் குறைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறு சேமிப்பு. கடந்த இரண்டு நாட்களாக தங்கள் தலைமையிலே நடைபெற்ற கருத்தரங்கு ஓர் அற்புதமான கருத்தரங்கு. எங்களுக்கெல்லாம் இருக்கின்ற பெரிய வருத்தம், கேரளாவிலே சிறு சேமிப்பு 4 ஆயிரம் கோடி ரூபாய் வசூல் பண்ணி இருக்கிறார்கள்; ஆனால், இங்கு நாம் அதை அவர்கள்போல் வசூல் பண்ணவில்லை என்பதுதான். இங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அத்தனைபேரும் சிறு சேமிப்புக்கு வசூல் செய்தோமேயானால்,— சிறப்பாக இருக்கும்.

இப்போது அதிகாரிகளுக்கு நம்முடைய வரி வருவாய் பூராவும் சம்பளமாகக் கொடுத்துவிடுகிறோம். ஒட்டுமொத்த வருவாயிலே 67 சதவீதத்தினை அவர்கள் வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். பல அதிகாரிகள்—மேல் மட்டத்திலே இருக்கிற அதிகாரிகளை நான் சொல்லவில்லை—கீழ் நிலையில் இருக்கின்ற அதிகாரிகள் செய்கின்ற கொடுமை சொல்ல முடியாத அளவிற்கு உள்ளது. அதை நினைத்து மனம் கஷ்டப்பட்டுக்கொண்டு இந்த விற்பனை வரி மானியத்திலே பேசிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, இந்தத் துறையை நல்ல முறையிலே சீரமைத்து, வரி வசூல் செய்வதற்கு அதிகாரிகள் நல்ல முறையில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அடுத்தது செக்கெண்ணெய். 80 கிலோ டின்களுக்கு வரி போட்டிருக்கிறீர்கள். அதனை ஒரு குவிண்டாலுக்கு என்று போட்டால் உள்நாட்டு செக்கெண்ணெய் எடுப்பவர்கள் பயன்பெறுவார்கள். கையினால் எடுக்கிற செக்கெண்ணெய்க்கு அல்ல, வீட்டிலே சிறிய இயந்திரத்தை வைத்துக்கொண்டு, எண்ணெய் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வரி போட்டிருக்கிறீர்கள். அதை நீக்க வேண்டும்.

அடுத்தது உணவு எண்ணெய். இங்கிருந்து வெளியில் அனுப்பக்கூடிய எண்ணெய்க்கு 4 சதவீதம் வரி போட்டிருக்கிறீர்கள். ஆனால் வெளி மாநிலத்தில் அதுமாதிரி இல்லை. இதனால் ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழக்கிறார்கள். சிறு தொழிலும் பாதிப்பு அடைகிறது. ஆகவே அந்த வரியையும் நீக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சோதனைச் சாவடிகள் அவசியமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லா சோதனைச் சாவடிகளையும் பார்த்தோமேயானால்





அங்கே பில்லைக் கேட்டு சோதனை செய்வதில்லை. அங்கே லாரியை நிறுத்துகிறார்கள். எவ்வளவு ரூபாய் தருவாய் என்று கேட்டு, கணிசமான தொகையை வாங்கிக் கொண்டு அந்த லாரியை விட்டுவிடுகிறார்கள். ஆகவே இந்த சோதனைச் சாவடிகள் என்பது தேவையில்லாத ஒன்று. சோதனைச் சாவடிகளை அறவே நீக்க வேண்டும். சோதனைச் சாவடிகள் (மணியடிக்கப்பெற்றது) எல்லையில் மட்டும் சோதனைச் சாவடிகள் போட்டால் போதும். மற்ற இடங்களில் உள்ள சோதனைச் சாவடிகளில் அரசாங்க அதிகாரிகள்தான் பயன்பெறுகிறார்களே தவிர அரசாங்கத்திற்கு எந்தவிதமான வரியும் வருவதில்லை. இந்தச் சோதனைச் சாவடிகளை நீக்க வேண்டும்.

கடைசியாக என்னுடைய தொகுதியிலே-பல நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்-ஒரு கிடங்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டுடிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பார்த்து செய்ய வேண்டும். என்னுடைய தொகுதிக்கு மருத்துவமனை ஒன்று கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரியினைப் பற்றி நான் பேசிவிட்டு போனால் விவசாயிகள் சொல்வார்கள்-முதலிலே சொல்லியிருக்கிறார்கள்-இவர் சிறு தொழில் அதிபர், விவசாயிகளைப் பற்றி என்ன பேசுவார் என்று சொல்லியிருக்கிறார்கள்.

விவசாயத் துறையிலே விற்பனைக் கூடத்திலே அதிகக் கொடுமை செய்கிறார்கள். அவர்கள் cess போடுகிறார்கள். காய்கறிகளுக்கு, பழங்களுக்கு cess போடுகிறார்கள். அந்த cess அவசியம்தானா?

ஆடு, மாடுகளுக்கு ஒரு cess போடுகிறார்கள். இது தேவையில்லை என்று நினைக்கிறேன். இந்த ஆடு, மாடுகளுக்கு cess போட்டால் அவர்கள் எப்படி கட்டுவார்கள்? இதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இது தேவையில்லை என்று நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏற்கெனவே மண்ணெண்ணெய் ஸ்டவ் பற்றி பேசியிருக்கிறேன். இந்த ஸ்டவ்-க்கு விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்க வேண்டும். ஸ்டவ் விலையே 75 ரூபாய்தான். 200 ரூபாய் ஸ்டவ்-க்கு வரி இல்லை. ஆகவே மண்ணெண்ணெய் ஸ்டவ்—க்கு வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.சி. பந்த், திட்டக் கமிஷனுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசி இருக்கிறார்கள். எல்லா மாநிலங்களும் ஒரே மாதிரியான

[திரு. ப. மோகன் கந்தசாமி] [1999 ஏப்ரல் 9

வரியை விதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் வியாபாரிகள் வரியைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏனென்றால் மற்ற மாநிலங்களில் வரி குறைவாக இருக்கிறது. ஆகவே அந்தப் பொருளை மற்ற இடங்களிலிருந்து, வரி குறைவாக இருக்கிற மாநிலங்களிலிருந்து வாங்கிச் செல்கிறார்கள். ஆகவே எல்லா மாநிலங்களிலும் வரி விகிதம் ஒரே மாதிரி இருந்தால் நல்லது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை மனதிலே கொண்டு, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு, அவர்களோடு உட்கார்ந்து பேசி, வரி குறைப்பைச் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நுகர்வோரும், வர்த்தகர்களும், அரசியல்வாதிகளும் உட்கார்ந்து பேசி, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் இந்த நாட்டிலே அந்தப் பிரச்சினை வராது.

நேற்றைய கருத்தரங்கிலே பல விஷயங்களைப் புரிய வைத்தார்கள். நம்முடைய அரசு எல்லா துறைகளிலும் கவனம் செலுத்தி, தொழில் துறை வளர்வதற்கு நடவடிக்கை எடுத்தாலும்கூட, அடிமட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால் பல சிக்கல்கள் வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த வாய்ப்பினைத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியை கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா.

**திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் வரவு செலவுத் திட்ட தயாரிப்புப் பயிற்சி முகாமை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த மன்றத்திலே அறிவித்து, மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து தந்த நம்முடைய முதல்வர் அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பில் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

விற்பனை வரியைப் பற்றி 30 ஆண்டுகளுக்கு முன்பு என்ற ஒரு கண்ணோட்டத்திலே நாம் பார்ப்போமேயானால், இது ஒரு இராட்சத வடிவத்திலேயிருந்து, இப்போது ஒரு மனித உருவத்திற்கு வந்திருக்கிறது



1999 ஏப்ரல் 9] [திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா]

என்பது நன்றாகத் தெரியும். அந்த நாட்களில் கடுமையான விற்பனை வரிச் சட்டங்கள். விற்பனை வரித் துறை அதிகாரிகள் A.C.T.O., D.C.T.O. அவர்களுடைய மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள், இவற்றையெல்லாம் பார்த்தாலே ஏதோ சிம்மசொப்பனமாக வியாபாரிகளுக்கு இருந்த ஒரு நிலை. நேராக வருவார்கள், வந்து அந்தக் கடை உரிமையாளரை அந்தப் பக்கம் நகரச் சொல்லிவிட்டு, இவர்கள் போய் கல்லாவிலே உட்கார்ந்து கொண்டு பணத்தை எண்ணுவார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய நிலை இருந்தது.

'தீபாவளி' வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும். மக்கள் கூட்டம் இருக்கும். அந்த நேரத்தில் அவர்கள் வருவார்கள். தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் அவர்களுக்கு stock எடுக்கவேண்டுமென்ற எண்ணங்களெல்லாம் வரும். நேராக வந்து stock எடுக்கவேண்டும் என்பார்கள். மக்கள் அந்த வியாபாரியை ஒருமாதிரியாகப் பார்க்க, வியாபாரி திண்டாடி, திணறி நிற்க, இவர்களுடைய நிர்ப்பந்தம், என்ன வேண்டும் என்பது பற்றி அங்கே பேசப்படும். 2 ஆயிரம் இவர்கள் வாங்கிவிட்டால், 100 ரூபாய் அரசுக்கு அங்கே வரி என்று ரசீது போடப்படும், தண்டம் என்று ரசீது போடப்படும். அதைக் கொடுக்கவில்லையென்றால், அதைப் பெருக்குகின்ற நிலை வரும். A.C.T.O., D.C.T.O.-விடம்தான் நாம் பெருக்குவதைப் பற்றி கற்றுக்கொள்ள வேண்டும், 100, 200, 300 என்ற முறையில், அப்படித்தான் அவர்களுக்குப் பெருக்கத் தெரியும். அப்படி ஒரு நிலை இருந்த காலம். ஆனால் நம்முடைய தலைவர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பு ஏற்று, அன்றைக்கு வணிகவரி அமைச்சராக சாதிக் பாட்சா அவர்களை நியமித்து, முதன்முறையாக தமிழகத்திலே 59 பொருட்களுக்கு ஒரே நேரத்தில் பலமுனை விற்பனை வரியிலிருந்து ஒருமுனை விற்பனை வரியாகக் குறைத்த அந்தக் காலம்தான் வியாபாரிகளுக்கு ஒரு விடிவு ஏற்பட்ட காலம்.

நேற்றைக்கு முன்தினம்கூட நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இது பொதுப் பணித் துறைக்குப் பொற்காலம் என்று, இல்லை, வியாபாரிகளுக்கு தலைவர் கலைஞர் ஆட்சிக்கு வருகிற நேரங்கள்தான் பொற்காலமாக அமைகிறது. வியாபாரிகளுக்கு ஒரு மரியாதையும் அந்த நேரத்திலேதான் உண்டாயிற்று. அன்றைக்கு தமிழகத்தின் அனைத்து வணிக அமைப்புகளும் அதைப் பாராட்டி வரவேற்றன. தமிழக அரசுக்கு இது ஒரு சாதனை மகுடமாக அமைந்தது. தொடர்ந்து 1989, 1996 தேர்தல் அறிக்கைகளிலே வர்த்தகர்களுக்கு நம்முடைய முதல்வர்

[திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா] [1999 ஏப்ரல் 9

அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை மட்டுமல்ல, அதற்கு மேலும் பொறுப்புக்கு வந்தவுடனே, நிறைவேற்றி, வணிகவரிச் சட்டங்களை எளிமையாக்கி, இப்போது 1999-ல் வியாபாரிகளுக்கு பிரச்சினையே இல்லை என்னும் அளவுக்கு எண்ணிலடங்காப் பொருட்களுக்கு வரியைக் குறைத்து நிம்மதிப் பெருமூச்சு விட வைத்திருக்கிறார்கள்.

எல்லோரும் வியக்கும்வண்ணம், நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்னாலே அனைத்துத் தரப்பினரையும் அழைத்து கருத்துக் கேட்டு, கலந்து ஆலோசித்து வரிச் சீரமைப்பு செய்து, அண்டை மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருந்த வரி வருவாயை நமது மாநில கருவூலத்திற்குத் திருப்பியதோடு, இங்கே வாணிகம் நடக்கவும், செழிக்கவும் வழிவகை செய்து தந்திருக்கிறார்கள்.

இன்னும் சில பொருட்களுக்கு அண்டை மாநிலங்களுக்கும் நமக்கும் வரி வேற்றுமை என்ற நிலை இருக்கிறது. குளிர்சாதனப் பெட்டிகளை ஆடம்பரப் பொருளாகக் கருதி நாம் 20% வரியை விதிக்கிறோம். ஆனால், அரசு அலுவல் சார்ந்த அந்த நிலைகளில்கூட ஹரியானாவில் அங்கே பில் போட்டு வாங்கக்கூடிய நிலை இருக்கிறது. அதனால் இங்கே உள்ள வாணிகம் பாதிக்கப்படுகிறது என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நுகர்வோருக்கும் அந்த நிலைதான் இருக்கிறது. அதேபோல, Ceramic Tiles- க்கு நம்முடைய மாநிலத்தில் 20%; பாண்டிச்சேரியில் 6%. எல்லோரும் அங்கே போய் வாங்கக்கூடிய நிலை இருக்கிறது.

அதேபோல, A.C. Cement sheet-க்கு வரி நம்முடைய மாநிலத்திலே 16%; பாண்டிச்சேரியில் 3%. அதனாலே தமிழகத்திலேயிருந்து அங்கே போய் வாங்கக்கூடிய நிலை. அதைத் தவிர்க்கவேண்டும். அதுபோன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்களை Tractor, Power Tiller உற்பத்தியாளர்கள் சந்தித்திருக்கிறார்கள். அவர்களுக்கு 1994-95-ல் 11% வரி. இந்த Tractor, Power Tillers இரண்டும் விவசாயத்திற்கு மிகவும் அவசியமானவை. அதற்கு ஒரு வரி, இதற்கு ஒரு வரி என்ற நிலை இல்லாமல் அவற்றிற்கு நாம் 4% போட்டிருக்கிறோம். அதேநிலையை அமல்படுத்தித் தரவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறோம். இங்கே நமது மாநிலத்தில் காபிக்கொட்டை வாங்கி தூள் செய்வதற்கு 8% வரி இருக்கிறது. ஆனால் அண்டை மாநிலங்களில் 4 சதவிகித வரிதான் இருக்கிறது. இவற்றை எல்லாம் சற்று கருத்தில்கொண்டு பார்த்தால் நிச்சயமாக இன்னும் வரி வருவாய் நிலை உயரும் என்பதைப் பணிவோடு இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 9] [திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா]

முற்பகல் 11-05

1989ஆம் ஆண்டில் வணிகர் நல வாரியம் அமைத்து வணிகர்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறீர்கள். இப்போது அவர்களுக்கு குடும்ப நிதியாக 10-1/4 இலட்சமும், அறுவை சிகிச்சைக்கு உதவி, கல்விக்கு உதவி என்று ஏராளமான தொகையையும் வணிகர் நல வாரியத்தின் மூலம் வழங்கியிருக்கிறீர்கள். இப்போது 1999-ல் வணிக வரி நிலுவைகளுக்காக சமாதான திட்டத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

அதேபோன்று, தமிழிலே அருமையான மக்கள் சாசனத்தை இப்போது எல்லாத் துறைகளுக்கும் வழங்கியிருக்கிறீர்கள். இவை எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டால் எல்லோருக்கும் எளிமையான, இனிமையான நிலை உண்டாகும். இப்போது தமிழகத்திலே 20 இலட்சம் வணிகர்களின் இதயமார்ந்த வாழ்த்துக்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இந்த இனிய நாளில் இதைக் கண்டு மகிழ்ந்திட, தங்களை வாழ்த்திட, வணிக சமுதாயத்திற்காக நாளும் உழைத்த ஈரோடு காளிதாஸ் சேட், மைலாப்பூர் காசிசாமி, குடந்தை பி. சண்முகம், திருச்சி மாயாண்டி போன்றவர்கள் இல்லையே என்ற ஆதங்கம் எனக்கு இருக்கிறது. அன்றைக்கு அவர்கள் எல்லாம் இத்தகைய கோரிக்கைகளை முன்வைத்து பாடுபட்டவர்கள்.

சில வணிக அமைப்புகள் கனவு கண்டன, VATS அமல்படுத்தப்பட்டால் அதை வைத்துக்கொண்டு, தமது சங்கத்தை வளர்க்கப் போராட்டம் நடத்தலாம் என்றெல்லாம் கனவு கண்டன. அது இன்றைக்கு கானல் நீராக இருக்கிறது. அவர்கள் அறிந்திருக்க நியாயம் இல்லை. தோன்றும் எந்த ஒரு நெருக்கடியையும் தட்டிக் கழிக்க முற்படாமல் அதையே ஒரு சவாலாக ஏற்கும் போர்க்குணம் உடையவர் நீங்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்க நியாயம் இல்லை. நாங்கள் அறிந்திருக்கிறோம். பாரதி சொன்னானே, "நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல், இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்" என்று அது உங்களுடைய வடிவம் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

திருக்குறள் சொல்லும்,

'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'

என்று தமிழ்க் குடியை உயர்த்த நாளும் உழைக்கும் உங்களுக்கு இயற்கை துணை நிற்கும், இந்த மாமன்றம் துணை நிற்கும், நல்லோர்கள் துணை நிற்பார்கள்.

'தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்'

ஆம், உங்களுக்கு தமிழ் மொழிதான், தமிழ்மக்கள்தான், தமிழ்நாடுதான் எல்லாமே--உயிர், பேச்சு, மூச்சு—என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். ஆனால், வாழ்கின்ற காரணத்தில் அருமையானவர்களுடைய பெருமையை உணராதது மட்டுமல்ல, பழித்துரைப்பதுதான் உலக வரலாறாக உள்ளது. அதனால்தான் வள்ளுவர் பெருமகனார் சொன்னார்,

"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து"

என்று. குணம், பண்பில் சிறந்த மலைபோன்ற பெரியோரின் பெருமையைக் குலைப்பதற்கு முயல்பவர்கள் எல்லாம் நிலைத்த பெரும் செல்வம் உடையவர்களாக இருப்பினும் அடியோடு அழிவர். அவர்கள் நிலைத்த பெரும் செல்வர்கள் அல்லர், இடையிலே அடித்த பெரும் செல்வர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் நட்பு, கூட்டணி பற்றி சொல்லுவார்கள். இதுபற்றி மாண்புமிகு முதல்வரின் 4 வரி கதை ஒன்றைச் சொல்லுகிறேன். குறளுக்கு எளிமையாக கதை சொல்லுவதிலே அவர் வல்லவர், விற்பனை வரி மானியம் அல்லவா? இரண்டு வணிக நண்பர்கள் காட்டிலே நடந்து சென்று கொண்டிருந்தார்கள். இன்று மத்தியிலே குதிரை வணிகம் மிகவும் எதிர்பார்க்கப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. அரசியல் வியாபார நண்பர்கள் யார் என்பதை முதல்வருடைய கதையின் முடிவு காட்டும். இரண்டு பேரும் காட்டிலே நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். எதிர்ப்புறம் ஒரு கரடி வந்தது. இரண்டு பேரில் ஒருவனுக்கு மரம் ஏறத் தெரியும். அடுத்தவனுக்கு மரம் ஏறத் தெரியாது. மரம் ஏறத் தெரிந்தவன் உடனே கிடுகிடுவென்று மரத்தின் மேலே ஏறிவிட்டான். அவன் தன்னுடன் வந்தவனைப் பற்றி கவலைப்படவில்லை. அவன் மேலே ஏறியது மட்டுமல்ல, அங்கே இருந்து கத்துகிறான். கீழே இருப்பவனைப் பார்த்தால் கரடி நம்மையும் பார்த்துவிடுமோ என்று உடனே கத்த ஆரம்பித்து விடுகிறான். அப்பாலே போ, அப்பாலே போ, என்று கத்துகிறான். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன செய்வது என்று புரியவில்லை. கீழே விழுந்து படுத்துக்கொண்டான். மூச்சை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.



செத்தவனைப்போல நடந்துகொண்டான். கரடி வந்தது. முகர்ந்து, முகர்ந்து பார்த்தது. பிணம் என்று நினைத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தது. மேலே இருந்தவன் கீழே இறங்கினான். கீழே இருந்தவன் எழுந்தான். மேலே இருந்தவன் கீழே இருந்தவனிடம் கேட்கிறான், 'என்னடா கரடி உன்னைச் சுற்றிச் சுற்றி வந்து காதிலே சொல்லியதே, என்னடா சொல்லியது' என்று கேட்டான். இவன் சொன்னான், 'உன்னைப் போன்றவர்களை நம்பி நட்டாற்றிலே இறங்கிவிடாதே, நட்டாற்றிலே தள்ளி விடுவான், அவனோடு நெருங்கிப் போகாதே' என்று சொல்லியது என்று சொன்னார்கள். இவ்வாறு கலைஞர் அவர்கள் திருக்குறளுக்கு விளக்கம் சொல்வார்,

முற்பகல் 11-10

"கேட்டிலும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்"

என்று. இன்றைக்கு மத்தியிலே எப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்களுடைய கட்சி, ரத யாத்திரை நடத்தியது; சூலாயுதம் ஏந்தியது. மிகவும் பாடுபட்டு அந்த ஆட்சியைப் பிடித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னர் இன்றைக்கு என்ன நடந்திருக்கிறது? அதை பழைய பாட்டு ஒன்று சொல்லும், அவர்கள் சேரக்கூடாத இடத்தில் சேர்ந்ததனாலே:—

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி
அவன் நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி
அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

என்ற நிலைதான் இன்று இருக்கிறது என்பதைச் சொல்லி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அருமையான பயிற்சி முகாமை ஏற்படுத்தித் தந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லி, இந்த வாய்ப்பிற்கும் நன்றிகூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி நட்டாற்றில் விடக்கூடியவர்கள் யார் என்பதைப் புரிந்துகொண்டு, அவர்களை உதறவிட்டு, நல்லவர்களுடைய ஆதரவோடு நிச்சயமாக ஐந்தாண்டு காலம் ஆட்சி தொடர்ந்து செல்லும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி நண்பர்கள் யாரென்று அடையாளம் காண்பதற்கு ஓராண்டுக்கு மேலாகியிருக்கிறது. இன்னும் ஓராண்டு கழித்துத்தான் மறுபடியும் நண்பர்களை அடையாளம் காண்பார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டுபேர் காட்டில் சென்றபோது, எப்படி கரடி வந்ததோ அதுபோன்று, சந்தர்ப்பம் வந்தால்தானே புரிந்து கொள்ளமுடியும் ? இப்போது வந்திருக்கிறது; புரிந்துகொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரி, மாவட்ட நிருவாகம், மாநிலத் தலைமையிடப் பணியாளர்கள் உள்ளிட்ட மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். வரியைக் குறையுங்கள்; வரி விலக்குக் கொடுங்கள் என்று வாதாட நான் வரவில்லை. நமது வருவாய் பிற மாநிலங்களுக்குச் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்தவகையிலேதான் தங்கத்திற்கு வரியைக் குறைத்தீர்கள். அதைப்போல, இன்னும் சில மாற்று ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று கேட்பதற்காக வந்திருக்கிறேன். நீங்கள், தற்போது பான் மசாலா போன்றவற்றிற்கு வரியை உயர்த்தி இருக்கிறீர்கள். அதை இப்போது நான் குறைக்கக் கேட்கப் போகிறேன். 'ஏன், இவர் பான் மசாலாவிற்கெல்லாம் வரியைக் குறைத்துக் கேட்கின்றார் என்று யாரும் தவறாக நினைத்து விடவேண்டாம். வரிவிதிக்கப்பட்ட கடந்த 20 நாட்களில், நம்முடைய தமிழகத்திற்கு வரவேண்டிய 20-க்கும் மேற்பட்ட பான் மசாலா load, லாரிகள் பாண்டிச்சேரிக்கும், கர்நாடகாவிற்கும சென்றுகொண்டிருக்கின்றன. ஒரு லாரிகூட இங்கே வரவில்லை. இந்த 20 நாட்களிலே கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் அளவிற்கு வரவேண்டிய வரியை இழந்திருக்கிறோம். வணிகர்கள் பாண்டிச்சேரிக்குச் சென்றும் அதேபோல கேரளா, ஆந்திரா போன்ற இடங்களுக்குச் சென்றும், அங்கே வரி குறைவாக இருப்பதால், ஆட்களை அனுப்பி வாங்கி வந்து, தமிழகத்திலே உள்ள வியாபாரிகளிடத்திலே கொடுத்து, இடைத்தரகர்களாகச் செயல்படக்கூடிய நிலை இருக்கிறது. வரியை உயர்த்தி வரவேண்டிய வருவாயை இழந்திருக்கிறோம். ஆகவே, வருவாய் இழப்பைத் தடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதுபோன்று, பல்வேறு உணவுப் பொருட்களுக்கு வரி விலக்கு அளித்ததன் மூலம் இன்று தமிழக அரசு தலைநிமிர்ந்து இருக்கிறது. அந்தவகையிலே இன்னும் சில பொருட்களெல்லாம் இருக்கின்றன. அவற்றிற்கும் குறைத்தால் இன்னும் தலைநிமிர்ந்து நிர்கக்கூடிய ஒரு வாய்ப்பும், ஒரு நற்பெயரும் கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சிகைக்காய் பொடிக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், சிகைக்காய் பொடி, பல பொருட்களுடன் கலந்து தயாரிக்கிறார்கள். ஆகவே, அதற்கு வரிவிலக்கு கொடுக்க முடியாது; அதற்கு நீங்கள் வரி கட்ட வேண்டுமென்று 21 மாதங்கள் கழித்து அதிகாரிகள் அவர்களிடம் சென்று கேட்கிறார்கள். 'ஏன் 21 மாதங்கள் கழித்து தற்போது கேட்கிறீர்களே, பட்ஜெட்டிலே குறைத்து குறிப்பிடப்பட்டிருக்கிறதே' என்று கேட்டதற்கு, 'சிகைக்காயைத் தனியாகப் பொடியாகச் செய்தால்தான்' என்ற ஒரு நிலையை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். யாருமே சிகைக்காயைத் தனியாக அரைத்துப் பயன்படுத்த முடியாது. கண்ணெல்லாம் எரியும். அதற்கு சில பொருட்களைச் சேர்த்துத்தான் தயாரிப்பார்கள். அதை ஏழையெளியவர்கள் 50 பைசா பொட்டலமாக வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். அதனால், தற்போதுள்ள நிதிநிலை அறிக்கையில், சிகைக்காய் பொடிக்கு . . .

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணமான சிகைக்காய் பொடிக்கு இப்போதும் வரி கிடையாது. அதிலே ஒரு 'Modernisation', புதுமை செய்து, வியாபார நோக்கத்தோடு, அதிலே சில கலவைகள் சேர்த்து செய்யும்போது அதற்கு 4 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது.

உதாரணமாக, ஷாம்புவை எடுத்துக்கொண்டால் அதற்கு 20 சதவிகிதம் வரி இருக்கிறது. அதைக்கூட வாங்குகின்ற மக்கள் இருக்கிறார்கள். எனவே சிகைக்காய் பொடியில் ஒரு புதுமை செய்து அதன் மூலமாக, ஒரு புதிய பொருளை உற்பத்தி செய்யும்போதுதான் 4 சதவிகித வரி விதிக்கப்படுகிறதே தவிர, சாதாரண சிகைக்காய் பொடிக்கு இப்போதும் வரி கிடையாது.

முற்பகல் 11-15

**திரு. ஜி. நிஜாமுதீன்:** காகிதத்திலே மடிக்கப்பட்ட சிகைக்காய் பொடிக்கு வரி வரவேண்டும் என்று அதிகாரிகள் வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்து வரி இல்லாமல் ஆக்கினால் சரி. அவர்கள் சொல்கிறார்கள் தனியாக சிகைக்காய் பொடி தயாரிக்க வேண்டுமென்று. சிகைக்காயோடு இலுப்பம் பிண்ணாக்கு, கற்பூர மஞ்சள் இப்படி 4, 5 பொருட்களைச் சேர்த்துத்தான் தயாரிக்க முடியும். ஆகவே அதைப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, air-pressure மண்ணெண்ணெய் அடுப்பு. சாதாரண மண்ணெண்ணெய் அடுப்பிற்குத்தான் வரிவிலக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. 75 ரூபாய்க்கு விற்கப்படுகிறது air-pressure மண்ணெண்ணெய் அடுப்பு. நேற்றுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அந்தப் புகைப்படங்களைக் காட்டினேன். அதற்கு வரி. அது குடிசைத் தொழிலாக தயாரிக்கப்படுகிறது. ஏழைகள், மண்ணெண்ணெய் மிச்சமாவதாலும், புகை வராத காரணத்தாலும், சுற்றுப்புறச்சூழல் பாதுகாக்கப்படுகின்ற காரணத்தாலும் அதைப் பயன்படுத்துகின்றார்கள். ஆகவே அதற்கு வரிவிலக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல பழைய பிளாஸ்டிக், அதைக் கொள்முதல் செய்யும்போதும் வரி, அந்த பிளாஸ்டிக்கைக் கொண்டுபோய் திரும்பக் கொடுக்கும்போதும் வரி. இரண்டு முறை வரி போடப்படுகிறது. ஏழைச் சிறுவர்கள்தான் அதைப் பொறுக்கிக் கொண்டு போய் கடைகளில் கொடுக்கிறார்கள். ஆகவே அதை வாங்கும்போது உள்ள வரியை மட்டுமாவது நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சூடத்திற்கு 17 சதவிகிதம் வரி இருக்கிறது. அதனால் வியாபாரிகள் எல்லாம் பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களுக்குச் சென்று வாங்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வருவாயை நாம் இழந்து கொண்டிருக்கிறோம். எனவே, மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல சூடத்திற்கு வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அதுபோல, வேளாண்மைத் துறை அமைச்சருக்கு ஒரு கோரிக்கை. அழுகும் பொருளான தக்காளி, வாழைப்பழம், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பொருட்களுக்கு சந்தையிலே cess விதிக்கப்படுகிறது. அவை அழுகும் பொருட்கள். அதற்கு cess விதிப்பது, அதை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டுச் செல்வதற்கு உரிமம் வாங்க வேண்டும் என்பது போன்ற நடைமுறைச் சிக்கல்களினால் அதற்குள் அப்பொருட்கள் கெட்டுவிடக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆகவே அதுபோன்ற பொருட்களுக்கு உரிமம் முறையை ரத்து செய்து அது சம்பந்தமாக பிரச்சினைகள் எழும்போது அந்த சிரமங்களைப் போக்க இந்த அரசு வியாபாரிகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிளாஸ்டிக் மென்நிலை கோணிப் பைகளுக்கு வரியை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல உணவுப் பொருட்களுக்கு நாம் வரியைக் குறைத்திருக்கிறோம். எனவே, முறுக்கு, சிப்ஸ் போன்றவற்றிற்கும் 4 சதவிகிதமாக வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். டிடர்ஜெண்ட் பவுடரையோ, சோப்பையோ கையால் தயாரிக்க முடியாது. பெரும்பாலும் இயந்திரங்களால்தான் தயாரிக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால் இயந்திரங்களால் தயாரிக்கப்படுகின்றவற்றிற்கும், கையால் தயாரிக்கப்படுகின்றவற்றிற்கும் 4% 16% என்று வித்தியாசம் இருக்கிறது. அதை மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும்.

அதுபோல, உணவுப் பொருட்கள் அனைத்திற்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிற நிலையிலே வறுகடலை, கடலை மாவு, கற்கண்டு, பிண்ணாக்கு போன்றவற்றிற்கு வரி இருக்கிறது. அதற்கும் வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ஊறுகாய்; 16%, 8% என்ற நிலையிலே வரி உள்ளது. அதை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல நிதிநிலை அறிக்கையிலே அழைப்பிதழ், cover-களுக்கு வரியைக் குறைத்திருக்கிறோம். அது வரவேற்கக்கூடிய ஒரு நிகழ்வு. அதேசமயத்தில் வரவேற்பிதழ் என்றாலே cover இல்லாமல் இல்லை. ஒருவர் வரவேற்பிதழ் வாங்கும்போது cover-க்குத் தனியாக வரியும், அழைப்பிதழுக்குத் தனியாக வரியும்

போட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டிற்கும் சேர்த்து ஒரே அளவிற்கு வைத்தால் நலமாக இருக்கும். வேண்டுமென்றால் packing பண்ணக்கூடிய காகிதப் பைகளுக்கு வரிவிலக்கு அளிக்கலாம். பிளாஸ்டிக் பைகளால் சுற்றுப்புறச்சூழல் கெடுகிறது. அவை அழிவதற்கு 100 வருடங்கள் ஆகின்றன.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** கவரோடு கூடிய அழைப்பிதழுக்கு, வாழ்த்திதழுக்கு 8 சதவிகிதம்தான். cover-ஐ நாம் தனியாக வாங்கினால்தான் அதற்கு 4 சதவிகிதம். மற்றபடி, சேர்ந்திருந்தால் 8 சதவிகிதம்தான்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரிகள் cover-க்கு தனியாக bill போடுகிறார்கள். அழைப்பிதழுக்கு தனியாக bill போர்டுகிறார்கள். அதனால் நமக்கு இழப்புத்தான் ஏற்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அழைப்பிதழ்கள், வாழ்த்திதழ்கள் cover-ரோடு தான் வருகின்றன. நாங்கள் அடிக்கடி கடைக்குப் போகிறோம். நாம் சொந்தத்திலே சில நேரங்களில் அழைப்பிதழ்கள் தயாரிக்கும்போது, வாழ்த்திதழ்கள் தயாரிக்கும்போதுதான் தனியாக cover-கள் தயாரிக்கிறோம். மற்றபடி, விற்பனையில் இருக்கும்போது பெரும்பாலும் அந்த நிலை இருப்பதில்லை.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** வியாபாரிகள் bill தனித்தனியாகப் போடுகிறார்கள். தனித்தனியாக bill போட்டால் அவர்களுக்கு இலாபம் என்பதால் அந்தமாதிரி செய்கிறார்கள். அதனால் நமக்குத்தான் இழப்பு ஏற்படுகிறது (மணியடிக்கப்பெற்றது).

அதுபோல, உணவு எண்ணெய்க்கு மீண்டும் நாம் வரியை உயர்த்தியிருக்கிறோம். அந்த வரியைக் குறைக்க வேண்டும். அதுபோல சிறுதொழில்கள். சிறுதொழில்களைப் பார்த்தீர்கள் என்றால் கேரளா, ஆந்திராவில் எல்லாம் மிகவும் குறைவான வரி விதிக்கப்படுகிறது. 6 சதவிகிதம்தான் விதிக்கப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் கூடுதலான வரியை விதித்திருக்கிறோம். இதனால் பல சிக்கல்கள் இந்தச் சிறுதொழில்கள் வளரவிடாமல் உருவாகிக் கொண்டிருக்கின்றன.





அதனால் paint போன்ற தொழில்கள் மற்ற மாநிலங்களோடு போட்டிபோட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே சிறுதொழில்களுக்கு மற்ற மாநிலங்களில் உள்ளதைப்போல 6 சதவிகித வரி என்று நாம் செய்ய வேண்டும். Colour T.V.-க்கு வரியை உயர்த்தியிருக்கிறோம். அதனால் எங்கள் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் காரைக்காலுக்கும், பாண்டிச்சேரிக்கும் ஓடோடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதையும் குறைக்க வேண்டும்.

முற்பகல் 11-20

தமிழ் தின நாட்காட்டிற்கு 4 சதவிகிதம் வரி போதும். அதனுடைய விற்பனையே சொற்பமாக இருக்கிறது. ஆகவே, அதற்கு வரியை ரத்து செய்து விடலாம்.

அதேபோல், டிரைசெம் கெமிக்கலுக்கு 4 சதவிகிதமாக இருப்பதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தர்மபுரி, திருச்சி, கன்னியாகுமரி மாவட்டங்களில் விளையும் மரவள்ளிக் கிழங்குகளுக்கு cess விதிக்கிறார்கள். ஆனால், மற்ற மாவட்டங்களில் அது இல்லை. ஏன் அந்த வித்தியாசம் என்பது புரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய மாவட்டத்தைப் பற்றி மட்டும் சொல்லி, முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எடுத்துக் கொள்ளக்கூடிய இந்த மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு வணிக வரித் துறையில் 80 வகை பொருள்களுக்கு, பலமுனை வரியை ஒருமுனை வரியாக்கி, அதற்காக வர்த்தகச் சங்கங்களோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து பேசி, வரிகளைச் சீரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதை,

தமிழகத்திலே வியாபாரிகளுக்கும் அரசுக்கும் ஒரு முரண்பாடு இல்லாத நிலையை உருவாக்கி இருப்பதை, நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் முன்னதாக, என்னிடத்திலே வந்திருக்கிற பல்வேறு கோரிக்கைகளை அரசினுடைய பரிசீலனைக்கு முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பாலித்தீன் பைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற வரியை 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; நானும் அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இரத்த வங்கிகளிலே சேமிக்கக்கூடிய இரத்தத்தை சேமிக்கும் பாலித்தின் பைகளுக்குக்கூட இந்த வரி அதிகமாக இருக்கிறது. பல பேர் இரத்த தானம் செய்து கொண்டிருக்கக்கூடிய நிலையில், இலவசமாக அவர்கள் இரத்தத்தைக் கொடுக்கிறபோது, அந்தப் பைகளுக்கு மட்டும் ஏன் வரி விதிக்க வேண்டும் என்று கேள்வி கேட்கிற காரணத்தினால், அதை அரச பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பூஜைப் பொருளாகப் பயன்படுத்தக்கூடிய சூடத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிற 4 சதவிகித வரியையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே வரக்கூடிய தமிழ் தின நாட்காட்டிக்கு விதிக்கப்பட்டிருக்கிற 8 சதவிகிதத்தை, 4 சதவிகிதமாக — ஏற்கெனவே 4 சதவிகிதமாக இருந்ததை 8 சதவிகித பட்டியலில் தவறுதலாக சேர்க்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன் — அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறுகடலை; இதற்கு இருக்கக்கூடிய 4 சதவிகித வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளிர்பானங்களைப் பார்த்தோம் என்று சொன்னால், இப்போது பெரிய தொழிலாக நடத்துகிற பெப்ஸி, கொக்கோ-கோலா போன்ற பன்னாட்டு மூலதனத்தோடு தயாரிக்கப்படுகிற குளிர்பானங்கள் இங்கு வந்திருக்கிற காரணத்தினால் உள்நாட்டிலே அதுபோன்ற பொருள்கள் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலைகள் முற்றிலுமாக நலிந்துபோய் செயலற்ற நிலையிலே இப்போது இருக்கின்றன. இந்தச் சிறுதொழிலில் ஈடுபட்டிருக்கிற குளிர்பானங்களைச் செய்கின்றவர்களும் பழரசம்



தயாரிக்கின்றவர்களும் பல்லாயிரக்கணக்கானோர் படுபாதாளத்திலே முற்றிலும் அழிந்து போகக்கூடிய நிலைமையிலே உள்ளார்கள். அதற்கு தற்போது 11 சதவிகிதம் வரி இருக்கிறது. முற்றிலுமாக அந்த வரியை நீக்கி, அவர்கள் பன்னாட்டு மூலதனத்தோடு செய்கின்ற மற்றவர்களுக்கு இணையாக தொழில் நடத்துவதற்கு அரசு அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வணிக வரித் துறையிலே, உரிமங்கள் பெறுகிற வகையிலே முரண்பாடான நிலைமை இருக்கிறது. உதாரணமாக மளிகைக் கடை என்று எடுத்துக் கொண்டால், அவர்கள் 9 உரிமங்கள் பெற வேண்டிய நிலைமை இருக்கிறது. வட்ட வழங்கல் அலுவலரிடத்திலே 2 உரிமங்கள்; விற்பனை வரி அதிகாரியிடத்திலே ஒரு உரிமம்; அதேபோன்று நகராட்சி அல்லது பேரூராட்சியிடத்திலே 4 உரிமங்கள்; அதேபோன்று உணவு காப்பீட்டுக் கழகத்தின் கண்காணிப்பாளராக இருக்கக்கூடிய காவல் துறையிடத்திலே ஒரு உரிமம். இப்படி 9 உரிமங்கள் ஒரு கடைக்குத் தேவைதானா? பலமுனை வரிகளை ஒருமுனை வரியாக ஆக்கிய நம்முடைய முதல்வர், மளிகை கடை வைத்திருந்தால்கூட 9 உரிமங்களைப் பெறுவதில், அவர்களுக்கு பல்வேறு சிரமங்கள் இருப்பதால் — அது மட்டுமல்ல; அதனால் பல்வேறு தவறுகளும் நடக்கிற ஒரு வாய்ப்பும் அதில் உள்ளதால்— அரசு அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வணிகர் நல வாரியம்; இதிலே பெரிய வியாபாரிகள்— மாண்புமிகு நம்முடைய உறுப்பினர் திரு. சொக்கர் போன்றவர்கள் எல்லாம் — இந்த வணிகர் நல வாரியத்தில் இடம்பெற வாய்ப்பு இருக்கிறது; சிறிய வியாபாரிகள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு, வணிக வரி அதிகாரிகள் செய்யக்கூடிய தவறுகளை அந்த வணிகர் நல வாரியத்திலே சொல்லி, அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வாய்ப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, சிறிய வியாபாரிகளைக் கூட மாவட்டத்திற்கு ஒருவரையாவது வணிகர் நல வாரியத்திலே உறுப்பினராக நியமிக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்களிடமிருந்து ஓராண்டுக்குரிய சந்தாவை, அதாவது உறுப்பினர்களுக்கான கட்டணத்தைக்கூட நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளுக்கு, வணிகர் நல வாரியம் இரண்டு மாதத்திற்குள்ளாவது அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். பல வருடங்கள்...

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிகர் நல வாரியத்தில், பெரிய வியாபாரிகள், தொழில் அதிபர்கள் மட்டும்தான் அங்கம் வகிக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அது தவறான கருத்து. சாதாரண வியாபாரிகள், சில்லறை வியாபாரிகளுக்கும் அதிலே இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அதைவிட முக்கியம் ஒரு வரலாற்றுச் சம்பவ முக்கியம். என்னவென்றால், இந்த நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்னால், எப்படி வரி விதிப்பது, என்னென்ன பொருள்களுக்கு வரி விதிப்பது, வணிகப் பெருங்குடி மக்களின் கோரிக்கை என்ன, இவற்றையெல்லாம் முன்னதாகவே, ஓரளவு அவர்களுடைய கருத்தைக் கேட்டு, அதையும் மையமாக வைத்துத்தான் நிதிநிலை அறிக்கையில் வரி விதிப்புக் கொள்கையை மாண்புமிகு முதலமைச்சர் மேற்கொண்டிருக்கிறார் என்பதை பெருமிதத்தோடு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை உணர்ந்த காரணத்தினால்தான், இந்த வரி சீரமைப்பு என்பது வர்த்தகச் சங்கங்களுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேசித்தான் அவையெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்று நான் ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டியிருக்கிறேன். சில வியாபாரிகளும் அதிலே அங்கம் வகிக்கிறார்கள் என்றால் அதனை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்; பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேசமயத்தில் உங்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். பொதுவாக இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்த மனுக்களின்மீது எந்தவித விசாரணையும் இல்லாமல் இருக்கிறது. அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஜாதிக் கலவரங்கள் ஏற்பட்டால் முதலிலே தாக்கப்படுவது கடைகளாக இருக்கின்றன. எங்கேயாவது கடைகள் உடைக்கப்படுகின்றன, கடைகள் சூறையாடப்படுகின்றன. அதிலும் எந்த ஜாதிக்காரன் எங்கே கடை வைத்திருக்கிறான். எதிலே அதிகமான வியாபாரம் நடக்கிறது என்று எல்லாம் பார்த்து தாக்கப்படுகிறது. தொழில் போட்டி காரணமாகக்கூட சில சமயம் கடைகள்



சேதப்படுத்தப்பட்ட சூழ்நிலையை எல்லாம் தமிழ்நாட்டிலே சமீபத்திலே பார்த்திருக்கிறோம். இராமநாதபுரத்தில் அதை நாங்கள் கண்கூடாகப் பார்த்தோம். எனவே, Group Insurance திட்டத்தை அரசே கட்டாயமாக, ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால் பல கோடி ரூபாய் நஷ்டம் அடைந்து பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு ஒரு பைசா கூட கிடைக்காது. எனவே, இதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவகங்களைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட தொகை வரையிலும் வரி கிடையாது என்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். 500 ரூபாய்க்கான ஒரு பொருளை ஒரு கடையிலிருந்து அவர்கள் வாங்கவேண்டுமென்று சொன்னால் அதற்கென்று தனியாக அவர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. தங்களுக்குத் தேவையான பொருளை பெரிய வியாபாரிகளிடமிருந்து அவர்கள் வாங்கி வரவேண்டியிருக்கிறது. எனவே, சிறிய வியாபாரிகள் நல்லமுறையில் வியாபாரம் செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். சிலவற்றில் 25,000 ரூபாய் வரையிலும் வரி இல்லை என்று சொல்கிறபோது, 500 ரூபாய் அளவிற்குப் பொருளை வாங்குவதற்கு அதற்கென்று இருக்கின்ற புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் இருப்பதால் இதிலே தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இதனை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட நிருவாகம், மாவட்ட தலைமையிடம் எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சீரிய அமைப்புகளைக் கொண்டு வந்தாலும் சில பிரச்சினைகள் இருக்கின்றன. நம்முடைய வருவாய்த் துறை செயலாளர்கூட இங்கு இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒருசிலவற்றைக் கொண்டு வர விரும்புகிறேன். ஒன்று நில உச்சவரம்பிலே இருக்கிற நிலம். அதுபோன்று மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய மாவட்டத்தில் ஆணையர் அலுவலகம் கிடையாது. அது தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வந்துவிட்டது. 1988-லிருந்து மனுக்கள் எல்லாம் தீர்க்கப்படாமல், எந்த ஒரு மனுவின் மீதும் விசாரணையில்லாமல் சிகப்பு நாடா முறையிலே அப்படியே கட்டி வைக்கப்பட்டிருக்கின்றது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரியவில்லை.

அதிகாரிகளுக்கு அதிக ஊதியம் கிடைக்கிறது. அதிகாரிகளுடைய அளவைப் பார்த்தால் குறைவான அளவு அதிகாரிகள் என்று சொல்ல முடியாது. செயலாளர், இணைச் செயலாளர், துணைச் செயலாளர் என்று கோப்புகள் மாறி, மாறி போய்க்கொண்டிருக்கின்றனவே தவிர எந்த நடவடிக்கையும் கிடையாது. மனுக்கள் எல்லாம் 1988-லிருந்து நிலுவையில் இருக்கின்றன. அதிகாரிகளுக்குச் சம்பளப் பிரச்சினை கிடையாது. ஆனால், பல மனுக்கள் விசாரணை இல்லாமல் பல மாதங்களாக தலைமைச்செயலகத்தில் அப்படியே இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தினால் சுருக்கமாகச் சொல்லி முடிக்கிறேன். பல கோப்புகளில் 6 ஆண்டு காலம், 7 ஆண்டு காலம் என்று விசாரணையே இல்லாமல் இருக்கின்றன. ஏழையெளிய மக்கள், கிராமப்புற மக்கள் இதிலே கஷ்டப்படுகிறார்கள். என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களே தாளம் போட வேண்டியிருக்கிறது. பல தடவை செயலாளர்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது.(மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகளுக்கு நில ஆணையரிடத்தில்தான் வந்து முடிவுபெற வேண்டும் என்ற அவசியம் இல்லை. அது இறுதிக் கட்டமான நிலையாகும். கோட்ட நிலையிலே அதற்கு முடிவு காணலாம். R.D.O. நிலையிலேயே அதற்கு முடிவு காணலாம். நீங்கள் அதற்கு D.R.O. நிலையிலே முடிவு காணலாம். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் அதற்கு முடிவு காணலாம். எனவே, அங்கேயே அதற்கான வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. அது முடிவுறாத நிலையில்தான் இங்கே ஆணையாளரிடத்திலே வருகிறது. இந்த விவரம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களையே பயன்படுத்தி இருக்கலாம், துரிதப்படுத்தி இருக்கலாம். அது நடக்கவில்லை என்றால், எந்தெந்த வழக்குகள் நடக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு இந்த அரசுக்குத் தருவார்களேயானால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல நோக்கத்தோடு Ceiling Act-ஐ ஏழை எளியவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வந்தார்கள். ஆனால், குடிசைக்கு நிலம்கூட இல்லாதவர்கள், நிலம் கிடைக்கும் என்று விரும்புகிறபோது,



நிலப்பசி உள்ளவர்கள் மனுப்போட்டு விடுகிறார்கள். அவனிடமிருக்கிற முதலீடு என்ன என்றால், ஒரு ஆடு வளர்க்கிறான், அல்லது ஒரு மாடு வளர்க்கிறான், இல்லையென்றால் இரண்டு கோழிகள் வளர்க்கிறான். அதை விற்றுவிட்டு மனை வாங்கிப்போடுகிறான். ஆனால் அந்த நிலம் கிடைக்காமல், R.D.O. மட்டத்திலே, Tahsildar மட்டத்திலே வழக்குகள் பல ஆண்டுக்காலம் நடந்து, மீண்டும் அது தலைமை ஆணையாளரிடம் வந்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்க முடியாமல், இன்னும் சொல்லப்போனால், நிலப் பசியினால் எங்களுடைய மாவட்டத்திலே கொலைகூட நடந்திருக்கிறது. ஆனால், நிலம் கிடைத்தபாடில்லை என்பதால், இந்த வழக்கிலே நேரிடையாக சம்பந்தப்பட்ட காரணத்தினாலே சொல்கிறேன். ஆகவே, அதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது அந்த மாவட்டத்திலே மக்கள் குறை தீர்க்கும் நாள், மனு நீதி நாள் சிறந்த முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகையால், அங்கு வரக்கூடிய மனுக்கள் மீது உரிய விசாரணை நடத்தி மனு கொடுப்பவர்களுக்கு, பதில் கிடைக்கக் கூடிய அளவிற்கு வருங்காலத்தில் மாவட்ட நிருவாகம் நடவடிக்கை ,எடுக்க வேண்டும் என்று சொல்லி, பேச அனுமதி தந்ததற்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரி மற்றும் மாவட்ட நிருவாகம் மானியக் கோரிக்கைகளின்கீழ் சில விவரங்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகளிலே என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு முன்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் இன்று காலையிலே தமிழ்நாட்டிலே நீண்ட காலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருந்த 11,000 ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக அவர்களை நிரந்தரம் ஆக்குவோம் என்ற அறிவிப்பை இந்த அவையிலே செய்தார்கள். அந்த 11,000 தொழிலாளர்களின் குடும்பங்களின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிக வரித் துறையிலே கருத்துக்களை நான் சொல்வதற்கு முன்பாக நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த இந்த ஆட்சிதான் வணிகர்களுடைய நலனிலே அக்கறை கொண்ட அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது; வணிகர்களை மதிக்கும் அரசாக இருந்துகொண்டிருக்கிறது; முதலமைச்சரை எளிதாக சந்திக்கும் அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது; குறைபாடுகள் ஏதாவது சொன்னால், அதைக் காது கொடுத்து கேட்கின்ற அரசாக இருந்து கொண்டிருக்கிறது; அதுமட்டுமல்லாது குறைபாடுகளைக் களையும் அரசாகவும் நம்முடைய முதலமைச்சர் தலைமையிலே அமைந்துள்ள அரசு இருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிகர்கள் மத்தியிலேயும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலேதான் எந்தவிதமான தொந்தரவும், இடைஞ்சலும் இல்லாமல் வியாபாரம் செய்கிறோம். தங்களுக்குண்டான பிரச்சினைகளை எடுத்துச் சொன்னால், அவற்றை உடனடியாகப் போக்கி, அவற்றை நிவர்த்தி செய்யுமுகத்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணம் தமிழகத்திலே இருக்கின்ற வணிகத் துறையைச் சார்ந்த அத்தனை வியாபாரிகள் மத்தியிலேயும் அவர்களுடைய சங்கங்கள் மத்தியிலேயும் இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில நிமிடங்களுக்கு முன்பாக குறிப்பிட்டார்களே அந்தவகையிலே இந்தியாவிலேயே இன்னும் சொல்லப் போனால் ஆண்ட முதலமைச்சர்கள் அத்தனை பேருக்கும் இல்லாத பெருமை நம்முடைய தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பாக தமிழகத்திலே இருக்கக்கூடிய வணிகர் சங்கங்களினுடைய தலைவர்கள், அதனுடைய செயலாளர்களை அழைத்து அவர்களுக்கு என்ன சிக்கல்கள் இருக்கின்றன, என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று கேட்டு, அவற்றையெல்லாம் எப்படி நிவர்த்தி செய்யலாம் என்பதைக் கேட்டு, அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் பல பொருள்களுக்கு வரிவிலக்குக் கொடுத்து இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவள்ளுவர் சொல்லியிருக்கின்றார்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"





என்று. அண்ணாமலை அரசர், செட்டிநாட்டு அரசர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய முகப்பிலே இந்த வரியைத்தான் எழுதி வைத்திருக்கின்றார். பொருட்களைச் சேர்ப்பதும் அந்தப் பொருள்களின் மூலமாக வருவாயைப் பெருக்குவதும், வருவாயைப் பெருக்கி அதைக் காத்தலும், காத்ததற்குப் பின்னால் அதை மக்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் பிரித்துக் கொடுத்தலும் தான், ஒரு அரசின் நல்ல நிருவாகமாக விளங்கும். அந்த அடிப்படையில் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப நம்முடைய முதல்வர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு வணிகர்கள் நலனை, மக்கள் நலனைக் காத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

தமிழக அரசின் வரி விதிப்புக் கொள்கையானது மற்ற மாநிலங்களைவிட மிக வித்தியாசமான முறையில் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏழை மக்கள் அன்றாடம் உபயோகிக்கக் கூடிய பொருட்களின்மீது எந்தவிதமான வரி விதிப்பும் செய்யாமல், அவர்களுடைய அன்றாட பிரச்சினையில், நல்ல முறையில் பொழுது விடிந்தால் நிம்மதியாக இருக்கின்ற வகையில் அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய அத்தனை பொருட்கள் மீதும் உள்ள வரியை கலைஞர் அவர்கள் நீக்கியிருக்கிறார்கள். எனவே, ஏழைகளின் மீது அக்கறை கொண்டு வரிகளைச் சுமத்தாமல், வணிகர்களையும் காக்கின்ற முறையில் வரி விதிப்பினை முதல்வர் அவர்கள் செய்து வருவது பாராட்டத் தகுந்தது.

அதேபோல, உற்பத்திப் பெருக்கம் இருக்க வேண்டும்; வேலைவாய்ப்பும் பெருக்கம் இருக்க வேண்டும். இதை மனதில் வைத்தால்தான் ஏழை மக்களும், நாடும் முன்னேறும், செழிப்பாக இருக்கும், அந்த விதத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் வரி விதிப்பை அமைத்துள்ளார். உள்ளூர் கொள்முதல் உயர வேண்டும், உள்ளூர் தயாரிப்பை ஊக்குவித்தல் வேண்டும். நம்முடைய வியாபாரிகள் அண்டை மாநிலங்களுக்குச் செல்லாமல் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் நம்முடைய அரசு விளங்கி வருவது பாராட்டத் தகுந்தது.

வரி விதிப்பிற்கே சுவாரஸ்யமான ஒரு பின்னணிக் கதை உண்டு. 1938-39-லே சென்னை மாகாண பிரிமியர், இராஜகோபாலாச்சாரி அவர்கள் விருதுநகருக்குச் சென்றார்கள் ஒரு குடிநீர்த் திட்டத்தைத்

திறந்து வைப்பதற்காக. அங்கே சென்ற நேரத்திலே, அங்கேயிருக்கின்ற நாடார்கள், வணிகர் இனத்தைச் சேர்ந்தவர்கள் பள்ளிக்கூடங்களைத் தங்களுடைய வணிகர் சங்கத்தின் சார்பாக நடத்தி வந்தார்கள். இராஜகோபாலாச்சாரி அவர்கள் அதை எப்படி நடத்துகிறார்கள் என்று கேட்டார்கள். அவர்கள் கேட்ட நேரத்திலே அங்கே வியாபாரிகளாக இருக்கின்ற நாடார்கள் சொன்னார்கள். நாங்கள் மகமை என்ற ஒன்றை - ஒரு ரூபாய்க்கு தம்பிடி என்கின்ற அளவிற்கு வசூல் செய்கின்றோம். அதிலே வருகின்ற பணத்தை வைத்து நாங்கள் பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கிறோம் என்று சொன்னார்கள். அதை அடிப்படையாக வைத்துத்தான் 1939 ஆம் ஆண்டு இராஜகோபாலாச்சாரி அவர்கள் நம்முடைய மாநிலத்திலே விற்பனை வரியைக் கொண்டு வரலாம் என்று முடிவுசெய்து, அப்போதுதான் முதன்முதலில் ஒரு வருடத்திலே ரூ. 35 லட்சம் வசூல் செய்யப்பட்டது. ஆனால் இப்போது தமிழக அரசின் வரி வருவாயினுடைய வருமானம் ரூ. 6,000 கோடிக்கு மேல் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள்தான் வணிகர் நல வாரியத்தை அமைத்தார்கள். 1989-ல் அமைத்து, அதற்குப் பின்னால் 1997-லே அது திருத்தியமைக்கப்பட்டது. அது திருத்தி அமைக்கப்பட்டதற்குப் பின்னால், வணிகர்கள் வைத்த பல கோரிக்கைகளின் அடிப்படையில் வணிகர்களுடைய குடும்பங்களுக்கு நமது அரசு பாதுகாப்பாக இருக்கிறது. ஏறத்தாழ 34 வணிகக் குடும்பங்களுக்கு ரூ. 10,25,000 நிதியாக முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். வணிகர்கள் சிறுநீரக அறுவை சிகிச்சை செய்து கொண்டதற்காக ரூ. 83,000 வழங்கியிருக்கிறார்கள். மாணவ, மாணவிகளுக்கு ரூ.42,000 வழங்கியிருக்கிறார்கள். 1996-லே விற்பனை வரி சீரமைப்புக் குழுவை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஓய்வுபெற்ற மிக நேர்மையான I.A.S. அதிகாரியான, தங்கராசு அவர்களுடைய தலைமையில் அந்த விற்பனை வரி சீரமைப்புக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் அத்தனையையுமே நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் படிப்படியாக நிறைவேற்றி வருவதைக் கண்டு வணிகர்கள் பெருமிதம் அடைந்துள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல பலமுனை வரி இருந்தது, அதை ஒரு முனை வரியாக— Single Point Tax நம்முடைய முதல்வர் அவர்கள் 1989-லே கொண்டுவந்தார்கள். அதற்குப் பின்பாக வந்த முந்தைய ஆட்சியில் அதை மீண்டும் பலமுனை வரியாக மாற்றினார்கள். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் மீண்டும் பொறுப்பேற்றதற்குப் பின்பு அந்த வரி விதிப்பையே மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். பல்வேறுபட்ட வரிச் சலுகைகளை இந்த மூன்று ஆண்டுகாலத்தில் முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.



1996-97 ஆம் ஆண்டு ரூ. 353 கோடி வரிச் சலுகைகளை தமிழக மக்களுக்கு வழங்கினார்கள். 1997-98-லே ரூ. 143 கோடிக்கு வரிச் சலுகைகளை வழங்கினார்கள். 1998-99-லே ரூ. 816 கோடிக்கு வரிச் சலுகைகளை வழங்கினார்கள். இந்த ஆண்டு 1999-2000-லே சுமாராக ரூ.25 கோடிக்கு வரிச் சலுகைகளைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போதுகூட நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே பல பொருள்களுக்கு முழு வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த முழு வரி விலக்கு கொடுத்தாலும்கூட, அந்தப் பொருட்களினுடைய விலை உயராமல் இருப்பதற்காக விலைக் கட்டுப்பாட்டுக் குழுவை அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், வணிகர்கள் தங்களுக்கு ஏதாவது தாவா வந்தால் மேல்முறையீடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே பல கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு வருவாய் வர வேண்டியது இப்போது நிலுவையில் இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் குறைகளைப் போக்கும் முகத்தான் சமாதானத் திட்டத்தை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை விரைவிலே செயல்படுத்தி, அவர்களுக்கு அந்த மேல்முறையீட்டில் விரைந்து வழக்குகளை முடிப்பதற்கு உண்டான வழிவகைகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அதேபோன்று, மேல்வரி, கூடுதல் மேல்வரி ஆகியவற்றை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் நீக்கியுள்ளார்கள். அதை வணிகர்கள் சார்பாக வரவேற்கின்றேன்.

இரண்டாவது, சில வரிச் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமாறு நான் எங்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த இறுதி முடிவு எடுக்கிறார்களோ, அதுதான் எங்களுடைய கருத்து என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறுதொழில் மூலமாக Paint உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுக்கு கேரளாவிலே 6 சதவீதம், ஆந்திராவிலே 7 சதவீதம், நம் மாநிலத்திலே 16 சதவீதம் என்று வரி இருக்கிறது. எனவே, நம்முடைய மாநிலத்திலே சிறு தொழில் மூலமாக Paint உற்பத்தி செய்கின்றவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அதைப் பக்கத்து மாநிலங்களில் இருப்பதைப்போல 6 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத்திற்குப் பயன்படுத்தும் Sprayer, அதற்கு 11 சதவீதம் இப்பொழுது நமது மாநிலத்திலே வரி விதிக்கிறோம். அது அன்றாடம் விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய ஒரு பொருள். அதை வைத்துத்தான் நம்முடைய வயல்களில் களைகளைக் களைகிறோம். பூச்சிகளையெல்லாம் அழிக்கிறோம். எனவே, இந்த Sprayer-க்கு முற்றிலுமாகவே வரிச்சலுகை கொடுக்கலாம். அப்படியில்லை என்றால் 1 சதவீதம் வரி விலக்குக் கொடுக்கலாம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சூடம். எல்லோரும் பேசியதைப் போல சூடத்திற்குண்டான அந்த பொடிக்கு 11 சதவீதம் வரி இப்போதிருக்கிறது. அதை ஒரு சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, டிட்டர்ஜென்ட் சோப். அதைக் கைத் தொழிலாக நாம் கருதினால் அதற்கு 4 சதவீதம் வரி போடுகிறோம். ஆனால், இந்த டிட்டர்ஜென்ட் சோப் உற்பத்தியைக் கைத்தொழிலாகச் செய்ய முடியாது. இயந்திரம் மூலமாகத்தான் அது செய்யப்படும். அதற்கு 16 சதவீதம் வரி இருக்கிறது. எனவே அந்த 16 சதவீதத்தைக் குறைத்து, டிட்டர்ஜென்ட் சோப் எல்லாவற்றுக்குமே 4 சதவீதம் என்ற வகையிலே கொண்டுவர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மெல்லிழைக் கோணிப் பைகள். இந்த கோணிப் பைகளுக்கு அகில இந்திய அளவிலே அவர்கள் Tender போட்டுத்தான் மிகப்பெரிய ஆலை அதிபர்கள் தங்களுடைய வாயிலிலே என்ன விலைக்குக் கொடுக்கிறார்களோ அந்த விலைக்கு அதை எடுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே அதற்கு வரி 4 சதவீதமாக இருக்கிறது. ஆனால், அண்டைமாநிலங்களிலே இந்த மெல்லிழைக் கோணிப் பைகளுக்கு இரண்டு சதவீதம் தான் இருக்கிறது. எனவே, நம்முடைய



வியாபாரிகள், தயாரிப்பாளர்கள் அவர்களிடம் போட்டி போட முடியவில்லை. அகில இந்திய அளவிலே நடக்கின்ற இந்த Tender-களிலே கலந்துகொள்ள முடியவில்லை. எனவே, அதற்கு 4 சதவீதம் என்பதை 2 சதவீதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தமிழ் மக்கள் அன்றாடம் காலையிலே எழுந்தால் நாட்காட்டியிலே ஒரு தாளை தங்களுடைய வாழ்நாளைக் கழிப்பதைப் போல கிழித்துவிடுவார்கள். எனவே, அதற்கு வரியை தற்போது நம்முடைய முதல்வர் அவர்கள் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது, இந்த வியாபாரிகள் தாள் வாங்குகிறபோது ஒரு வரியைச் செலுத்திவிடுகிறார்கள். மீண்டும் அந்தத் தாளிலே நாட்காட்டியைத் தயார் செய்து, தமிழ்நாட்டு மக்களுக்கு, வழங்குகிறார்கள். எனவே, ஏற்கெனவே வரி செலுத்தியதற்குப் பின்னரும் மீண்டும் ஒரு வரியை, நாள்காட்டியாக மாறும்போது செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அதை முற்றிலுமாக நீக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படியில்லை என்றால் ஒரு சதவீதம் போட்டால்கூடப் போடலாம்.

அதேமாதிரி, இப்போது, பதப்படுத்தப்பட்ட பழரசம், Fruit Juice அதற்கு 11 சதவீதம் வரி. இப்போது பெப்சி, கொக்கோ-கோலா, நம்முடைய நாட்டிலே தயார் செய்வது. நம்முடைய மாநிலத்திலேயும் தயார் செய்வது. எல்லாவற்றுக்கு சேர்த்து சமமாக வரி போடுகிறோம். ஆனால் மத்திய கலால் வரி 40 சதவீதம் இருந்துகொண்டிருக்கிறது. இதனால் என்ன ஆகிறது என்றால் பெப்சி, கொக்கோ-கோலா இவற்றோடு நம்மாலே போட்டி போட முடியவில்லை. அதனாலே நம் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பதப்படுத்தப்பட்ட பழ ரசத்திற்கு 4 சதவீத வரி விதிக்கிற ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறு தொழில்களை ஊக்கப்படுத்துகிற விதத்திலே, கேரளாவிலே எவ்வளவு சிறு தொழில் மூலமாக உற்பத்தி செய்து விற்றாலும் சரி, அவற்றிற்கு 6 சதவீதம் வரி போட்டிருக்கிறார்கள். அதேபோன்று, இங்கு சிறு தொழில்களை ஊக்கப்படுத்துவதற்கு 6 சதவீதம் வரி கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. குழந்தை தமிழரசன்:** இன்னும் இரண்டே இரண்டு நிமிடங்கள். அதேபோன்று, இந்தக் காகித உறைகள் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து 4 சதவீதம் வரி போட்டிருக்கிறார்கள். அதிலே சில காகிதங்கள் விடுபட்டிருக்கிறது, சில காகிதங்கள் விடாமல் இருக்கிறது என்று சொல்லி ஒரு சிறு குழப்பம் வந்திருக்கிறது. எனவே, ஒட்டுமொத்தமாக இந்த அரசு போட்டிருக்கிற Paper and Paper Boards of all sorts including Computer Stationery என்று ஒரு வாசகத்தைப் போட்டுவிட்டால், இன்று எந்த காகிதம் அதிலே சேருகிறது, அந்த G.O.-விலே சேருகிறது, சேரவில்லை என்கிற குழப்பத்தைத் தவிர்த்து விடலாம். அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மொசைக் டைல்ஸ், அதற்கான வரியையும் குறைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய மாவட்ட அளவிலே உள்ள ஒரேயொரு செய்தி. நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் ஆட்சியமைத்ததற்குப் பின்னால் மாவட்ட நிருவாகம் மிகச் சிறப்பாகச் செம்மையாக நடைபெறுகிறது. அதிகாரிகள் மக்களுடைய பிரச்சினைகள் என்றால் ஓடோடி வருகிறார்கள். மனுநீதி நாள் முகாமிலிருந்து மனுக்களைப் பெறுவதற்கு ஒவ்வொரு மாதத்திலேயும் புதன்கிழமையன்று நாம் மனுக்களைப் பெற்று அதிலே இருக்கக்கூடிய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கிறோம். பல கோரிக்கைகள் வருகின்றன. கலைஞர் அவர்களின் அரசாங்கம் செய்து கொடுக்கின்ற காரணத்தினால், கோரிக்கைகள் அதிகமாக வருகின்றன. எனவே, மாவட்ட நிருவாகம் இன்னும் விரைந்து செயல்படுவதற்கு, மாவட்ட நிருவாகம் என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்கக் கேட்கிறதோ அவற்றைச் செய்து கொடுக்க வேண்டும்.

எங்கள் கடலூர் மாவட்டத்திலே இருக்கிற என்னுடைய தொகுதி விருதாச்சலத்திலே, வட்டாட்சியர் அலுவலகம் 100 வருடங்களுக்கு முன்னாலே கட்டிய கட்டடம். அதைப் புதிதாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். இரண்டாவது, மங்கலம்பேட்டையை மையமாக வைத்து இரண்டு ஒன்றியங்களிலே 110 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பெரிய பஞ்சாயத்து, அதனாலே மாவட்ட நிருவாகம் உடனடியாக வந்து



மக்களுக்குத் தேவையான பணிகளைச் செய்ய முடியவில்லை. எனவே, கம்மாபுரம், விருத்தாச்சலம் ஆகிய இரண்டு பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த 110 கிராமங்களிலேயிருந்து மங்கலம்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு இன்னோர் ஒன்றியத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, இவ்வளவு நேரம் அனுமதி கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகம், அதிலும் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறப்பாகச் செயல்படுவார்களேயானால், மக்களின் பிரச்சினைகள் பலவற்றுக்கு மாவட்ட அளவிலேயே தீர்வு காண முடியும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அவ்வளவு அதிகாரம் இருக்கிறது. பொதுவாக பல்வேறு துறைகள், ஏறக்குறைய 28-க்கும் மேற்பட்ட மானியக் கோரிக்கைகள். அவற்றுக்கான துறைகள், இலாக்காக்கள் இவை அனைத்தும் இருந்தாலும் இவற்றையெல்லாம் மாவட்ட அளவிலே ஒருங்கிணைத்து இந்த அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும் தலைமையேற்று அந்த மாவட்டத்திலே வளர்ச்சிப் பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டியவரும், விரைவுபடுத்த வேண்டியவரும் மாவட்ட ஆட்சித் தலைவர்தான். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதற்குக் கீழே இருக்கிற மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் சிறப்பாக, இன்னும் வேகமாக துரிதமாகச் செயல்பட வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வரைப் பொறுத்தவரையில், விடியற்காலை 4-00, 4-30 மணிக்கே கோட்டைக்கு வந்து, தேவையானால் மக்களுக்காக இரவு முழுவதும் விழித்திருந்து பாடுபடக்கூடிய (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஒரு சிறந்த முதலமைச்சரைத் தமிழகம் பெற்றிருக்கிறது. மாவட்ட அதிகாரிகளும் மாண்புமிகு முதலமைச்சரை முன்னோடியாகக் கொண்டு அதே முனைப்பை, வேகத்தை அந்தந்த மாவட்டங்களிலே காட்ட வேண்டும். அதற்கேற்ற விதத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, மாவட்ட நிருவாகத்திற்கு தேவையான நவீன அடிப்படை வசதிகள் அனைத்தையும் அரசு செய்து தருவது மிக மிக அவசியமாகும். மாவட்டங்களிலே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் என்று முன்பெல்லாம் நடைபெற்று வந்தது. இப்போது என்ன காரணத்தாலோ

[திரு. குழந்தை தமிழரசன்] [1999 ஏப்ரல் 9

இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெறுவதில்லை. ஒருமுறை மாண்புமிகு முதலைச்சர் அவர்கள்கூட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அப்படிக் கூட்டினால் யாரும் வருவதில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொல்வதாகச் சொன்னார்கள். ஏதாவது ஒன்றிரண்டு மாவட்டங்களிலே ஒரு முறையோ இரு முறையோ அப்படி நடந்திருக்கலாம். ஆனால், சரியாக, முறையாக முன்கூட்டியே தகவல் தந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்தைக் கூட்டுவார்களேயானால் அது நிச்சயமாக பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வசதியாக இருக்கும். பொதுவாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே கலந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்களோ, மக்கள் பிரதிநிதிகளோ....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டத்தினுடைய 73 ஆவது திருத்தத்தின்படி பஞ்சாயத்து அரசு அமைக்கும்போது 3 அடுக்கு முறை வந்துவிட்டது. எனவே, கீழ்மட்டத்திலே ஊராட்சி, அதன் பிறகு ஊராட்சி ஒன்றியம், பிறகு மாவட்ட அளவிலே, மாவட்ட ஊராட்சி என்று அமைக்கப்பட்டு விட்டது. மாவட்ட ஊராட்சிகளுக்கு இன்றையதினம் District Development Council-ஐப் பணிக்கக்கூடிய அளவிற்குச் சில அதிகாரங்கள் அதிகாரபூர்வமாக அரசமைப்புச் சட்ட ரீதியாகவே வழங்கப்பட்டிருக்கின்றன. District Development Council என்பது அந்த காலத்தில் ஒரு Advisory Bodyதான். அது Constitutional Body-யோ, Statutory Body-யோ அல்ல. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற மாவட்ட ஊராட்சி என்பது ஒரு Constitutional Body, Statutory Body.

முற்பகல் 11-50

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பெல்லாம் அது இரண்டு அடுக்காக இருந்தது. பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம் என்று இருந்தது. அதிலே புதியதாக வந்திருப்பது மாவட்டப் பஞ்சாயத்து என்பதுதான். எனவே, முன்பு இரண்டு அடுக்கு முறையிலே இருந்தபோது எப்படி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் நடைபெற்றனவோ அதுபோல் இப்போதும்— நீங்கள் சொல்வதை நானும் ஒத்துக் கொள்கிறேன். அது ஒரு Advisory Committee-தான். எனவே, நடைமுறைப்படுத்துகிற அதிகாரம் அந்தக் குழுவிற்கு இல்லை என்பதை நானும் உணர்வேன்; அறிவேன். ஆயினும்,



1999 ஏப்ரல் 9] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அந்தக் கூட்டங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்கிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் எல்லாத் துறைகளினுடைய அதிகாரிகளும் அங்கே உட்கார்ந்திருப்பார்கள். நேருக்கு நேராக ஒரு பிரச்சினையைப் பற்றியோ, ஒரு தவறு நடந்திருந்தால் அந்தத் தவறைச் சுட்டிக்காட்டுகிற வாய்ப்போ, அந்தந்தத் தொகுதியினுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லுகின்ற வாய்ப்போ, அதற்கு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட அதிகாரியை அழைத்து, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று பதில் கேட்கின்ற அந்த வாய்ப்போ இவையெல்லாம், இதனாலே நிருவாகம் செம்மைப்படுகிற, பொது மக்களின் கருத்துக்கள் அவர்களுக்கு நேரடியாகச் சென்றடைகின்ற வாய்ப்பு, பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்கிற காரணத்தினாலே, இந்த மூன்றடுக்கு முறை வந்துவிட்ட காரணத்தினாலே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் தேவையில்லை என்று எந்த அரசமைப்புச் சட்டத்திலேயும் அல்லது பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலேயும் சொல்லப்படவில்லை. ஆனால் இதிலே சில அதிகாரிகளுக்கு, vested interest இருக்கலாம். என்னவென்றால், அவர்கள் நேரடியாக இதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம், கட்டாயம் அவர்களுக்கு வருகிறது. ஏனென்றால் M.L.A.க்கள் போய் உட்கார்ந்து கொண்டால், Chairman உட்கார்ந்து கொண்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் குறை சொல்வதற்கான வாய்ப்பு வருகிறது. சில நேரங்களிலே இதைத் தவிர்ப்பதற்காகவே வேண்டாம் என்கிற அளவிலே மாவட்ட நிருவாகத்திலே உள்ளவர்கள், அந்த முடிவை எடுக்கலாம். ஆனால், அரசைப் பொறுத்தவரையில், பிரச்சனைகள் பேசப்பட்டு, அதற்குத் தீர்வு காண வேண்டுமென்று விரும்புபவர் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் என்கிற காரணத்தினாலே இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் தொடர்ந்து இருந்தால் அது மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்தக் கருத்தை இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதிலே ஒன்றும் தவறு கிடையாது. அதிகாரிகள் வேண்டுமானால் யோசிக்கலாம், ஏதாவது வந்து பேசிக் கொண்டிருப்பார்கள் என்று கருதி ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்களைப் பொறுத்தவரையில், நேற்றுகூட இரண்டு நாட்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் அவர்கள் நிதி நிலை அறிக்கை என்றால் என்ன, அது எப்படித் தயாரிக்கப்படுகிறது, இதையெல்லாம் அதிகாரிகளே விளக்க வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையிலே, நிதித் துறைச்

செயலாளர் அவர்கள்வந்து உண்மையிலேயே மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார். பொதுவாக அவர்கள், நிதித் துறைச் செயலாளர்கள் எல்லாம், ஆங்கிலத்திலேதான் பேசுவார்கள், ஆனால், தமிழிலே மிகச் சிறப்பாக, வகுப்பு நடத்துவது மாதிரி, அனைவருக்கும் புரிகிற விதத்திலே சொன்னார், அநேகமாக அடுத்த நிதித்துறை அறிக்கை விவாதத்தில் பார்த்தால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் -- எதற்கும் தயாராக எப்பொழுதும் வரக்கூடியவர், அதில் ஒன்றும் சந்தேகமே கிடையாது. இருந்தாலும் -- கேள்விகளை அதிகமாக எதிர்பார்க்கலாம், ஏனென்றால் அந்த அளவுக்கு நிறைய விஷயங்களைப் புரிந்து கொண்டார்கள் பலபேர், வந்திருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ..

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, உறுப்பினர்கள் ஒரு நாள்தான் நிதிச் செயலாளரிடத்திலே பாடம் கேட்டிருக்கிறார்கள். நான் தினம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இல்லை. நிதித் துறை செயலாளர்களுக்கே பாடம் நடத்தக்கூடிய அளவுக்கு உங்களுக்கு அனுபவம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். உங்களுடைய நீண்ட அனுபவம், அறிவாற்றல் காரணத்தினாலே பலவற்றிற்குத் தீர்வு காணக் கூடியவர் நீங்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே, அந்த அறிவிலே கொஞ்சமாவது எல்லோருக்கும் வர வேண்டுமென்ற காரணத்தினாலே, அந்த உணர்வுகளை எல்லோரும் பெற வேண்டும் என்ற காரணத்தினாலே நீங்கள் சொன்ன அந்தப் பயிற்சி மிகச் சிறப்பாக இருந்தது. இதை நான் குறிப்பிடக் காரணம், இப்படிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்; எல்லோரும் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு கேள்வி கேட்க வேண்டும், அவற்றின் மூலமாக விளக்கங்கள் நாட்டு மக்களுக்குத் தரப்பட வேண்டும் என்று விரும்புகிற மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடக்கிற இந்த அரசு, இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே எல்லா அதிகாரிகளும் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவரும் கலந்து கொள்கிறபொழுது பல பிரச்சினைகள் பேசப்பட்டு தீர்வு காணக்கூடிய வாய்ப்பு அங்கேயே ஏற்படும். எனவே, ஏற்கெனவே நான் குறிப்பிடும்பொழுது சொன்னதைப்போல, முதலமைச்சரவர்கள் எவ்வளவு வேகமாகவும், முனைப்பாகவும் செயல்படுகிறாரோ, அதே வேகம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இருக்குமேயானால் மாவட்ட அளவிலேயே பல பிரச்சினைகளுக்கு, மக்கள்



பிரச்சினைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறப்பாகச் செயல்பட்டால் தீர்வு கண்டுவிட முடியும். எல்லா இலாக்காக்களையும் Co-ordinate பண்ணிச் செயல்படக் கூடியவர் மாவட்ட ஆட்சித் தலைவர்தான். எனவே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தினை நடத்த ஏற்பாடு செய்யலாம் என்கிற என்னுடைய அபிப்பிராயத்தை மீண்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட வளர்ச்சி மன்றம் எவ்வளவு முக்கியமானது என்பதை நானும் நன்றாக உணர்வேன். நான் ஏற்கெனவே குளித்தலை, தஞ்சை போன்ற இடங்களில், கிராமம் சார்ந்த பகுதிகள், நகரம் சார்ந்த பகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, அந்த வளர்ச்சி மன்றக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். எந்த அளவுக்கு அதிலே விவாதங்கள் நடைபெறுகின்றன; எந்தெந்தப் பிரச்சினைகள் விட்டுப் போய் விட்டன; எந்தெந்தத் திட்டங்கள் விட்டுப் போய் விட்டன என்பதை எல்லாம் எடுத்துக் கூறி, மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையிலே விவாதித்துத் தீர்வு காண வசதியாக இருந்தது. ஆனால், இந்தப் பஞ்சாயத்து முறை வந்த பிறகு, ஏற்கெனவே இருந்த, பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே வகுக்கப்பட்ட பஞ்சாயத்து முறைக்கு மாறாக, பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய காலத்திலே வகுக்கப்பட்ட இந்தப் பஞ்சாயத்து முறையில், 3 அடுக்குகள் என்று வந்த பிறகு, 2 அடுக்குப் பஞ்சாயத்து முறையிலே இருந்த நல்ல பல காரியங்கள் விடுபட்டுப் போய்விட்டன. இருந்தாலும், இருப்பதற்குள்ளே எதை, நல்லதைக் காணலாம் என்கின்ற முயற்சியிலேதான் ஈடுபட்டிருக்கின்றோம்.

உள்ளாட்சித் துறை மானியம் விவாதிக்கப்படுகிற நேரத்தில், மேலும் பஞ்சாயத்துக்களுக்கு இன்னின்ன அதிகாரங்கள் தரப்பட வேண்டும் என்று ஏற்கெனவே குழு மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளையெல்லாம் எடுத்துரைத்து, விவாதிக்க இருக்கின்றோம். அதற்கிடையிலே இப்போது இந்த District Development Council அமையலாமா, அமையக் கூடாதா என்பதிலே இரு வேறு கருத்துக்கள் இருக்கின்றன. அதுபற்றியும் ஆலோசித்து — அதற்காகத்தான் அந்த மானியத்தைக்கூட இந்தக் கூட்டத் தொடரின் இறுதியில் கொண்டுவர

இருக்கிறோம். அதற்கிடையில், அதைப்பற்றியும் யோசித்து, விவாதித்து, முடிவெடுக்கலாம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

முற்பகல் 11-55

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், அதை யோசிக்கிறேன் என்று அவர்கள் சொன்னாலே நிச்சயமாக நல்லதாக இருந்தால் அதைச் செய்வார்கள் என்று அர்த்தம் என்கின்ற காரணத்தாலே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

சென்ற ஆண்டு கூட 10 தாலுகாக்கள் புதியதாக உருவாக்கப்பட்டன. இந்த ஆண்டும் சில தாலுகாக்களை உருவாக்குகிறபோது, புதுக்கோட்டை மாவட்டத்திலே ஆலங்குடி தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரே தாலுகாவாக இருந்தது தொகுதி முழுவதும். அதிலே கறம்பக்குடி என்ற பகுதியைத் தனி தாலுகாவாக்க வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையாகும். தி.மு.க., த.மா.கா., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் என்று எல்லா கட்சிகளின் சார்பிலும் ஒரு குழு அதற்காக முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வருகிறபோது, அந்த ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக இருந்த திரு. பல்லவராயர், வருகிற வழியிலே கார் விபத்திலே சிக்கி மரணம் அடைந்தார். அவருக்கான இரங்கல் கூட்டத்திலே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் எல்லா கட்சிகளின் சார்பிலும் இதை வலியுறுத்திச் சொன்னார்கள். நானும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டபோது சொன்னேன். நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்று கறம்பக்குடியைத் தனித் தாலுகாவாக அமைக்க முயற்சி எடுக்கப்படும் என்று சொன்னேன். அதை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, கறம்பக்குடியைத் தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஆண்டுதோறும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டும் ஏறத்தாழ 15 தாலுகா அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட தாலுகாக்களைப்



பற்றிச் சொல்லும்போது, முதலில் தாலுகா கேட்போம், நீங்கள் தந்தால் அதற்கடுத்து கட்டடம்தான் கேட்போம். எனவே, இப்போது கட்டடம் வேண்டும். மணமேல்குடி, இலுப்பூருக்குக் கட்டடங்கள் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது இலுப்பூரைத் தாலுகாவாக மாற்றினோம், மணமேல்குடியை தாலுகாவாக மாற்றினோம். மாண்புமிகு உறுப்பினர் நன்றியே சொல்லவில்லையே என்றுகூட வருத்தப்பட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட அந்த விழாவிலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, அந்தந்தப் பகுதி மக்களின் சார்பிலே வெளிப்படையாக நன்றி தெரிவித்தேன். இங்கேயும் ஒரு முறை அல்ல, பல முறை நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கடந்த ஆட்சியின் ஐந்தாண்டுகளில், செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது மிகவும் புறக்கணிக்கப்பட்ட தொகுதியாக, ஒதுக்கப்பட்ட தொகுதியாக, என் மேலே இருந்த வெறுப்பையெல்லாம் என் தொகுதி மேலே காட்டி, ஒதுக்கிவைக்கப்பட்ட தொகுதியாக அந்தத் தொகுதி இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையில், அண்ணா தி.மு.க.வில் இருக்கிற உறுப்பினர் சுந்தரம் தொகுதிக்கே 50 கோடி ரூபாய்க்கு மேலே திட்டங்களை அறிவித்திருக்கிற முதலமைச்சராக எந்தவிதமான கட்சிப் பாகுபாடும் இல்லாமல் பொதுமக்களின் நலனை மனதிலே கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பலவற்றை நிறைவேற்றி வருகிறீர்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இலாகாவில் சம்பந்தம் உடையது இல்லை என்றாலும், எல்லா இலாகாவிலும் பேசமுடியாது, அதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இலாகா என்ற காரணத்தாலே ஒன்றே ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது நான் ஏற்கெனவே பேசியதுதான். காவிரியிலே - கொள்ளிடத்திலேயிருந்து காவிரி நதி நீர் உபரியாக வருகிற நேரத்தில், மற்ற மாவட்டங்களுக்குக் கொண்டுபோவதற்கான திட்டம், ஏறதாழ 120 கோடி ரூபாய் மதிப்பீடு, இங்கே ஆய்விலே இருக்கிற திட்டம். அதை, புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து

தர வேண்டுமென்று நான் அன்போடு, பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). அதிகமாக யாரும் பேசவில்லை. விரைவிலே பேசி முடித்துவிடுகிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில், இன்னும் ஒன்றிரண்டு பிரச்சனைகளைக் கொண்டு வருகிறேன். Lift Operator-கள் நம்மை கீழேயிருந்து மேலே ஒவ்வொரு மாடிக்கும் கொண்டு போகிறார்கள். வருகிறபோதெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மனுக்கள் கொடுத்திருப்பார்கள். அவர்களிடத்திலே கொடுக்க யோசித்திருந்தால் மற்ற அமைச்சர்களிடத்திலே கொடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். மத்திய அரசுக்கு இணையான சம்பளம் வேண்டுமென்று கேட்கிறார்கள். பொதுவாக, அவர்களுக்குப் பதவி உயர்வு கிடையாது. இரண்டாவது, அவர்கள் உடல் ஊனமுற்றவர்களாகத்தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். எனவே அவர்கள் எல்லாம் எங்களுக்கு மத்திய அரசுக்கு இணையான சம்பள உயர்வு வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

இன்னொன்று Service Commission, முதல் Group-ல் எடுக்கிறபோது வயது வரம்பு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர்கள் ஆகியோருக்கு 40-ஆக இருந்தது முன்பு, அதாவது துறை தேர்வு எழுதுகிறபோது. அதிலே ஒருசில பிரிவுகளுக்கு மட்டும் 40-ஆக வைத்துக்கொண்டு மற்ற பிரிவுகளுக்கு 35-ஆக செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது—1995 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன் — அந்த ஆண்டு அரசாணையை வெளியிட்டபோது அன்றைக்கு இருந்த எல்லா கட்சிகளின் சார்பிலே கண்டித்து அப்போது அறிக்கையெல்லாம் கொடுத்தோம். இப்போது அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், அந்தந்த துறையில் இருப்பவர்கள் அதிலே தேர்வு எழுதுகிறபோது வயது வரம்பை முன்பு இருந்தமாதிரி, புதிதாக ஒன்றும் கேட்கவில்லை, 40-ஆக இருந்தது, 35-ஆக குறைக்கப்பட்டது, மற்ற பிரிவுகளுக்கு உள்ளதைப்போல அதை 40-ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்கிறார்கள். எல்லா துறையிலேயும் பணியாற்றுகிற அரசு அலுவலர்களுடைய பிரச்சினை — ஜெயலலிதா காலத்திலே குறைக்கப்பட்டதை நீங்கள் சரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இன்னொன்று, சாதாரண பிரச்சினைதான். டிரைவர்களை பார்த்தீர்களென்றால், I.A.S., I.P.S., அதிகாரிகளுக்கு இருக்கிற டிரைவர்கள், I.A.S., I.P.S., அதிகாரிகள் சொந்தமாக கார் வாங்கினால் இந்த அரசு டிரைவர்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றிருக்கிறது. அதேநேரத்தில் வன அதிகாரிகள், I.F.S. அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்கள் தனியாக கார் வாங்கினால், அரசாங்க டிரைவர்களை திருப்பி அனுப்பி விடுகிறார்களாம். ஆனால், பயன்படுத்துவது அரசாங்க கார்களை. இவர்களைத்தான் கூப்பிட்டுப் பயன்படுத்துகிறார்கள். ஆகையினால் இரண்டு இடங்களிலே வேலை பார்க்க வேண்டியதாக இருக்கிறது என்று சொல்லி, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.-களுக்கெல்லாம் எப்படியிருக்கிறதோ அதேமாதிரி, பாரஸ்ட் சர்வீஸில் இருக்கிற அதிகாரிகளுடைய டிரைவர்களும் — அவர்களுக்கென்று சொந்த கார் வாங்கினால், சொந்த கார் என்றாலும் அரசாங்கத்திடம் கடன் வாங்கித்தான் வாங்குகிறார்கள். அப்படி வாங்குகிறபோது இந்த டிரைவர்களை அவர்களுக்குப் பயன்படுத்தி, எப்படி I.A.S., I.P.S.-களுக்கு இருக்கிறதோ அதேமாதிரி Forest அதிகாரிகளுக்கும்— உத்தரவு போட வேண்டுமென்று அதிலே பணியாற்றுகிற டிரைவர்கள், அவர்களுடைய பிரச்சினையை முதலமைச்சருடைய கவனத்திலே கொண்டு போக வேண்டுமென்றார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). ஒரே நிமிடத்திலே பேசி முடித்து விடுகிறேன்.

வணிக வரியைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய மொத்த வருமானத்திலே ஏறக்குறைய 70 சதவிகிதம் இதிலே வருகிறது. இந்த 70 சதவிகிதத்திலும் பார்த்தீர்களென்றால் கோட்டவாரியாகப் பார்த்தால், சென்னை மட்டும்தான்— சென்னை தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு என்று பிரிக்கப்பட்டது. அதிலே மட்டும் 4,880 கோடி ரூபாய். இந்த ஒரு Division-க்கு மட்டும் வருமானம் வருகிறது. அந்தமாதிரி, அடுத்து பார்த்தீர்களென்றால், கோவை 650 கோடி ரூபாய். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், வேலூரில் ரூ.147 கோடிதான் வருகிறது. அந்த Division-ல், வேலூரையடுத்து மதுரையிலே குறைவாக இருக்கிறது. அதாவது ரூ.195 கோடி அந்த area, அங்கேயிருக்கிற Business, தொழில்கள் இதெல்லாம் குறைவாக இருக்கலாம். அந்தப் பின்தங்கிய நிலையை கருத்திற்கொண்டு, இந்தப் பகுதிகளிலே இன்னும் கொஞ்சம்

முயற்சி எடுத்தால், வரியை கொஞ்சம் அதிகமாக அந்தப் பகுதியிலிருந்து வசூல் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

வசூலிப்பதற்கான செலவு என்று எடுத்துக் கொண்டால் 1997-98-ல் ஏறக்குறைய 70 கோடி ரூபாயாக இருக்கிறது. அது மொத்த வசூலிலே ரூ. 1.15%. 1998-99-லே ரூ.57 கோடியாகிறது. மொத்த வரவிலே செலவு என்பது 0.85%. எனவே, இது குறைந்திருக்கிறது. இது மிகவும் பாராட்டுக்குரியது; நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். யார் இந்தக் குறியீட்டை பூர்த்தி செய்கிறார்களோ அவர்களுக்கு ஊக்க ஊதியமோ அல்லது பதவி உயர்வோ இந்தத் துறையிலே கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்ற என்னுடைய யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, மொத்தம் 10,000 சொச்சம் கோடி ரூபாய் வருமானத்திலே, ஆறாயிரத்து சொச்சம் கோடி இதிலேதான் வருகிறது. 70 சதவிகிதம் இதிலேதான் வருகிறது. இந்தத் துறையின் மூலமாக அரசுக்கு வருமானம் வருகிறது. (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

இதிலே 1997-98-லே அரசுக்கு வரவேண்டிய வரி பாக்கி, நிலுவையிலே இருந்தது, ஏறக்குறைய ரூ. 43 கோடி இந்த ஆண்டு 1998-99-லே நிலுவையிலே இருப்பது ரூ. 130 கோடி எனவே நிலுவையில் இருக்கிற இந்த 130 கோடி ரூபாய் என்பது வரவேண்டிய வரி. பல்வேறு காரணங்களால், வழக்கு, மேல்முறையீடு ஆகியவற்றால் தேங்கியிருக்கிற பணம். எனவே 130 கோடி ரூபாயும் அரசுக்கு வருமேயானால், நீங்கள் Standing Finance Commission மூலமாக, Part-II, Scheme மூலமாக, ஏற்கெனவே ஓர் ஆண்டுக்கு நூறு, நூற்று சொச்சம் கோடிக்குத்தான் புதிய திட்டங்களை, on going schemes தவிர்த்து புதிய திட்டங்களை எடுக்க முடிகிறது. அதிகபட்சமாக 150 கோடி ரூபாய்க்கு மேலே எடுக்க முடிவதில்லை. இதிலே பார்த்தீர்களென்றால் நிலுவையில் இருக்கிற பணமே ரூ. 130 கோடி எனவே நிலுவையில் இருக்கிற 130 கோடி ரூபாயை உடனடியாக வசூல் செய்ய, உரிய நடவடிக்கைகளை, சட்டரீதியான நடவடிக்கைகளை உடனடியாக துறை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-05

அதுபோல, வரி வகைகளைப் பார்த்தீர்கள் என்றால், பொது விற்பனை வரியிலே பார்த்தீர்கள் என்றால், கேளிக்கை வரி குறைந்திருக்கிறது. கேளிக்கை வரி 1997-98-ல் ரூ. 108 கோடியாக இருந்தது. 1998-99-லே 90 கோடிதான் வந்திருக்கிறது. ஏன் கேளிக்கை வரியிலே குறைவு ஏற்பட்டிருக்கிறது? சினிமா பார்க்கப் போகிறவர்களுடைய எண்ணிக்கை கூடிக் கொண்டேதான் இருக்கிறது. Theatre எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஒரு சில பேர் Shopping Complex ஆக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிரண்டு Theatre-களில் வருமானம் இல்லாத காரணத்தினாலே, அந்த அளவிற்குக் குறைந்துவிட்டதாக நான் கருதவில்லை. சில இடங்களில் Theatre-ஐ நிறுத்திவிட்டு கல்யாண மண்டபம், Shopping Complex போன்றவற்றைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும்கூட, rural area எல்லாம் சேர்த்து பார்த்தீர்கள் என்றால், பெரிய அளவில் குறைந்திருக்க முடியாது. ஒருவேளை Theatre குறைந்தது காரணம் என்றால் வேறு வழி கிடையாது. 108 கோடியாக இருந்தது 90 கோடியாக குறைந்திருக்கிறது. அப்படிக் குறைந்ததற்குக் வரி குறைப்புத்தான் காரணம் என்றால் அது ஏன் என்று விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவா அவர்களே, திரைப்படத் துறையினர் அனைவரும் பேரணி நடத்தி, நாமக்கல் கவிஞர் மாளிகையிலே என்னைச் சந்தித்து, சுமார் இரண்டு மணி நேரம் என்னிடத்திலே விவாதித்து அதற்குப் பிறகு இந்த வரிக் குறைப்புக்கு அரசு ஒத்துக்கொண்டு வரிக் குறைப்பு செய்யப்பட்டது. அப்பொழுதே அறிவிக்கப்பட்டது. ஏறத்தாழ 30 கோடி, 40 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டது. நண்பர் திருநாவுக்கரசு அவர்களும் திரைப்படத் துறையிலே கதை, வசனம் எழுதியது மாத்திரமல்ல, நடித்தவரும்கூட (சிரிப்பு) டூயட் பாட்டுக்கள் எல்லாம் பாடி படங்களில் நடித்தவர். அவர் இப்போது ஏன் அந்த வரியைக் குறைத்தீர்கள் என்று கேட்பது, ஒருவேளை இப்போது அந்தத் துறையிலே இல்லாத காரணத்தினாலா என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சினிமா media என்பது ரொம்ப powerful media எனவே, அதிலே யாருக்கும் விரோதமாக எந்தக் கருத்தையும் நான் சொல்ல விரும்பவில்லை. அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுத்தான் இது செய்யப்பட்டது, அதனால் வரி குறைந்து இருக்கிறது என்று சொன்னால், அதற்காக இன்று நான் உங்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) ஏன் வரி குறைந்திருக்கிறது என்றுதான் கேட்டேனே தவிர, ஏன் குறைத்தீர்கள் என்று கேட்கவில்லை. சென்ற ஆண்டு 108 கோடியாக இருந்தது, இந்த ஆண்டு 90 கோடியாக குறைந்திருக்கிறதே ஏன் என்று கேட்டேனே தவிர, இதுதான் காரணம் என்றால் அது நல்ல காரணம்தான்: பாராட்டுகிறேன். (சிரிப்பு) (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

குதிரைப் பந்தய வரியும் குறைந்திருக்கிறது. சென்ற ஆண்டு 6.5 கோடியாக இருந்தது இந்த ஆண்டு 5.4 கோடிதான் இருக்கிறது. அதேசமயத்தில் தமிழ்நாடு விளம்பர வரி Advertisement Tax அது zero தான் இருக்கிறது. அதிலே ஏன் வரி போடுவதில்லையா நிறைய சாலைகளில் இருக்கின்ற விளம்பரங்களையெல்லாம் பார்த்தீர்கள் என்றால், அதற்கு ஏதாவது வரி போட்டால் நன்றாக வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இது குறித்தும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி – (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறைய நேரம் ஆகிவிட்டது. திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இரண்டு மூன்று பிரச்சினைகள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னதுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சந்தானம் இப்போது நீங்கள் பேசவில்லையென்றால் அடுத்த உறுப்பினரை அழைத்து விடுவேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஒரே ஒரு நிமிடம், பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

22180



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மண்ணெண்ணெயில் எரியும் அடுப்பு. அதன் விலையே 75 ரூபாய்தான் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கூடச் சொன்னார். அதற்குண்டான வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல Indian Small Scale Paint Manufacturers Association சார்பிலே, மற்ற மாநிலங்களில் இருப்பதை அவரே சுட்டிக்காட்டினார். அதையும் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி நான் பொதுவாகச் சொல்ல விரும்புவது, Sales Tax-ஐப் பொறுத்தவரை அது Single Point-ஆக இருக்கிறதாலே First Point-லேயே பெரிய தொழில்கள் வளர்ச்சி அடைகிறபோது அதிகமாக வர வாய்ப்பிருக்கிறது. அதுகுறித்து நேற்றைக்குக்கூட நம்முடைய நிதித் துறைச் செயலாளர் விளக்கிச் சொன்னார். மாநிலத்திற்கு மாநிலம் போட்டிபோட்டுக்கொண்டு Sales Tax—தங்கம், வைரம், தங்க நகைகள் மீதெல்லாம் குறைக்கப்பட்டிருக்கிறது. அதைப் படிக்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். படிக்கிறபோதே சொன்னார்கள். "தங்கத்திற்கும் வைரத்திற்கும் குறைக்கிறாரே என்று நீங்கள் நினைக்க வேண்டாம், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது அதற்காக இங்கே செய்ய வேண்டியிருக்கிறது. இல்லையென்றால், மற்ற மாநிலங்களிலே sales நடக்கும், இங்கே குறையும் என்பதற்காகக் குறைக்கப்பட்டது என்று சொன்னார்கள். இந்தப் போட்டி தவிர்க்கப்பட வேண்டும். பொதுவாக பார்த்தீர்கள் என்றால், ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகியவற்றை நாம் மனதிலேகொண்டு இங்கே குறைக்கிறோம். இங்கே குறைத்த உடன் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் 'அடுத்த வருடம் அங்கே குறைக்கிறார்கள். அங்கே குறைத்த உடன் அடுத்த வருடம் இங்கே குறைக்கிறோம். இந்த மாதிரி போகிறபோது இந்த வருமானம், மாநிலங்களுக்கு வருகிற முக்கியமான வருமானமாக இருக்கிற, Sales Tax மூலமாக வருகிற இந்த வருமானம் அரசுக்குக் குறைகிறது. இதிலே மத்திய அரசு எல்லா மாநில முதலமைச்சர்கள், நிதி அமைச்சர்களைக் கொண்டு ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

அதேமாதிரி, புதிய தொழில்கள் தொடங்குகிறபோதே நாம் என்ன செய்கிறோம்? 10 வருடங்களுக்கு, 5 வருடங்களுக்கு Sales Tax கிடையாது என்று சொல்கிறோம். நாம் தரவில்லையென்றால், பக்கத்திலே கர்நாடகத்திலே நீங்கள் வாருங்கள் 12 வருடங்களுக்குத் தருகிறோம் என்று அங்கே அழைத்துக்கொண்டு போகிறார்கள்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 ஏப்ரல் 9

இதனால், யார் பயன் அடைகிறார்கள் என்று சொன்னால், தொழிலதிபர்கள் பயன் அடைகிறார்களே தவிர, மாநில அரசுகளுக்கு வருகிற முக்கிய வருமானமாக இருக்கிற Sales Tax இல்லாமல் போகிறது. இதுபோன்ற பொதுப் பிரச்சினைகளிலே மத்திய அரசு எல்லா மாநில நிதி அமைச்சர்கள், முதலமைச்சர்களைக் கூப்பிட்டு, Sales Tax என்றால் இவ்வளவுதான்; யார் எந்த மாநிலத்தில் தொழில் தொடங்கினாலும், 5 ஆண்டுகளுக்கு மேலே வரிச் சலுகைக் கொடுக்கக் கூடாது; 4 ஆண்டுகளுக்கு மேலே கொடுக்கக் கூடாது; 2 ஆண்டுகளுக்கு மேலே கொடுக்கக் கூடாது என்று சொல்லி, ஒரு நிலையான முடிவை இந்திய நாடு முழுவதும் அமல்படுத்த வேண்டும்.

அதேமாதிரி பொருள்களுக்கு uniform ஆக Sales Tax இருக்க வேண்டும். பாண்டிச்சேரியில் 2%, இங்கு 12%, இன்னொரு மாநிலத்தில் 18% என்றில்லாமல், அது ஒரு uniform ஆக இருக்கிற அளவிலே, எல்லோரும் பேசி முடிவு எடுக்கும் விதத்திலே, மத்திய அரசு அவர்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டும். ஆனால், இப்போது மத்திய அரசே இருக்குமா என்பது...

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி ஒரு Uniformity of Policy, ஒரு சீரான கொள்கையை வகுப்பது என்பதை மையமாகக் கொண்டு, ஒவ்வொரு பிரச்சினையையும் அணுக ஆரம்பித்தால், நம்முடைய குடுமிப் பிடியே டில்லிக்கு போய்விடும். அதை உறுப்பினர் மறந்துவிடக் கூடாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இல்லை, இல்லை. நான் என்ன சொன்னேன் என்றால், ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கிற நிதி அமைச்சர்களைக் கொண்டு, மத்திய அரசாங்கத்தில் இந்தப் பொருளுக்கு இவ்வளவு சதவீதம் Sales Tax போடுங்கள் என்று மத்திய அரசு உத்தரவு போடுவதல்ல. ஒரு தொழில் தொடங்குவதாக வைத்துக் கொள்ளுங்கள். அதை எல்லா மாநிலங்களும் uniform ஆக, நீங்கள் இத்தனை ஆண்டுகளுக்கு மேல் exemption கொடுக்கக் கூடாது; இப்போது 10 வருடங்களுக்கு நாம் exemption கொடுக்கிறோம்; ஆனால், கர்நாடகத்தில் 15 ஆண்டுகளுக்கு exemption கொடுத்தால், அந்தத் தொழிலைத் தொடங்குபவர்கள் அங்கு போய்விடுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும் (குறுக்கீடுகள்)



1999 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்றுதான் கடந்த காலத்தில் textile, sugar, tobacco—இவற்றிற்கெல்லாம் additional duty-யை அவர்கள் போட்டால் போதும், விற்பனை வரி வேண்டாம் என்று நாங்கள் சொன்னோம். ஆனால், இன்றைக்கு additional duty-யை அவர்கள் ஒழுங்காகக் கூட்டுவதும் இல்லை; நாம் எதிர்பார்த்த வருமானம் நமக்குக் கிடைக்கவும் இல்லை. இன்றைக்கு நாம் விற்பனை வரி போட ஆசைப்பட்டால், நடக்கவில்லை. நம்முடைய குடுமிப்பிடி அங்கே சிக்கி விடுகிறது. இதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடு) இல்லை, இல்லை, திரு. திருநாவுக்கரசு, உட்காருங்கள், திரு. சந்தானம் பேசவில்லை என்றால், நான் அடுத்த உறுப்பினரை அழைக்க வேண்டியது வரும். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 26 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 4, 5 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள், ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் குடுமியை மத்திய அரசின் கையிலே கொடுக்க வேண்டுமென்று நான் எப்போதும் சொல்லமாட்டேன். இப்போதெல்லாம் மத்திய அரசு குடுமியை வெட்டி இருக்கிறார்கள். முதலமைச்சர் சொன்னமாதிரி,—முதலமைச்சருக்கு குடுமியும் கிடையாது; குடுமி உள்ள ஆட்களிடம் அகப்பட்ட மத்திய அரசு எவ்வளவு சிரமப்பட்டது, சங்கடப்பட்டது என்பது நாட்டு மக்களுக்கு இப்போதெல்லாம் தெரிந்து, குடுமியை இப்போது அவர்களே வெட்டி விட்டிருக்கிறார்கள். எனவே, இந்த நிலையிலே மத்திய அரசு, மாநில அரசு எல்லாம் கூடிப் பேச வேண்டிய பொதுவான பிரச்சினை என்கிற அபிப்பிராயத்தைச் சொன்னேன் என்பதைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி, ஏனைய வரிகள் தீர்வைகள் நிருவாகம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியினைக் கூறி, அமைச்சுப் பணி என்கின்ற நிலையிலே, நமது அமைச்சர்கள் எல்லாம் நமது முதல் அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே "மெய் வருத்தம் பாரார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினார்" என்று சொல்வது போல தங்களுடைய காரியத்திலே கண்ணாக இருக்கின்ற நமது முதலமைச்சரும், அமைச்சர்களும் அவர்களுடைய உடல் வருத்தத்தையும் பாராது, உண்மையான உறக்கத்தையும் மேற்கொள்ளாது, தங்களுடைய காரியத்திலே மிகுந்த கருத்தோடு இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான், கடந்த வாரத்திலே புழல் ஏரியிலே உடைப்பு ஏற்பட்ட நேரத்திலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகாலை 4 மணிக்கு தலைமைச் செயலகத்திற்கு வந்து, அதனுடைய நிலைமைகளை எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லி, அதிகாரிகளை எல்லாம் உஷார் செய்து, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர், பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் எல்லாம் அந்த இடத்திலே இருந்து, சென்னை மாநகரத்துக்கும் அதை ஒட்டி இருக்கின்ற பகுதிகளுக்கும் ஏற்பட இருந்த பெருத்த அபாயத்தை நீக்கியதோடு மட்டுமல்லாமல், வருகின்ற காலத்திலே சென்னை மாநகரத்திற்கு ஏற்பட இருந்த குடிநீர்ப் பஞ்சத்தையும் போக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த அமைச்சரவையினுடைய வேகமும், விரைவும் எப்படி இருக்கின்றன என்பதை நான் எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டவன் என்கிற காரணத்தினாலே இதை எடுத்துச் சொல்கிறேன். இந்த அளவிற்கு நமது முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் பொது மக்களின் நலனிலே மிகுந்த அக்கறை கொண்டவர்களாக, அதிவேகத்திலே செயல்படுகின்ற, செயல்பாட்டுத் திறனைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்கின்ற காரணத்தால் என்னுடைய பாராட்டுதலை நான் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

மாவட்ட நிருவாகம் என்பது நமது நாட்டினுடைய, தமிழ் நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மிகுந்த அடிப்படையான ஒன்று.



மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்துத் துறைகளையும் இயக்குகின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். அந்த நிர்வாகம் திறமையாகச் செயல்பட்டால்தான், ஒட்டுமொத்தமாக மாநிலத்தினுடைய நிர்வாகம் திறமையாக இருக்கும். நமது அரசுதான், அண்ணா அவர்கள் காலத்திலிருந்து மனுநீதி திட்டத்தினை உருவாக்கி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக, ஆங்காங்கே இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம், அந்தந்தக் கிராமங்களுக்கே சென்று கவனித்து உதவுகின்ற நிலையை ஏற்படுத்தியிக்கிறது.

நமது அருமைச் சகோதரர் திருநாவுக்கரசு அவர்கள் கூறியதைப் போல மாவட்ட வளர்ச்சி மன்றம் என்பது—இன்றைக்கு இந்த 3 அடுக்கு பஞ்சாயத்து சட்டத்திலேகூட இருக்கிறது. நமக்கு அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய கர்நாடகா, ஆந்திரா போன்ற இடங்களிலெல்லாம் மாவட்ட ஊராட்சித் தலைவர், அவருக்குத் துணையாக இருக்கின்ற கூடுதல் ஆட்சித் தலைவராக இருக்கின்றவர்கள், அவர்கள் மூலமாகக்கூட அனைத்துத் துறை அதிகாரிகளையும் கூட்டி வைத்து, ஒன்றியத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டு இந்த மாவட்ட வளர்ச்சி மன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நல்ல முறையிலே நடைபெறுமேயானால் அனைத்துத் துறை அதிகாரிகளையும், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சந்திக்கக்கூடிய வாய்ப்பினை, அந்த மாவட்டத்திலே இருக்கின்ற குறைகளை, அந்தந்தத் துறைகளிலே இருக்கின்ற குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கும். ஆகையால் நம்முடைய முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அதை மீண்டும் உருவாக்க வேண்டும். ஏற்கெனவே மாவட்டத் தலைவர்களை நாம் தேர்ந்தெடுத்து இருக்கிறோம். அதற்கென்று அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்கள் கூட்டுகின்ற அந்தக் கூட்டத்தில் அனைத்து அதிகாரிகளும் கலந்துகொள்ள வேண்டுமென்ற ஓர் உத்தரவை பிறப்பித்துவிட்டால், இந்த மாவட்ட வளர்ச்சி மன்றம் உருவாவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து தலைமையிடத்திற்கு வருகின்ற நேரத்தில்—நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி குறிப்பிட்டதைப் போல, பல கோப்புகள் மாவட்ட நிர்வாகத்திலிருந்து தலைமையிடத்திற்கு வரும்போது இங்கு

[திரு. லா. சந்தானம்] [1999 ஏப்ரல் 9

பல மாத காலதாமதம் ஆகிறது. இயற்கைச் சீற்றங்களினால் ஏற்படுகிற குடிநீர்ப் பிரச்சினை—மக்களுக்கு இழப்பீடு தருகின்ற நேரத்தில்கூட—கடந்த மழையிலே என்னுடைய தொகுதியிலே பல குடிநீர் கிணறுகள் அரித்துச் செல்லப்பட்டன. வைகை ஆற்றிலே நடுவிலே ஏற்படுத்தப்பட்ட குடிநீர் கிணறுகள் அரித்துச் செல்லப்பட்டன. அதைச் சீர்செய்வதற்கு வெள்ள நிவாரணம் மூலமாக நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, 6 மாத காலமாகியும் இன்னும் வந்து சேரவில்லை என்ற நிலையிருக்கிறது. எனவே, தலைமையிடத்திலே ஏற்படுகின்ற அந்த காலதாமதத்தையெல்லாம் குறைக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டுதான் நமது அரசு வருவாய்த் துறை மானியத்தின்போது, அரசு நிலங்களை, அரசு காரியங்களுக்காக, பள்ளிகள், மருத்துவமனைகள் போன்றவற்றிற்காக ஆர்ஜிதம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அது பாராட்டப்பட வேண்டிய ஒரு நடைமுறையாகும். என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் நிறைய கோரிக்கைகளை இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் வைத்திருக்கிறார்கள். பொது விற்பனை வரியைப் பொறுத்தவரையிலே பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

வள்ளுவர் குறிப்பிட்டதைப் போல "சொல்லுக சொல் பயனுடைய சொல்", பயனுடைய சொற்களைச் சொல்ல வேண்டும். இங்கே அவையிலே சொல்கின்ற சொல் பயனுடையதாக இருக்க வேண்டும். அது நம்முடைய முதல் அமைச்சரை எட்டுகின்ற சொல்லாக இருக்க வேண்டும் என்கின்ற முறையில் ஒரு சிலவற்றை மட்டும் அவருடைய கவனத்திற்கு எடுத்துவைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-20*

நாம் ஒரு காலத்திலே வெள்ளையர் ஆட்சியிலே சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, அன்னியத் துணிகளையெல்லாம் பகிஷ்கரிக்க வேண்டும், அவற்றையெல்லாம் வாங்கக் கூடாது என்று அந்தத் துணிகளையெல்லாம் தீயிட்டுக் கொளுத்தி மறியல் போராட்டம் நடத்திய காலங்கள் எல்லாம் உண்டு. அன்னியர்கள் நமது நாட்டினுடைய நிதியையெல்லாம் அவர்கள் பொருட்களை விற்பதன் மூலம் எடுத்துச் சென்றுவிடுகிறார்கள் என்று சொன்ன காலங்கள் உண்டு. அப்படியெல்லாம் சொல்லி இந்த நாட்டிலே நம்முடைய



1999 ஏப்ரல் 9] [திரு. லா. சந்தானம்]

தொழிலை, நம்முடைய மக்கள் சார்பாக இங்கிருக்கின்ற தொழிலை வளப்படுத்த வேண்டும், சிறுதொழில்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று, பெற்ற அந்தச் சுதந்திரத்தின் வாயிலாக இப்போதும் பன்னாட்டு நிறுவனங்கள்தான் மிகுந்த ஆதிக்கத்தைச் செலுத்துகின்ற ஒரு நிலையை, மத்திய சர்க்காருடைய திட்டத்தின் மூலமாக துரதிருஷ்டவசமாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். Pepsi, Coco-cola போன்ற நிறுவனங்கள் எல்லாம் மிகச் சக்தி வாய்ந்த நிறுவனங்கள். நமது நாட்டிலே பழரசங்கள், Grape Mango போன்ற பழரசங்கள் தயாரிக்கின்ற சிறு தொழில் நிறுவனங்கள், அவற்றோடு போட்டி போட முடியவில்லை. அதற்கு நீங்கள் 11 சதவீதம் வரி விதித்திருக்கிறீர்கள். கேரளா போன்ற மாநிலங்களிளெல்லாம் பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்ற Pepsi, Coco-cola போன்றவற்றுக்கெல்லாம் 20 சதவீதத்திலிருந்து, 25 சதவீதமாக வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அவர்கள் தாங்கக்கூடிய சக்தி பெற்றவர்கள். ஆனால் இங்கே சிறுதொழில் நடத்துகின்றவர்களெல்லாம் நம் நாட்டிலே உற்பத்தியாகின்ற மா, திராட்சை, ஆரஞ்சு பைனாப்பிள் போன்ற பழங்களை வைத்து பழரச பானங்களை தயாரிப்ப சிறுதொழிலாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் விவசாயிகள் பயன்பெறுகிறார்கள். அவர்களுடைய விற்பனை அதிகமாக இருந்தால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பழங்களுக்குக்கூட முறையான விலை கிடைக்கும் என்ற நோக்கத்தோடு அவர்கள் அந்தத் தொழிலை பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஈடாகச் செய்வதற்கு வாய்ப்பாக, பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரியைக் கூட்டி, சிறுதொழில் நடத்துகின்றவர்களுக்கு 11 சதவீதத்திலிருந்து, முதலமைச்சர் அவர்கள் மனதிற்கு எப்படிப்படுகின்றதோ அந்த அளவுக்கு அவர்களுக்குக் குறைத்து உதவி செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கபெற்றது)

அடுத்து, நாட்காட்டி பற்றி ஏற்கெனவே எல்லோரும் சொன்னார்கள்.காகிதத்திற்கு நாம் வரி போடுகிறோம். தமிழிலே தயார் செய்யப்படுகின்ற அந்த நாட்காட்டி வெளி மாநிலங்களுக்கு செல்கிறது. அதில் ஓரிரு மாதங்களுக்குத்தான் விற்பனை இருக்கிறது. அதனால் காகிதத்திற்கு வரி போடுவதோடு, நாட்காட்டிக்கு வரி தேவையில்லை என்ற கருத்தையும் வலியுறுத்தினார்கள்.

அதுபோல பயிர் வகைகளுக்கெல்லாம் வரிவிலக்கு அளித்திருக்கிறோம். பொரிகடலை, வறுகடலை இவற்றிற்கெல்லாம் எல்லா இடங்களிலும், ஏழைத் தொழிலாளர்கள், வயலில் வேலை செய்பவர்கள், மற்றவர்களெல்லாம் அவர்கள் வேலையை முடித்துவிட்டு,

[திரு. லா. சந்தானம்] [1999 ஏப்ரல் 9

ஆகாரமாகக் கொள்ளுகின்ற இவற்றிற்கு 4% வரி என்பது சற்று அதிகமாகத் தெரிகிறது என்று எல்லாப் பகுதிகளிலும் சொல்கிறார்கள். இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதேபோன்று, சூடம், கல்கண்டு, ஊதுபத்தி போன்றவற்றுக்கெல்லாம் வரியை கணிசமாகக் குறைக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நமது மாநிலத்திலே தயாரிக்கப்படுகின்ற பெயிண்ட், சோப்பு போன்றவற்றுக்கும் சற்று வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

அதேபோன்று கயிறு. எங்களுடைய பகுதியில் குறிப்பாக சோழவந்தான் தொகுதியில் தென்னை மரங்கள் மிகுந்து காணப்படுகின்றன. அங்கிருக்கிற குடிசைத் தொழிலில் மிக அதிகமாக மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தென்னை நார் மூலமாக கயிறு திரிக்கின்ற தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய வரியையும் குறைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

*பிற்பகல் 12-25*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். அமைச்சர்கள், மாவட்ட நிருவாகம், விற்பனை வரி மானியங்களிலே முதன் முதலாக வருவது அமைச்சர்கள். இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில், அமைச்சர்களுடைய செயல்பாடுகளைப் பொறுத்தவரையில், அமைச்சர்கள் சரியாகச் செயல்படுவதில்லை. அவர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை, நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்கிறது என்று உங்களுடைய கட்சியைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் பேசியதை இங்கே கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். அந்த விழாவிலே, அங்கே இருந்த முதல்வர் அவர்கள்கூட, மாறன் எனது மனசாட்சி என்று அவர் கூறியதை ஒத்துக்கொண்டார்கள். ஆகவே, இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில் மாறன் அவர்கள் கூறிய மனசாட்சிப்படி நடந்து கொண்டிருக்கிறதா, அதற்குப் பிறகு மாறியுள்ளதா என்பதை நினைத்துப் பார்க்கும்போது எந்த வேலையுமே இந்த அமைச்சரவையில் நடக்கவில்லை என்பதைத்தான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்ன காரணம் என்றால், எந்தத் தவறும் செய்யாத அதிகாரிகளை எல்லாம் சிறை வைத்து, தண்டிக்கக்கூடிய



1999 ஏப்ரல் 9] [திரு. பி.ஆர். சுந்தரம்]

சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால்தான் உண்மையாகக்கூட, நியாயமாகக்கூட, கோப்பிலே கையெழுத்து இடாமல் அந்த அதிகாரிகள் இருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு நிர்வாகம் ஸ்தம்பித்து இருக்கிறது. ஆகவே, அந்த முறை மாறவேண்டும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறை வைக்கப்பட்டிருப்பதாக இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் குறிப்பிட்டார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் தமிழ்நாட்டில் எங்கோ சிறை வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி பி.ஆர். சுந்தரம் என்ன சொல்லுகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, நான் பேசுகின்ற விவாதத்தில் கேள்வி கேளுங்கள், சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் எதற்கெடுத்தாலும் நீங்கள் பேசி தயவு செய்து என்னுடைய நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** Irrelevent ஆகக் கேட்கவில்லை, அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில்தானே இருக்கிறார்? நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேரை பற்றித்தான் கேட்டேன். அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தால் அதைப்பற்றிச் சொல்லலாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பதற்கும் சுப்பராயன் கேள்வி கேட்பதற்கும் என்ன சம்பந்தம்? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட வேண்டாம் என்பதைத்தான் நான் திரும்பத் திரும்ப சொல்லுகிறேன்.

அடுத்து, அமைச்சர்களிடம் நாங்கள் மனு கொடுக்கிறோம். மனு கொடுத்த பிறகு அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை குறைந்தது 30 நாட்களில் அவர்கள் தெரிவித்தால்தான் அந்தத் திட்டம் தொகுதியிலே நிறைவேறுமா, நிறைவேறாதா என்பதை நாங்கள் மக்களிடம் தெரிவிக்க வசதியாக இருக்கும். முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து பதில் வருகிறது, தனிப் பிரிவுச் செயலாளர் கடிதம் எழுதுகிறார். நீங்கள் அனுப்பிய கடிதத்தின்மீது பரிசீலனை

செய்யப்படுகிறது என்றுதான் எங்களுக்குக் கடிதம் வருகிறதே ஒழிய அதன்மீது என்ன நடவடிக்கை என்று இதுவரையில் கடிதமே வரவில்லை. நான் நிறைய கோரிக்கைகளை எழுதி அனுப்பியிருக்கிறேன். ஆகவே, இந்த முறையை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் எங்களுடைய நாமக்கல் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற கூட்டத்தொடரில் இதே மாவட்ட நிர்வாகத்தின்மீது நான் பேசினேன். ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதியன்று கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றுகின்ற உரிமையைப் பெற்றுத் தந்தவர் நீங்கள். அதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்கூட பாராட்டினார்கள். ஆனால் எங்களுடைய புரட்சித் தலைவி ஆட்சியில், முதலமைச்சராக இருக்கின்ற தான் மட்டும் தேசியக் கொடியை ஏற்றினால் பத்தாது, முதலமைச்சருக்குக் கீழே இருக்கின்ற அமைச்சர்களும் இந்த தேசியக் கொடியை ஏற்ற வேண்டுமென்று—ஜனவரி மாதம் 26-ஆம் தேதிக்கு—ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். அதன்படி தலைநகரங்களில் எல்லாம் அமைச்சர்கள் கொடியேற்றினார்கள். ஆனால் இப்போது நீங்கள் வந்ததற்குப் பிறகு அந்த உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே அமைச்சர்களை எல்லாம் பார்க்கின்றபோது எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. உங்களுக்கு உண்மையிலேயே எந்தவிதமான...

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:* பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதில் சொல்ல வேண்டாம் என்று இருந்தேன். இருந்தாலும், சொல்ல வேண்டிய ஒரு விளக்கத்திற்காகச் சொல்லுகிறேன். ஜனவரி 26 ஆம் தேதியன்று அமைச்சர்கள் எல்லாம் அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று கொடியேற்ற வேண்டுமென்று, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டதாகச் சொன்னார்கள். அது, அமைச்சர்களுக்கு அந்த கௌரவம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அல்ல. ஜனவரி 26 அன்று வழக்கமாக ஆளுநர்தான் கொடியேற்றுவார். அதைத்தான் நான் அன்றைக்குப் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, ஆண்டுதோறும் ஜனவரி 26-ல் ஆளுநர் கொடியேற்றுகிறார், சரி. ஆனால், ஆகஸ்ட் 15-ஆம் தேதி



அன்றைக்கும் ஆளுநர்தான் கொடியேற்ற வேண்டுமா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் ஏன் கொடியேற்றக் கூடாது என்று கேட்டு, அவர்களும் உடனடியாக அதைக் கவனித்து, 'நீ மாத்திரம் அல்ல, இந்தியாவிலே உள்ள எல்லா மாநில முதலமைச்சர்களும் அந்தக் கொடியை ஏற்றலாம்' என்று இந்திரா காந்தி அவர்கள் அப்போது ஆணை பிறப்பித்தார்கள்.

*பிற்பகல் 12-30*

அதற்குப் பிறகு தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆகஸ்ட் 15 ஆம் தேதி முதலமைச்சர்கள்தான் கொடி ஏற்றுவது என்ற வழக்கமும், ஜனவரி 26 ஆம் தேதி ஆளுநர் கொடி ஏற்றும்போது, எல்லா அமைச்சர்களும் சென்று கௌரவிப்பது என்கின்ற அந்த வழக்கமும் தொடர்ந்து இருந்து வந்தது. ஆனால், அம்மையார் ஜெயலலிதாவிற்கும், அன்றைய ஆளுநராக இருந்த சென்னா ரெட்டிக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் காரணமாக, ஆளுநர் சென்னா ரெட்டி கொடி ஏற்றும்போது எல்லா அமைச்சர்களும் இருந்து, அந்த விழாவை கௌரவப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான், அமைச்சர்களை வெளியூருக்கு அனுப்புவதற்காகக் கையாளப்பட்ட இராஜ தந்திரம் அது. (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒரு மாயை. அது என்ன மாயை என்பதை அண்ணா விளக்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னா ரெட்டிக்கு மரியாதை வேண்டுமா வேண்டாமா என்பது கேள்வி அல்ல. என்னுடைய கேள்வி, பாவம், அமைச்சர்கள் எல்லாம் அந்தவொரு மரியாதையையாவது பெறவேண்டாமா என்ற நல்ல எண்ணத்தில்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சரவையில் அமைச்சர்களுக்கு நிறைய, முறையான மரியாதை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வேனிலே தொங்கிக்கொண்டு போகவேண்டிய அவசியமோ, மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்றுகின்ற கொடியை அமைச்சர் போய் ஏற்றி, மரியாதையைப் பெறுகிற அவசியமோ இந்த அமைச்சர்களுக்கு இல்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கூறிக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் எந்த அதிகாரத்தையும் கொடுக்கவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட

விரும்புகிறேன். நேரம் ஆகிக்கொண்டே செல்கிறது. நான் சீக்கிரம் பேச வேண்டும்.

அடுத்தது, வணிக வரியைப் பொறுத்தவரை, ஓர் அரசாங்கம் சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால், தொழிலும், வாணிபமும் சிறப்பாகச் செயல்பட வேண்டும். இதிலே, வரி விகிதங்களில், பலவற்றை உயர்த்தி இருக்கிறீர்கள்; பலவற்றைக் குறைத்திருக்கிறீர்கள். அதாவது, கணினிகள் மற்றும் புற உறுப்புகள் ஆகியவற்றிற்கு விற்பனை வரியை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைத்திருக்கின்றீர்கள். தடையில்லா மின் வழங்கும் அமைவுகளுக்கு விற்பனை வரியை 8 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறீர்கள். மேலும் நீங்கள், பல பொருட்களுக்கு விற்பனை வரி சதவிகிதம் குறைக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். இதிலே மின்னணு சம்பந்தப்பட்ட பொருட்கள், தொலைக்காட்சிப் படம் எடுக்கும் கருவிகள், மீண்டும் குறிப்பிடுகின்றேன்; தொலைக்காட்சிப் படம் எடுக்கும் கருவிகள், இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், இந்தத் தொலைக்காட்சி படம் எடுக்கின்ற கருவிகளைப் பொறுத்தவரையில், முதலமைச்சருடைய குடும்பத்திற்கு சம்பந்தப்பட்டிருக்கிற ஒரு தொழில் என்ற காரணத்தினால், இந்த வரி விகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுந்தரம் எப்போதும் நிலைக்கண்ணாடிக்கு முன்னால் நின்று, தன்னையே பார்த்துக்கொண்டு, தன் கட்சியைப் பற்றியே நினத்துக்கொண்டு இந்த அவையில் பேசுகின்ற வழக்கத்தை சற்று குறைத்துக்கொண்டால் நலமாக இருக்கும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டியைப் பற்றி அனைத்து உறுப்பினர்களும் பேசினார்கள். தொலைக்காட்சிப் பெட்டிக்கு வரியை உயர்த்தி இருக்கின்றீர்கள். கிராமத்திலே இருக்கின்றவர்கள் எல்லாம் தொலைக்காட்சிப் பெட்டியை அதிகம் பார்க்கின்றார்கள். நீங்கள் அதற்கு வரியை உயர்த்தியதன் காரணமாக, இப்போது தொலைக்காட்சிப் பெட்டிகளைச் செய்து கொண்டிருந்த ஒருசில கம்பெனிகள்கூட மூடப்பட்டிருக்கின்றன என்கின்ற செய்திகள்கூட வந்திருக்கின்றன. அந்தச் சமயத்திலே.....



**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களிடமிருந்து ஒரு விளக்கம். படம் எடுக்கின்ற கருவிகளுக்கெல்லாம் வரி குறைப்பு செய்திருப்பதைப் பற்றிச் சொன்னார். அது சில T.V.களுக்கு உதவியாக இருக்குமே என்பதைப்போல அவர் சொன்னார். இது, செல்வி ஜெயலலிதா அவர்கள் நடத்தப்போகிற ஜெ.ஜெ.T.V. — ஏற்கெனவே நடந்து கொண்டிருந்தது. இப்போதும் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். — இந்த வசதிகள் அந்த ஜெ.ஜெ. T.V.க்கும் வருமே. ஒருவேளை, சுந்தரம் பேசிவிட்டுப் போனதற்குப் பின்னாலே, தோட்டத்திலே 'ஏதாவது நடக்கக்கூடாது என்கின்ற காரணத்தினாலே, சுந்தரம் ஜெயலலிதா அவர்களைக் கேட்டுக்கொண்டுதான் பேசுகின்றாரா அல்லது அவர் இஷ்டத்திற்குப் பேசுகிறாரா என்று ஒரு விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொலைக்காட்சிப் படம் எடுக்கின்ற கருவிகளைப் பொறுத்தவரையில் எங்களுக்கு எதைப் பற்றியும் கவலையில்லை. நியாயமாக தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு வரியைக் குறைக்க வேண்டும். ஆனால், தொலைக்காட்சிப் படம் எடுக்கின்ற கருவிகளைப் பொறுத்தவரை அதற்குக் குறைத்திருக்க வேண்டிய நியாயமே இல்லை என்பதைத்தான் நான் மீண்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, செல்லுலார் ஃபோன். செல்லுலார் ஃபோனைப் பொறுத்தவரையில், 11 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. செல்லுலார் ஃபோனை பொறுத்தவரையில் வசதி படைத்த அமைச்சர்கள், கோமான்கள் போன்ற பெரியவர்கள் தான் அதைப் பயன்படுத்துவார்கள். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-35

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் செல்-ஃபோன் பயன்படுத்துகிறார்களா இல்லையா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்பராயன் அவர்களுக்குப் பத்திரிகையிலே அவருடைய பெயர் வரவேண்டும் என்பதற்காக, எப்போது வேண்டுமானாலும்

சம்பந்தா, சம்பந்தமில்லாமல் பேசிக் கொண்டிருப்பது அவருடைய வாடிக்கையாகிவிட்டது. துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து குறுக்கீடுகளைக் குறைத்துவிட்டு என்னுடைய நேரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இடத்திலே மக்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ அமைச்சர்கள் எல்லாம் செல்-ஃபோன் பயன்படுத்துகிற காரணத்தினாலே குறைத்திருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் தெரிவித்ததைப்போல, அமைச்சர்கள் செல்-டெலிஃபோன் ஒன்றுதான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவருடைய கட்சித் தலைவர் 5 நாட்களுக்கு ஒரு முறை செல்-டெலிஃபோனை மாற்றிக் கொண்டே இருக்கிறார். அவருக்கும் இந்தச் சலுகை கிடைக்கும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எங்களுக்கு அது பற்றி எல்லாம் கவலையில்லை. செல்-டெலிஃபோன்களைப் பொறுத்தவரையில், நீங்கள் செல்-ஃபோன்களுக்குக் குறைத்திருப்பது....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் சொன்னதைப் போல் செல்-ஃபோனை வைத்துக் கொண்டிருப்பது ஒன்றும் தவறில்லை. எல்லா வசதிகளும் கொண்ட பேருந்தை ஆளுக்கு ஒன்று வைத்துக் கொண்டிருந்தால்தான் தவறு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** செல்லுலார் தொலைபேசி நிறுவனம் நடத்துபவர்கள் பல ஆயிரம் கோடி ரூபாயை தொலைத் தொடர்பு துறைக்குப் பாக்கி வைத்திருக்கிறார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு, அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத் தொகையை ஏமாற்றுகிறவர்களுக்கு வரிச் சலுகை கொடுத்திருக்கிறீர்கள். அதைவிட உங்கள் வரிச் சலுகைக்கு முன்னதாக தமிழகத்தில் சாதாரண ஒரு பிரஜையாக இருந்தவர் இன்றைக்கு வெளிநாட்டில் இருந்துகொண்டு, இந்தியாவில் பிரபலமானவருக்கு பினாமியாக இருந்துகொண்டு இருக்கும் நபர், செல்லுலார் தொலைபேசி நிறுவனத்தைத் தொடங்கவிருக்கிறார் என்று செய்தி வந்திருக்கிறது. அந்த நபர் முதல்வருக்கு மிகவும் பழக்கப்பட்டவர். முன்னாள் தி.மு.க. மத்திய அமைச்சருக்கும்...





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் எதையும் பேசக்கூடாது. அந்த நபர் பெயர் என்ன? அவர் எப்படி, பழக்கப்பட்டவர்? அவருக்காக என்ன சலுகை செய்யப்பட்டது? அவருக்கும், இந்த அரசுக்கும் என்ன தொழில் தொடர்பு ? இவற்றை எல்லாம் ஆதாரத்தோடு விளக்க வேண்டும். விளக்கினால், அந்தக் குற்றச்சாட்டைப் பற்றி விசாரிக்கவும் தயாராக இருக்கிறோம். ஆதாரத்தோடு விளக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மெர்க்கன்டைல் வங்கியில் சம்பந்தப்பட்ட சிவசங்கரன் என்ற நபர் இந்த செல்-ஃபோனிலே சம்பந்தப்பட்டிருக்கிறார். அவருக்குச் சலுகை அளிப்பதற்காகத்தான், பல ஆயிரம் கோடி ரூபாய் சலுகை அளிக்க வேண்டும் எனபதற்காக இந்த அரசு செல்-ஃபோனுக்கு வரியைக் குறைத்திருக்கிறது—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது அப்பட்டமான அவதூறு, ஆதாரமற்ற அவதூறு. வேண்டுமென்றே, அவர் சொன்னாரே, சுப்பராயன் பெயர் வரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறார் என்று, அதைப்போல தன்னுடைய பெயர் பத்திரிகையிலே வரவேண்டும் என்பதற்காக, அவருக்கும், தாமரைக்கனிக்கும் உள்ள போட்டியில் ஏதேதோ இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் எனக்கு நன்றாகத் தெரியும். அது என்ன போட்டி என்பதும் நாட்டிற்கு நன்றாகத் தெரியும். ஆனால், ஒன்று சொல்ல விரும்புகின்றேன். தொலைக்காட்சிப் பெட்டி பற்றிச் சொன்னார். பொதுவாக அன்றைக்கு நான் அந்த வரிச் சலுகைகளை அறிவிக்கும்போது, கர்நாடக மாநிலத்தோடு ஒப்பிட்டு, அங்கே எப்படி வரிச் சலுகைகள் இருக்கின்றனவோ அதைப்போல இங்கே செய்ய வேண்டும், அதிலும் குறிப்பாக electronic பொருட்களுக்கு, கர்நாடகத்திலே குறைந்த வரி இருக்கிறது. அதை நீங்களும் பின்பற்ற வேண்டும் என்று, வர்த்தக சபையைக் கூட்டி, எல்லா வணிகர்களின் பிரதிநிதிகளையும் கூட்டி, நாமக்கல் கவிஞர் மாளிகையிலே நான் நிதிநிலை அறிக்கைக்கு முன்பு பேசியபோது, சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலேதான் இந்த வரிச் சலுகை அளிக்கப்பட்டது. அது மாத்திரம் அல்ல, தொலைக்காட்சிப் பெட்டிக்கு கர்நாடகத்திலே இதே அளவு 10 சதவிகிதம் வரி இருக்கின்ற காரணத்தினால்தான் இங்கேயும் அது பின்பற்றப்பட்டது. தொலைக்காட்சிப் பெட்டி ஒவ்வொரு நாளும் வாங்குகிற பொருளல்ல. என்றைக்கோ வாங்குகின்ற பொருள்தான். இது வண்ணத் தொலைக்காட்சி விவகாரம் அல்ல. கிராமங்களுக்குத்

தொலைக்காட்சிப் பெட்டி தருவதாகச் சொல்லி, 10 ஆயிரம் ரூபாய்க்குத் தருகிறேன் என்று சொன்னதை, இல்லை, இல்லை, 14 ஆயிரம் ரூபாய் என்று போட்டுக்கொள் என்று சொல்லிக் கொள்ளை அடித்த விவகாரம் அல்ல இது. (மேசையைத் தட்டும் ஒலி).

செல்-ஃபோனைப் பற்றிச் சொன்னார்கள். செல்-ஃபோனுக்கு இங்கே வரியை நாம் குறைக்காமல் இருந்தால் அதைக் கடத்துவது சுலபம். தொலைபேசி அல்லது தொலைக்காட்சிப் பெட்டி இவற்றை எல்லாம் கடத்தி வரமுடியாது. செல்-ஃபோனை அவர்கள் வாங்கி pocket-லே போட்டுக் கொண்டுகூட வந்துவிடலாம், பாண்டிச்சேரியிலிருந்து. எனவேதான், செல்-ஃபோனுக்கு வரி குறைக்கப்பட்டதேயல்லாமல், வேறு அல்ல.

பிற்பகல் 12-40

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்திலே அதிகம் பயிராகக்கூடிய குச்சிவள்ளிக் கிழங்கைப் பொறுத்தவரையில், தருமபுரி, திருச்சி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலே அவற்றிற்கு மேல் வரி போட்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களுக்கு மேல் வரி இல்லை. ஆகவே, அந்த 3 மாவட்டங்களிலே இருந்து வருகிற குச்சிவள்ளிக் கிழங்கிற்கும் மேல் வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு முக்கியமான பிரச்சினை. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஆசியாவிலேயே மிக அதிகமாக விற்பனை செய்கின்ற ஸ்தாபனம் சேகோசெர்வ் என்ற ஸ்தாபனம். அந்த ஸ்தாபனத்தில் 300 கோடி ரூபாய் அளவுக்கு வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது. 300 கோடி ரூபாய் அளவுக்கு வியாபாரம் செய்கின்ற அந்த ஸ்தாபனத்தில் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி விற்பனையாகிறது. தற்போது 100 கோடி ரூபாய் additional tax என்பதை 25 கோடி ரூபாயாகக் குறைத்திருக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது) 300 கோடி ரூபாய் வியாபாரம் செய்கின்ற அந்த நிறுவனத்திற்கு additional tax என்று 2 சதவிகிதம் போடுகிற காரணத்தினால், ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி பொருள்கள் வெளிச் சந்தையிலே விற்பனை செய்யும்போது, சேகோசெர்வ் என்பது கூட்டுறவு அமைப்பு—அதற்கும் தனியாருக்கும் வியாபாரத்திலே போட்டிப் போடுகிற நிலை இருக்கிறது. இதனால் சேகோசெர்வ் வருமானம் குறைகிறது. ஆகவே, அதற்கு விதிக்கப்படுகிற 2 சதவிகித additional tax-ஐக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மதுவிலக்கைப் பொறுத்தவரையில்....





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

***திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட நிருவாகம் ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகளின்மீது எனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன்முதலாக பல்வேறு வர்த்தகக் கழகங்கள், தொழில் முனைவோர் ஆகியோரையெல்லாம் கலந்து, அண்டை மாநிலமான கர்நாடகாவிலே இருக்கிற வரி விதிப்பிற்கு இணையாக, அதேமாதிரியாக இங்கே வரி விதித்திருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, தமிழ்நாட்டினுடைய பணம் வேறு மாநிலங்களுக்குச் செல்லக் கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தோடு பல்வேறுவிதமான வரிச் சலுகைகளும் வரி விலக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏராளமான சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மக்கள் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதேசமயத்தில், ஒருசில கருத்துக்களை, இன்னும் அரசுக்கு வருமானம் அதிகமாக வரக்கூடிய சில விஷயங்களை நான் சொல்வதிலே பெருமையடைகிறேன். அந்தவகையிலே, தொழில் தொடங்குவதற்கான வரம்பு 3 இலட்சம் ரூபாயிலே இருந்து இப்போது 5 இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அந்த 3 இலட்சத்திற்குள்ளாக taxable goods வரி விதிக்கப்படுகின்ற வியாபாரமாக இருந்தாலும் அதற்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. வருமான வரி சிறு நிறுவனத்திற்கும் விதிப்பதைப்போல, 1,400 ரூபாய் மத்திய அரசால் விதிக்கப்படுகிறது. இப்போது வரிவிலக்கு வரம்பு 5 இலட்சம் ரூபாயாக தமிழக அரசால் உயர்த்தப்பட்டிருக்கிறது; அந்த 5 இலட்சம் ரூபாய்க்கு ஒரு Presumption tax — உத்தேச வரியாக, ஆயிரம் ரூபாய் விதித்தால், அரசுக்குக் கூடுதலாகக் கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய்க்கு மேலாக நிதி வருவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சுட்டிகாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, எனது தொகுதியிலே தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்றன. இப்போதைய சூழ்நிலையிலே, AIDS போன்ற கொடுமையான நோய் தென்னை மரத்தைத் தாக்குகிறது. விவசாயிகள் ஒட்டுமொத்தமாக பதறிப்போய் இருக்கிறார்கள். அந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு வகையிலே நமது அரசு முயற்சி

எடுத்து இப்போது அதற்கான மருந்து அடிக்கின்ற செலவுக்குக்கூட மானியம் வழங்கியிருக்கிறது. ஒட்டுமொத்தாக விவசாயிகள் என்னிடத்திலே பல்வேறு முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் சட்டமன்றத்திலே இருந்து திரும்புகிறபோது, நாங்கள் சொன்ன கருத்தை வலியுறுத்தினீர்களா என்று என்னைக் கேட்கிறார்கள். ஆகவே, எனது கருத்தாக இல்லாமல், தென்னைமர விவசாயிகள் கருத்தாக, தென்னை மரங்கள் அந்த நோயினால், தன்னுடைய பொருளாதார வளத்தையெல்லாம் இழந்து, நன்றாகக் காய்த்த மரங்கள் எல்லாம், இப்போது காய்ந்து போகின்ற நிலைமையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தவகையிலே, தென்னையை தாக்குகின்ற சிலந்திப் பூச்சி நோய்—பாளையிலே வருவதில்லை; பாளை வெடித்து, குரும்பை வருகின்ற நேரத்திலேதான் அந்த நோய் தாக்குகிறது. ஆகவே விவசாயிகள் எல்லாம் வேறு ஒரு முடிவெடுத்து, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நோய்க்காக வரியைக் குறைக்கச் சொல்கிறீர்களா? மானியத்திலே பேசுங்கள்.

**திரு. ம. சண்முகம்:** தென்னை மரத்திலே, உள்ள பாளையை அறுத்து, கள் இறக்குவதன் மூலம், கள்ளுக் கடையைக் கொண்டு வருவதன் மூலம், அரசுக்கு அதிகமான வருமானம் வரும்; அதேசமயத்தில், கள்ளச் சாராயத்தையும் ஒழிக்க முடியும் என்றெல்லாம் விவசாயிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் அதை இங்கே சொல்வதற்கு தயக்கம் காட்டினாலும், விவ்சாயிகள் எல்லாம், நான் அங்கு திரும்பிச் செல்லும்போது இது குறித்துப் பேசினீர்களா என்று என்னைக் கேட்பார்கள். அந்த வகையிலே நான் விவசாயிகளுடைய கருத்தை இங்கே சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அவ்வப்போது சொல்வார்கள். நீங்கள் எல்லாம் தொகுதிக்குச் செல்ல வேண்டும், பொது மக்களைச் சந்திக்க வேண்டுமென்று சொல்வார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் கள்ளுக் கடைகளைக் கொண்டு வருவதன் மூலம் தென்னைக்கு ஏற்பட்டுள்ள நோயைத் தடுப்தோடு மிக அதிகமான வருமானத்தை நாம் பெற முடியும் என்ற விவசாயிகள் கருத்தை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

அதுபோன்று வரிச் சலுகையினை கேட்கின்ற நேரத்திலே, சொட்டு நீர்ப் பாசனத்திற்கு சொட்டு நீர்க் கருவி என்ற அடிப்படையிலே 4 சதவிகித வரியை விதிக்கிறார்கள். ஆனால், சொட்டு நீர் கருவி என்று



தனியாக ஒரு கருவி கிடையாது. அது ஒரு உபகரணமாகத்தான் இருக்கின்றது. அந்த வகையில் P.V.C. Pipe, Lateral Pipe, & Dripper போன்றவற்றிற்கெல்லாம் 11 சதவிகிதம் வரி விதிக்கிறார்கள். இதனால் அரசுக்கு மொத்தத்தில் வரக்கூடிய வருமானம் ஒரு கோடிதான் இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூட இதுகுறித்து மனு ஒன்றைத் தனியாகக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, தென்னை மர விவசாயிகளைக் காப்பாற்றுகின்ற வகையிலே அந்த 4 சதவிகித வரியை இரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நிருவாகத்தைச் பற்றி ஒரு சில கருத்துக்களை சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன். எவ்வளவுதான் தமிழக முதலமைச்சர் அவர்கள் தனது ஆழ்ந்த அனுபவத்தினாலும், தனது ஆற்றலினாலும் திட்டங்களைத் தயாரித்தாலும் அந்தத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்க்கின்ற பொறுப்பை அதிகாரிகள் வைத்திருக்கிறார்கள். ஆனால், அந்த அதிகாரிகளுடைய செயல்பாடுகள்—எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை—குறிப்பாக, கீழ்மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் எந்த ஒரு திட்டத்தையும் முழுமையாகச் செயல்படுத்துவதற்கு அனுமதிப்பதில்லை. அவர்களுக்கு அந்த மனம் இல்லையென்பதைத்தான் என்னால் சொல்ல முடியும். இங்கே ஒரு திருக்குறளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்"

என்ற அடிப்படையிலே எவ்வளவுதான் மதிநுட்பம் உடையவரானாலும், மனித நேயம், மனிதத்துவம் இல்லாவிட்டால் ஓரறிவுயிராகிய மரத்திற்கு ஒப்பாகும் என்றுதான் சொல்ல முடியும். (மணியடிக்கப்பெற்றது) மாவட்ட நிருவாகத்தைச் சீர்படுத்துவதற்கு அரசுப் பணியாளர்கள் முழுமையாக ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல ஒரு பனிக்கட்டியை 10 அல்லது 20 பேர் தொடர்ச்சியாக தங்கள் கைகளில் மாற்றிக் கொண்டு வந்து கடைசியாக அந்தப் பனிக்கட்டி போய்ச் சேருகிற போது அது கரைந்து மிகவும் குறைவாக போய் சேரும். அப்படியெல்லாம் ஏற்படாத வண்ணம் அரசுப் பணியாளர்கள் எல்லாம் இந்த அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நூற்பாலைகள் நிறைந்த பகுதி கோவை. அந்த நூற்பாலைகள் நலிவடைந்த நிலையிலே இருக்கின்றன. மத்திய அரசு புனரமைப்பு நிதியாக மூவாயிரம் கோடி ரூபாய் திட்டங்களுக்குக் கொடுத்திருந்த

நேரத்திலே, முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி அந்த நிதியினை நூற்பாலைகளுக்கும் பெற்றுத்தந்திருக்கிறார்கள் என்பது அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது. அந்தவகையிலே நலிந்திருக்கின்ற நூற்பாலைகளுக்கான ஜெனரேட்டருக்குப் பயன்படுத்துகின்ற டீசலுக்கும் வரிச் சலுகையை அளிக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல மினி சிமென்ட் ஆலைகளும் நலிவுற்ற நிலையில் இருக்கின்றன. அதில் உற்பத்தியாகக்கூடிய சிமென்டிற்கும் வரியைக் குறைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஒரு கோப்பானது கீழ்நிலையிலிருந்து மேல்நிலை வரையில் வருவதற்கு எவ்வளவு காலம் ஆகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு, ஒரு தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கியிலிருந்து அரசுக்கு ஒரு முன்மொழிவு வருவதாக இருந்தால்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிருவாகம் மற்றும் வருவாய்த் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் விவாதத்தில் கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்புக்கு வந்தவுடன் அத்தியாவசியப் பண்டங்களுக்கு ஒருமுனை வரியாக்கி வியாபாரிகளின் மத்தியில் ஒரு நல்ல ஐக்கியத்தை உருவாக்கிய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நான் முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறுசிறு வியாபாரிகள் கணக்கு வைத்துக்கொள்வதற்கான தொகையை மூன்று இலட்சமாகக் கூட்டி, அதைச் செயல்முறைக்குக் கொண்டு வருவேன் என்று சொல்லி அதனை அறிக்கையிலே கூறியதற்கு மீண்டும் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். தமிழ் மாநில காங்கிரஸின் மூத்த உறுப்பினர் சொக்கர் அவர்களும், மதுரையைச் சேர்ந்த தென்னிந்திய வர்த்தகச் சங்கத்தின் தலைவர் அன்பு அண்ணன் இரத்தினவேலு அவர்களும் வரி ஆய்வு செய்வதற்கான குழுவில் உறுப்பினராக இருப்பதற்கு வாய்ப்பை





அளித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். வியாபாரிகள் மூலம் 6583 கோடி ரூபாய் விற்பனை வரியாக நமது தமிழக அரசுக்குக் கிடைக்கிறது என்றால், அவர்கள் தமிழக அரசுக்கு ஒரு பாலமாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

பிற்பகல் 12-50

உள்ளபடியே இப்போது வியாபாரத்தில் சிறு, சிறு தொழில்கள் எல்லாம் எப்படி நலிவடைந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் ஆய்வு செய்ய வேண்டும். நமது அண்டை மாநிலங்கள் ஒருமுனை வரியாக 6 சதவிகித வரியை அந்தச் சிறு தொழில் செய்பவர்களுக்கு, எந்தத் தொழில் செய்தாலும் 6 சதவிகிதம் என்று கேரளாவிலே, கர்நாடகத்திலே, ஆந்திராவிலே எல்லாம் செய்திருக்கிறார்கள். அப்படி ஒரு சூழ்நிலையை நாமும் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் பெயின்ட் பெயின்டிற்கு மற்ற மாநிலங்களிலே 6 சதவிகிதம், 11 சதவிகிதம் என்று இருக்கும்போது, நமது மாநிலத்திலே 14 சதவிகிதம் என்று உயர்த்தி இருக்கிற காரணத்தினால், அந்தத் தொழில் நலிவடைந்த நிலையிலே இருக்கிறது. அதைக் குறைத்தால்தான் இந்தத் தொழிலிலே இருப்பவர்களுக்கு, நல்லது. எனவே ஒட்டுமொத்தமாக எல்லா மாநிலங்களிலும் இருப்பதுபோல் 6 சதவிகிதமாக ஆக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையிலேயே இப்போது வரி விதிப்பைப் பார்க்கும்போது, அத்தனை உறுப்பினர்களும் வரியைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடந்த மூன்று ஆண்டுகளிலே நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் பல கோடி ரூபாய் சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள். உண்மைதான். இருந்தாலும், ஏன் அந்த வார்த்தையை அவர்கள் உபயோகிக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு நவதானியத்தை எடுத்துக்கொண்டால், நவதானியங்கள் அத்தனைக்கும் வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். அதேநேரத்திலே உரு மாறி பொரிகடலை என்று வரும்போது, அதற்கு 4 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. அதுதான் அங்கே சிக்கலாக இருக்கிறது. அந்த வியாபாரத்திற்குப் பல மாநிலங்களிலிருந்து வருவிக்கப்படுவதுதான் கடலை. அதைக் கொண்டைக் கடலை என்று சொல்வார்கள். அந்தக்

[திரு. எ. தெய்வநாயகம்] [1999 ஏப்ரல் 9

கொண்டைக் கடலையிலிருந்து பிறந்ததுதான் வறுகடலை. அதைப் பொரி கடலை என்று சொல்வார்கள், பொட்டுக் கடலை என்றும் சொல்வார்கள். அப்படிப்பட்ட பொருள்களுக்கு வரி விதிக்கும்போது, வியாபாரிகளிடத்திலே சலனம், சிக்கல். அதிலேயிருந்து வருவதுதான் மாவு. கடலை மாவு. இந்த மாவுக்கு வரி 2 சதவிகிதம் என்று இருக்கிறது. உணவுப் பொருள் வகைகள் மற்ற அனைத்திற்கும் வரி விலக்குக் கொடுத்து இவற்றிற்கு வரி விதிக்கலாமா? அவ்வாறு வரி விதிக்கும்போது வியாபாரிகளிடத்திலே ஒரு ஏக்கம் இருக்கிறது. அந்த ஏக்கத்தைப் போக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வளவு வரி விலக்குக் கொடுத்திருக்கிறீர்கள். இது கொஞ்சம்தான். இதிலே இலட்சக் கணக்கிலேதான் வருமே தவிர கோடிக்கணக்கிலே இழப்பு கிடையாது. இலட்சக்கணக்கிலே வருகிற இழப்புகளை அவர்கள் சரிசெய்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ் நாள்காட்டி. அதை மற்ற மாநிலங்களிலே விற்க முடியாது. காகிதத்துக்கு வேறு செலவழித்துதான் தமிழ் நாள்காட்டி தயாராகிறது. காகிதத்திலேயிருந்து Note Book செய்தால் வரி கிடையாது. ஆனால், தமிழ் நாள்காட்டி என்று வரும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போன பட்ஜெட்டிலே 8 சதவிகிதம் என்று இருந்ததை 4 சதவிகிதமாக ஆக்கிவிட்டார்கள். உள்ளபடியே மகிழ்ச்சிதான். அந்த 4 சதவிகிதத்தையும் இல்லாமல் ஆக்கினால்தான் நல்லது. ஏனென்றால், ஒரு மாதம்தான் அந்த வியாபாரம் நடக்கும். அது மிச்சப்பட்டு போனால் அதற்கு value கிடையாது. மீண்டும் அதற்கு value கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாள்காட்டிக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சூடம். சூடத்திற்கு மூலப்பொருள் பொடி மதுரையிலே 2 கோடி ரூபாய் வரி செலுத்தியவர் இப்போது பாண்டிச்சேரிக்குப் போய்விட்டார். காரணம் என்னவென்றால், இங்கே 11 சதவிகிதம் வரி. அங்கே வரியில்லை என்று சொல்கிறார். நாம்கூட அதற்கு 3 சதவிகிதம், 4 சதவிகிதம் வரி என்று வைத்திருக்கலாம். இப்போது பஞ்சாமிர்தத்திற்கு வரி இல்லை. விபூதிக்கு வரி இல்லை, ஊதுபத்திக்கு ஒரு சதவிகித வரி. இப்படியெல்லாம் நாம் செய்துவிட்டு, இந்தச் சூடத்திற்குண்டான வரியைக் குறைக்காமலிருப்பது சரியல்ல; அதைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 9] [திரு. எ. தெய்வநாயகம்]

அடுத்து, மண்ணெண்ணெய் ஸ்டவ், அதுவும் அப்படித்தான். மண்ணெண்ணெய் ஸ்டவ்விலே 3,4,5 பிரிவுகள் இருக்கின்றன. மேலேயிருந்து தொங்கவிட்ட Tank போன்ற மண்ணெண்ணெய் ஸ்டவ். திரி போட்டு இயங்குகிற மண்ணெண்ணெய் ஸ்டவ். மண்ணெண்ணெய் Tank வைத்தது கிட்டத்தட்ட 70,80 ரூபாய். எல்லோரும் பேசினார்கள், எங்கள் மதுரையிலே இதுமாதிரி சின்ன சின்ன தொழில் செய்கிற தொழில்கூடங்கள் நிறைய இருக்கின்றன. அவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில் நலிவடைந்துபோய்விடுமோ என்ற பயம் இருக்கிறது.

அதேமாதிரி கற்கண்டு. சீனியிலே இருந்துதான் கற்கண்டு தாயாரிக்கிறார்கள். அதுவும் மதுரையிலேதான் main. வேறு ஊர்களிலே காய்ச்சுகிற மாதிரி தெரியவில்லை. Excise கட்டி சீனியை வாங்கி சீனியிலே இருந்து கற்கண்டு. அதுவும் சில இலட்சம் ரூபாய்தான். 2 இலட்சம், 3 இலட்சம்தான் அதற்கு assessment வருகிறது. இப்படி சின்னச் சின்னத் தொழில்கள் நலிவடையாமல் பார்த்துக்கொள்வது நம்முடைய அரசின் கடமை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதையும் தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாவட்ட தலைவர் அவர்களும் நன்றாகத்தான் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்னைப் பொறுத்தமட்டிலே.

பிற்பகல் 12-55

மதுரையிலே எவ்வளவோ அரசு விழாக்களிலே நான் கலந்து கொண்டிருக்கிறேன். ஒரு விழாவிலேகூட நான் கலந்துகொள்ளாமல் miss பண்ணியதே கிடையாது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கு எதைக் கொண்டுபோனாலும் நிறைவேற்றுவதற்காக அவர்கள் ஓடோடி வந்து பார்த்து வந்தார்கள். ஆனால் இப்போது அவரை மாற்றி விட்டார்கள். இந்தமாதிரி மாவட்ட நிர்வாகம் சிறப்பாக நடந்துகொண்டிருந்தாலும்கூட, கீழ்மட்டத்து அதிகாரிகள், அதாவது V.A.O., R.I. இவர்கள் மட்டத்தில் கொஞ்சம் ஒழுங்கு கட்டுப்பாட்டை நாம் நிர்ணயம் பண்ணவேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளபடியே விற்பனை வரியைப் பொறுத்தமட்டிலும், இன்னும் ஒன்று. எங்களுடைய மதுரையிலே இதைப்பற்றிச் சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் நடக்கிற நிகழ்ச்சிகளிலே, விற்பனை வரித் துறை எப்படி

எப்படி இருக்கிறது என்றெல்லாம் நாங்கள் புகழ்ந்து கொண்டிருந்தாலும், எங்களிலே சில வியாபாரிகள் ஒற்றுமையில்லாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள். கீழமாசி வீதி நிமிர்ந்து நடக்கிறது. மேலமாமி வீதி குனிந்து நடக்கிறது என்று என்னிடமே சொல்கிறார்கள். நான் விற்பனை வரி மானியத்திலே பேசினேன் இல்லையா? அதற்கு அப்படியெல்லாம் பேசினார்கள். ஏன் என்றால், அங்கே உள்ள Electric goods ஸ்தாபனங்களுக்கு எல்லாம் ஒரு நிவாரணமும் பண்ணவில்லை. வெளி மாநிலத்திலே நல்ல சலுகைகளை எல்லாம் கொடுக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில்தான் வரி அதிகமாக இருக்கிறது. 16%, 20% வரைக்கும் இருக்கிறது என்று Electric goods பற்றிப் பேசுகிறார்கள். அடுத்த மாநிலத்தில் எப்படி எப்படி இருக்கிறது என்று பார்க்காமல் நம்முடைய மாநிலத்தில் அவர்கள் வந்து வாங்குகிற மாதிரி செய்கின்ற வகையில் நாம் செய்ய வேண்டும். அப்போதுதான் நல்ல சூழ்நிலையாக அமையும். ஏனென்றால் நாம் இவ்வளவு செய்தும், குறைபாடுகளைச் சொல்லும் அந்த வியாபாரிகள், இதைச் செய்து விட்டார்கள். அதைச் செய்துவிட்டார்கள் என்று அவர்களிடையே போட்டி மனப்பான்மை உருவாகி, அதிலே எங்களை பகடைக்காய்களாக அவர்கள் உபயோகம் பண்ணுகிறார்கள்.

அதேமாதிரி ஊறுகாய், 50 கிராம் இருப்பதற்கு மட்டும் வரி விலக்கு கொடுத்தாகிவிட்டது. புட்டிகளில், இவற்றிற்கு எல்லாம் எக்குதப்பாக வரி போட்டிருக்கிறார்கள். 4%, 6%, 11% வரியைப் போட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். எவ்வளவோ இனங்களுக்கு, வத்தல், இவற்றிற்கெல்லாம் வரி விலக்குக் கொடுத்திருக்கிறோம். அப்படிக் கொடுத்தாலும் இந்த ஊறுகாய் பற்றி மாத்திரம் இப்படி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பெரிய Industries மாதிரி செய்துகொண்டிருந்தாலும்கூட, நாங்கள் அதை ஏழை மக்களுக்காகத்தான் செய்கிறோம். அதில் கொஞ்சம் விலக்குக் கொடுக்க வேண்டுமென்கிறமாதிரி சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இவ்வளவு சலுகைகள் பண்ணியும், சலுகை கேட்கிறார்களே என்று நினைத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

மொசைக், பாண்டிச்சேரியில் நிறைய பேர் வாங்குகிறார்கள் என்று மதுரையிலே இருப்பவர்கள் என்னிடம் சொல்கிறார்கள். வரி அங்கே அதிகமாக இல்லாமல் போய்விட்டது. அதற்காக எல்லா வியாபாரமும் அங்கே போய்விட்டது. இங்கே நாம் வரி நிறைய கட்டுகிறோம் என்று



சொல்கிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. இதையெல்லாம் கொஞ்சம் கவனமாகப் பார்க்க வேண்டும். வரி வேண்டாம் என்று சொல்லவில்லை. வரி விதிப்பதைக் கொஞ்சம் குறைத்து விதித்து, வியாபாரத்தில் turnover கூட்டினால் நமக்கு நிச்சயமாக revenue கிடைக்கும். அந்த மாதிரியான சூழ்நிலைகளை நாம் இங்கே உருவாக்க வேண்டும்.

மேலும் விற்பனை வரியில் Form 20 படிவம் வழங்குவதில் சிக்கல் இருக்கிறது. Form 20 படிவம் இருக்கும்போது, வியாபாரி ரூ.22-க்கு D.D.-யாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். D.D. கொடுப்பதற்கு ரூ.15-ஐ செலவழிக்க வேண்டும். அதற்குப் பேசாமல் ரூபாயாகவே பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிட்டால், Cheque ஆக அந்தக் கம்பெனிகளே போட்டுக்கொடுத்தால், Form 20 கொடுத்து விடலாம். அது பெரிய சிரமமாக இருக்கிறது. ஒவ்வொரு அலுவலகத்திலேயும் போய்ப் பார்த்தால், Form இல்லை என்கிறார்கள். Form வந்தால், அதைப் பெறுவதற்கு கொஞ்சம் தாஜா பண்ணுகிறார்கள். அதிகாரிகளுக்கும், வியாபாரிகளுக்குமிடையே பெரிய மோதலாக இருக்கிறது. அதைக் கொஞ்சம் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதைச் சீர் பண்ணி, Cheque-ஆக அல்லது மொத்த தொகையாக வாங்கிக் கொள்ளலாம் என்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளில் நான் முழுமையாகக் கலந்துகொண்டு, உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் மன்றத்திலேயிருந்து கேட்க இயலாவிடினும், என்னுடைய அறையிலே இருந்து, வேறு ஒரு தவிர்க்கமுடியாத அலுவலைக் கவனித்துக்கொண்டு, எல்லோருடைய உரைகளையும் தொடக்கம் முதல் இதுவரையிலே கேட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனினும், நிறைவுரை ஆற்றுவதற்கு இயலாமல், நான் காலையிலே தொடர்ந்த பணியை மீண்டும் தொடர வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதனால்தான் இந்த மானியக் கோரிக்கைகளுக்கு விளக்கம் அளிக்கவும், பதிலளிக்கவும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய

கருத்துக்களைக் கேட்டுப் பெறவும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. ஆலடி அருணா அவர்கள் அந்தப் பொறுப்பை இன்றைக்கு ஏற்றிருக்கின்றார்கள். இருப்பினும், நான் இங்கே 1½ மணி வரையிலே இருந்து, கலந்து, கருத்துக்களைச் சொல்ல இயலுமா என்ற ஐயப்பாட்டின் காரணமாக, ஒன்றிரண்டு செய்திகளை மாத்திரம் சொல்லி, அவையின் அனுமதியோடும், உங்கள் அனுமதியோடும் விடைபெற இருக்கின்றேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், இதுவரையிலே குறைக்கப்பட்ட அல்லது தள்ளி வைக்கப்பட்ட வரிகளில் முழுத் திருப்தியடையாமல் அல்லது திருப்தியடைந்ததாகக் காட்டிக் கொண்டால் வெளியிலேயிருந்து உள்ளே அனுப்பி வைத்தவர்கள் என்ன சொல்வார்களோ என்கின்ற அச்சத்தின் காரணமாக, கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள். எல்லோருடைய கருத்துக்களையும் இன்றைக்கு இந்த அரசு இந்த அவையிலே பெற்றிருக்கின்றது. இவற்றிற்கெல்லாம் உடனடியாக இன்றைக்கே பதில் அளித்துவிட முடியாது என்பதால், நிதிஒதுக்கீடு மசோதா வரும்போது இவற்றையெல்லாம் கவனத்திலே வைத்து எந்தெந்த வரியை இன்னும் குறைக்கலாம், எந்தெந்த வரிகளிலே மாற்றம் செய்யலாம், எவ்வாறு செய்யலாம், எந்தெந்த வரிகளுக்கு முழு விலக்கு அளிக்கலாம் என்கின்ற செய்திகளை, நிதி ஒதுக்கீடு மசோதா அன்று நான் சொல்வதாக இருக்கின்றேன். அதற்கிடையிலே இன்றைக்குப் பேசப்பட்ட விஷயங்களில் அன்றைக்கு நல்லது நடக்கும் என்பதற்கு அச்சாரமாக இரண்டேயிரண்டு சலுகைகளை மாத்திரம் அறிவிக்க விழைகிறேன்.

நேற்றையதினம், படங்களோடு நம்முடைய நிஜாமுதீன் ஒரு கோரிக்கையை வைத்தார். அது Pressure Kerosene Stove மீதான விற்பனை வரியைப் பற்றியது. அதே கருத்தை நம்முடைய சொக்கர் அவர்களும் இரண்டு நாட்களுக்கு முன்பே எழுதிக் கொடுத்து, அதைக் கோரிக்கையாக வைத்திருக்கிறார். பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்களும் அதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். அதிலே சொக்கர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, நிஜாமுதீன் பேசும்போது குறிப்பிட்டது இவையெல்லாம் Non-Pressure Kerosene Stove-க்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. Pressure Kerosene Stove-க்கு 8 சதவீதம் வரி இருக்கிறது என்று கூறிவிட்டு, சொக்கர் அவர்கள், 'எனவே, Pressure Stove தயாரிப்பாளர்களும் வரி விலக்குக்



கோருகின்றார்கள்' என்று அவர்களுடைய கோரிக்கையை நினைவூட்டிவிட்டு, 'என்றாலும் வரி விலக்கு என்று முழுமையாக அளிக்காமல் மண்ணெண்ணெயிலே எரியும் Pressure and non-pressure அடுப்புகள் எதுவாக இருந்தாலும் ஒரே Entry-யின்கீழ் கொண்டு வந்து, ஒரு % வரி விதிப்பு செய்யலாம் என்பது என் பணிவான கருத்து, என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கருத்தைச் சொல்லும்போதே, பணிவான கருத்து என்று அவரே சொன்ன காரணத்தினால் ஒரு % அல்ல, முழு விலக்கும் அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போல, இன்று காலையிலேயே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் என்னிடத்திலே ஒரு கடிதம் கொடுத்தார். தூண்டில் முள்ளுக்கு பாண்டிச்சேரியிலே 4 %, 11 % இங்கே. அங்கே 4 %, ஆகவே, அதையும் இங்கே 4 % ஆக்க வேண்டுமென்று அவர் எனக்குத் தூண்டில் போட்டார், காலையிலேயே. (சிரிப்பு) நான் அந்தத் தூண்டிலிலேயிருந்து விடுவித்துக்கொண்டு, இங்கே வந்து, அதைப்பற்றி அதிகாரிகளோடு கலந்து பேசியபோது, தூண்டில் முள்ளுக்கு, பல உறுப்பினர்கள் பேசியதை ஒட்டி, அவர்களுடைய கருத்துகளுக்கேற்ப 11 சதவீதம் வரி என்றிருப்பது முழுமையாக விலக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எடுத்துக் கூறி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வழிவிடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்:

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மானியக் கோரிக்கை எண் 4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம், மானியக் கோரிக்கை எண் 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் மானியக் கோரிக்கை எண் 11 மாவட்ட நிருவாகம் ஆகிய மானியக்கோரிக்கைகளை இந்த மாமன்றத்திலே முன்மொழிந்து, அவற்றின்மீது மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் தங்களுடைய கருத்துக்களையும், எண்ணங்களையும், கேள்விக் கணைகளையும் தொடுத்த பிறகு அதற்குப் பதில் அளிக்கின்ற இந்த அரிய வாய்ப்பை, நல்ல சந்தர்ப்பத்தை எனக்களித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் முதலிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம், 10 மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்திலே கலந்துகொண்டார்கள். அரிய கருத்துக்களைச் சொன்னார்கள். உரிய நடவடிக்கைகளைச் சொன்னார்கள். என்ன மாற்றங்கள் தேவை என்பதையும் நினைவுபடுத்தினார்கள். அவர்கள் கூறிய கருத்துக்களெல்லாம் ஆக்கபூர்வமாகப் பரிசீலிக்கப்பட்டு Appropriation Bill வரும்போது Appropriate நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களே சொன்ன பிறகு, நான் அவற்றைப் பற்றி அதிகமாக விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 1-05

'நீரின்றி அமையாது உலகு' என்பதைப் போன்று, வரி இன்றி எந்த அரசாங்கமும் செழிப்பாகச் செயல்பட முடியாது. மாண்புமிகு வி.பி. சிங் அவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய நிதியமைச்சராக இருந்தபோது, Long Term Fiscal Policy என்ற வகையில், நீண்டகாலப் பொருளாதாரக் கொள்கை ஒன்றைக் கொண்டு வந்தார்கள். இப்போது நிதியமைச்சராக இருக்கிற திரு. யஷ்வந்த் சின்கா அவர்கள் Mid Term Fiscal Reformation—குறுகியகால, மத்தியகால பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற கொள்கையை கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதே வழியில், அதே அடிப்படையில் Long Term Taxation Policy நீண்டகால வரிக் கொள்கை என்பதையும் புகுத்தி, அதன் அடிப்படையில் ஒவ்வொரு கால கட்டத்திலும், ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை வரும்போதும் வரி விதிப்புக் கொள்கையைப் பின்பற்றி வருகிறார்கள். இதில் என்னென்ன நெறிகள் எல்லாம் பின்பற்றப்படுகின்றன என்பதை இந்த மாமன்றம் தெளிவாகத் தெரிந்திருக்கிறது. வரி விதிப்பிலே வெளிப்படையாக இருக்க வேண்டும்; அதே நேரத்தில், எளிமையாக இருக்க வேண்டும். வரி விதிப்பிலே நவீன முறைகளைப் பின்பற்ற வேண்டும். நம் மாநிலத்திலே தொழில் வளர்ச்சியையும் வணிகத்தையும் ஊக்குவிக்கின்ற வகையில் அந்த வரியினுடைய விகிதாச்சாரங்கள் அமைய வேண்டும். சிறு தொழில்களுக்கு எல்லாம் நல்ல முறையிலே ஊக்கம் அளிக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களுக்கெல்லாம் வரியைக் குறைக்க வேண்டும். இன்னும் இணக்க வரி, சுய வரி இவை போன்றவற்றின் எல்லாம் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற இலட்சியத்தை மையமாகக் கொண்டுதான், நம்முடைய Long Term Taxation Policy என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.



திரு. குழந்தை தமிழரசன் பேசியபோது, பெருமதிப்பிற்குரிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விருதுநகருக்குச் சென்றார். அங்கே நாடார் பெருங்குடி மக்கள் நடத்துகின்ற கல்விக் கூடத்திலே, அவர்கள் எப்படி மகமையை வசூலிக்கிறார்கள், அதை மையமாக நடத்துகிறார்கள், மகமையை வசூலிக்கிறார்கள், அதை மையமாக வைத்து, அதன் காரணமாகத்தான் இந்த விற்பனை வரி முறையைக் கொண்டு வந்தார்கள் என்று, அவருக்குத் தெரிந்த தகவலை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்தார்கள். நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1935ஆம் ஆண்டு, Government of India Act, அதிலேயே விற்பனை வரி என்பது மாநில அரசுக்குச் சொந்தமான பகுதியாக அறிவிக்கப்பட்டுவிட்டது. அந்த அடிப்படையில்தான் 1937-ல் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தபோது, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1939-ல் விற்பனை வரியைப் புகுத்தினார்கள். ஆனால், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் விற்பனை வரித் திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னாலேயே பீகார் மாநிலத்தில் 1938-லேயே பின்பற்றப்பட்டுவிட்டது. அஸ்ஸாம் மாநிலத்திலும் 1939-லேயே, அதற்கு முன்பே பின்பற்றப்பட்டுவிட்டது. இன்னும் சொல்லப்போனால் இந்த விற்பனை வரிக் கொள்கை எப்படி உலக அளவிலே பின்பற்றப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஓரளவு தெரிந்திருக்கவேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். பிரான்ஸ் நாட்டைப் பொறுத்த அளவிலே 1914-லேயே வந்துவிட்டது; ஜெர்மனியைப் பொறுத்தளவிலே 1916-லேயே வந்துவிட்டது; செக்கோஸ்லோவேகியாவைப் பொறுத்தளவிலே 1919-லேயே வந்துவிட்டது; இன்னமும் பெல்ஜியம், ரூமேனியா, ஹங்கேரி, சோவியத் யூனியன், இவற்றைப் பொறுத்தளவிலே 1921-லேயே வந்துவிட்டது. இத்தாலி, போலந்து ஆகிய நாடுகளில் 1923-லிலேயே வந்துவிட்டது; ஆஸ்திரேலியாவிலே 1930-லேயே வந்துவிட்டது. அமெரிக்கத் திருநாட்டில் 29 மாநிலங்களில் 1937-லேயே வந்துவிட்டது. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த வரி விதிப்புக் கொள்கை என்பது மேலைநாடுகளிலேயிருந்து ஓரளவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கைதான் என்பதை நாம் ஏற்றுக்கொள்வது நம்முடைய சுயமரியாதைக்கு இழுக்கு என்று யாரும் கருதிவிடக் கூடாது. நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த மாதம்

[திரு. ஆலடி அருணா] [1999 ஏப்ரல் 9

17ஆம் தேதி நிதிநிலை அறிக்கையை அளித்தபோது, எந்த அளவிற்கு மாநிலத்தின் நிதியாதாரங்களுக்கு இந்த வரி விதிப்புப் கொள்கை-விற்பனை வரி நமக்குத் துணை புரிகிறது என்ற விவரத்தைச் சொன்னார்.

*பிற்பகல் 1-10*

நமக்குக் கிடைக்கின்ற வருமானத்தில் 70 சதவீதம் விற்பனை வரியிலிருந்துதான் கிடைக்கிறது. 6,583 கோடி ரூபாய் கிடைக்கிறது. இதிலே விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் மட்டும் கிடைப்பது 5,455.46 கோடி ரூபாய். இன்னும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் மூலம் 779.33 கோடி ரூபாய், தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின மூலம் 90.55 கோடி ரூபாய். தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின் மூலம் 5.40 கோடி ரூபாய். தமிழ்நாடு உணவு விடுதி மற்றும் தங்கும் விடுதி, ஆடம்பர வசதிகள் மீதான வரி 68.85 கோடி ரூபாய். மோட்டார் வாகன நுழைவு வரியின் மூலம் 182.63 கோடி ரூபாய் ஆக, நமக்கு 75 சதவீதம் இந்தப் பணம் கிடைக்கிறது. இதிலே வியப்பும், ஆச்சரியமும் தரத்தக்கது என்னவென்றால், இவ்வளவு பெரிய தொகையை 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட கோடியில் தருகின்ற வணிகப் பெருங்குடி மக்கள், தொழிலதிபர்கள், உரிமையாளர்கள் எத்தனை பேர் என்றால் 1 இலட்சத்து 28 ஆயிரம் பேர்தான். ஆனால், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 30 இலட்சம் வியாபாரப் பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள். 1 இலட்சத்து 28 ஆயிரம் மக்கள்தான் வரியையே கொடுக்கிறார்கள். அதை இந்த மாமன்றம் உணர வேண்டும். நான் அவர்களுக்கெல்லாம் வரி விதிக்க வேண்டுமென்ற ஆசையோடு இதைச் சொல்கிறேன் என்று நினைக்கக் கூடாது. கலைஞர் அரசு எப்படி வியாபாரிகள் மீது தாராள மனப்பான்மையோடு நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இதுவொரு அழுத்தமான ஆதாரம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நினைவூட்டுவதற்காகத்தான் இதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த அளவுக்கு நமக்கு, மாநிலங்களுக்கான நிதி ஆதாரங்கள் மிகவும் குறைவு. இது அரசமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட காலத்திலேயே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சந்தானம் போன்றவர்களாலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது, அந்த நேரத்தில். நெருக்கடியான நேரத்தில், நல்ல ஆதாரங்கள் இல்லாத நேரத்திலும்கூட இப்போது நம்மாலே



1999 ஏப்ரல் 9] [திரு. ஆலடி அருணா]

இந்த அளவுக்கு வரியின்மூலம் பணத்தை ஈட்ட முடிகிறது என்றால் 70 சதவீதத்தைப் பெற முடிகிறது என்றால், இதற்கு 3 காரணங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஒன்று, இந்த வணிக வரித் துறை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய விழுமிய தலைமையிலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது முதல் காரணமாகும். அவரிடத்திலே எந்தப் பொறுப்பைக் கொடுத்தாலும், அதற்கென்று ஒரு தனி முத்திரையைப் பதிப்பார் என்பது உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு துறையிலும் எப்படி முத்திரை பதிக்கப்பட்டு வருகிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். எனவே, அவர்களிடத்திலே கீழேயிருந்து பணி செய்வது என்பது எளிதான காரியமல்ல. 8 மணி நேர வேலை அல்ல; 16 மணி நேர வேலைக்கும் அதிகமான வேலை என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இந்தத் துறை அவர்கள் கையிலே இருந்த காரணத்தினால் அதிகாரிகளை நல்ல முறையிலே முடுக்கிவிட்டு, வேகப்படுத்தி, எந்த அளவிற்கு நல்ல முறையிலே வசூல் செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு வசூல் செய்தது அவர்களுடைய தலைமைக்குக் கிடைத்த மகத்தான வெற்றி, நிர்வாகத்திற்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்பதைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது முதற் காரணமாகும்.

இரண்டாவது காரணம், அவருடைய முயற்சிக்கு, தூண்டுதலுக்கு, ஆர்வத்திற்கு, கட்டளைக்கு ஈடு கொடுக்கின்ற அளவில் அதிகாரிகள் செயல்பட வேண்டும். வண்டி ஓட்டுபவர் நன்றாக இருந்தால் மட்டும் போதாது; மாடும் ஒழுங்காக இழுத்தாக வேண்டும். எனவே, இப்போது, கலைஞர் அவர்கள் எதை விரும்புகிறார்கள், எவ்வளவு சாதிக்க விரும்புகிறார்கள், எவ்வளவு வசூலைப் பெற விரும்புகிறார்கள் என்று நினைக்கிறாரோ, அதைச் சாதிக்கிற வகையில் அதிகாரிகளெல்லாம் ஒத்துழைக்கிறார்கள். அந்த அதிகாரிகளுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் பெருமதிப்பிற்குரிய நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, கடந்த காலத்தில் நிர்வாகச் செலவுக்காக ரூ.1.10 கோடி செலவானது. விலைவாசிகள் ஏறியிருக்கிற இந்தக் காலகட்டத்தில், சம்பளமெல்லாம் உயர்ந்திருக்கின்ற காலகட்டத்தில், இந்த டிசம்பர் மாதம் முடிய, இந்த விற்பனை வரித்

துறையில் செலவு ரூ.0.88 கோடி என்ற அளவிற்கு அதைக் குறைத்திருக்கிறது என்றால், நாமெல்லாம் அதிகாரிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்; மறந்துவிடக் கூடாது.

நான் 3ஆவது காரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் உங்களிடத்திலே குறிப்பிட்டதைப்போல, 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர்தான் இந்த வரிப் பணத்தையே கட்டுகிறார்கள். எனவே, வணிகப் பெருங்குடி மக்களை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கண்டனக்கூட்டங்கள் நடக்கலாம்; உண்ணாவிரதம் நடக்கலாம்; ஊர்வலங்கள் நடக்கலாம்; எதிரான சில கருத்துக்கள் சொல்லலாம்; இதெல்லாம் ஜனநாயகத்திலே சாதாரணம், நாம் சந்தித்துத் தீர வேண்டிய அவசியமான நெருக்கடிகள். நல்ல முறையிலே வரி கொடுக்கின்ற வணிகப் பெருங்குடி மக்களையும், தொழிலதிபர்களையும், வரி செலுத்துபவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, இந்த அளவுக்கு நமக்கு வரி வசூலாகின்ற வகையில் ஒத்துழைத்த அத்தனை பேருக்கும் இந்த நேரத்திலே நன்றி செலுத்திக்கொள்ள வேண்டியது என்னுடைய தலையாய கடமை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

ஒருமுனை விற்பனை வரியை, முதன்முதலாக டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 1990-லே கொண்டு வந்தார்கள். கடந்த வாரம் மேற்கு வங்கத்திலே நிதிநிலை அறிக்கையை தாஸ் குப்தா அவர்கள், நிதியமைச்சரவர்கள் சமர்ப்பித்தபொழுது, இந்த முறைதான் மேற்கு வங்கத்திலேயே ஒருமுனை விற்பனை வரி வந்திருக்கிறது. ஒருமுனை விற்பனை வரி வந்தபிறகு இன்றைக்கு இது சாதாரணமாகத் தெரியலாம். சிலருக்கு அலட்சியமாகக்கூட இருக்கலாம். ஆனால், இந்த ஒருமுனை விற்பனை வரி வர வேண்டும் என்பதற்காக வர்த்தகக் கழகங்கள் நடத்திய மகாநாடுகள் எத்தனை? எத்தனை கூட்டங்கள்? எத்தனை கருத்தரங்குகள்? எவ்வளவு Lobby-கள்? எத்தனை விமர்சனங்கள்?

எந்த முதலமைச்சராவது கடந்த காலத்தில் இதைச் செய்ய முன்வந்தார்களா? நான் அதற்காக எந்த முதலமைச்சர்மீதும் குறைசொல்ல விரும்பவில்லை. அவர்களுக்கெல்லாம் ஓர் அச்சம். எங்கே பலமுனை விற்பனை வரியை நீக்கி, ஒருமுனை விற்பனை வரி கொண்டுவந்துவிட்டால் வருமானம் பாதித்துவிடுமோ என்று அஞ்சினார்கள், பயந்தார்கள். ஆனால், ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டுவருவதன்மூலம் வருமானம் பாதிக்காது, வணிகப் பெருங்குடி



மக்கள் ஒழுங்காக வரியைச் செலுத்துவார்கள், நிர்வாகம் சீராக இருக்கும், அதிகாரிகள் ஊழல் செய்வதற்கு இடம் இருக்காது என்பதிலே தெளிவு கண்டு, துணிவோடு இந்தத் திட்டத்தைத் துணிந்து சொன்ன முதல் முதல்வர், சரித்திரத்திலேயே டாக்டர் கலைஞர் அவர்கள் தான் என்பதைப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவேதான் இன்றையதினம் கலைஞர் அவர்கள் என்ன எதிர்பார்த்தாரோ, அவை எல்லாம் இப்போது சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சில வரி மாற்றங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவற்றிலே எனக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும், வேறுபட்ட எண்ணமும் நிச்சயமாகக் கிடையாது. ஏனென்றால் அது ஒரு தொடர்கதை. அதுவும் முடிவில்லாத தொடர்கதை. ஆனால், ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்த மூன்றாண்டு காலத்திற்குள் எந்த அளவுக்கு வரியைக் குறைத்திருக்கிறது, எத்தனை பொருட்களுக்குக் குறைந்திருக்கிறது என்பதையெல்லாம் இந்த மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களும் பொதுமக்களும் அறியக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

16 விழுக்காட்டிலிருந்து 11 விழுக்காடாக, வணிகச் சின்னம் பொறிக்கப்பட்ட ஐஸ்கிரீம்களுக்கு வரி குறைக்கப்பட்டது. 11 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக அறைக்கலன்கள், Oil engine-கள் சூட்கேஸ்களுக்கு - வணிகச் சின்னங்கள் பொறிக்கப்பட்டவைக்கு குறைக்கப்பட்டது. 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குடைகள், பல்புகள் மற்றும் பல பொருட்களுக்கு வரி குறைக்கப்பட்டது. அதேபோன்று 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக படிபெருக்கி இயந்திரங்கள், கணக்கீட்டு இயந்திரங்கள், மூக்குக் கண்ணாடிகள், Lense-கள், தட்டச்சுப் பொறிகள் ஆகியவற்றுக்கு எல்லாம் வரி குறைக்கப்பட்டது. அதேபோன்று 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக பல பொருட்களுடைய வரிகள் குறைக்கப்பட்டன. இன்னும் சில பொருட்களுக்கு 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது. கொசு விரட்டிகள், கொசுவத்திச் சுருள்கள், வைரம் முதலான விலை மதிப்புள்ள கற்கள், வணிகச் சின்னமுடைய ரஸ்க், வணிகச் சின்னமுடைய மசாலாப் பொடிகள் இவற்றிற்கெல்லாம் குறைக்கப்பட்டது. இன்னும் 20 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக தமிழ்த் தட்டச்சுப் பொறிகளுக்கெல்லாம் வரி குறைக்கப்பட்டது. இந்த அளவுக்கு வரியைக் குறைத்து, ஏறத்தாழ - உங்களுக்கு நான் தெரிவித்துக்

[திரு. ஆலடி அருணா] [1999 ஏப்ரல் 9

கொள்ள ஆசைப்படுகிறேன், - 602 கோடி ரூபாய்க்கு, கடந்த மூன்றாண்டுகளுக்குள் வரி குறைக்கப்பட்டிருக்கிறது.

இது சாதாரண சாதனை அல்ல. யார் வேண்டுமானாலும், தமிழகத்தின் வரலாற்றில், 1947-லேயிருந்து எந்த அமைச்சரவையாக இருந்தாலும், அந்த அமைச்சரவை மூன்றாண்டுகளுக்குள் அல்லது ஐந்து ஆண்டுகளுக்குள் 602 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகையைச் செய்தது என்று சுட்டிக்காட்ட முடியுமா? அந்தச் சரித்திரத்தைப் படைத்த ஒரே தலைவர், ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சுந்தரம் போன்றவர்கள் உணரவேண்டும். இதிலே மதிக்கத்தகுந்தது என்னவென்றால் - அவர்களும் தெரிந்து வைத்திருக்க வேண்டியது என்னவென்றால் - அவர் இந்த அவையிலே சில குறைபாடுகளைச் சொன்னார், குற்றச்சாட்டுக்களைச் சொன்னார், அது அவருக்கு இருக்கிற உரிமை. நாம் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது, செல்வி ஜெயலலிதா அவர்கள் முதல்வராக இருந்தபோது, பெருமதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் நிதித் துறை அமைச்சராக இருந்தபோது அளித்த வரிச் சலுகை என்ன? எந்த அளவுக்கு வரிச் சலுகை அளித்தார்கள்? அந்த ஐந்தாண்டுகளில் அவர்கள் கொடுத்த வரிச் சலுகையின் மதிப்பு வெறும் பத்து கோடி ரூபாய்தான். 10 கோடி ரூபாய்க்குத்தான் ஐந்தாண்டுகளில் வரிச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். நமக்கு, வருகிற மே மாதம் 13ஆம் தேதி வந்தால்தான், மூன்றாண்டுகள் நிறைவு பெறுகின்றன. 602 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை கொடுத்திருக்கிறோம். என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) இது எவ்வளவு பெரிய உயர்வு, எவ்வளவு பெரிய சிறப்பு என்பதை எல்லாம் சுந்தரம் அவர்கள் தனிமையிலாவது ஒத்துக்கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்மையிலேயே, மாநிலங்களுக்கான நிதி ஆதாரங்களைப் பெருக்கவேண்டும். அந்த ஆதாரங்களைப் பெருக்குவதில், மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்பதிலே அழுத்தமான நம்பிக்கை கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு, இன்றையதினமும் மத்திய அரசை எதிர்த்துப் போராடுவதில், வாதாடுவதில், நியாயத்தை



1999 ஏப்ரல் 9] [திரு. ஆலடி அருணா]

நிலைநாட்டுவதில் முனைப்போடு செயல்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

இன்றையதினம் வருமான வரி இருக்கிறது. அதிலே கணிசமான பங்கு நமக்குத் தரப்படுகிறது. ஆனால், கம்பெனிகளுக்கு வருமானம் வந்தால், Corporation tax அதிலே நமக்கு பங்கே தரப்படுவதில்லை. சில பொருளாதார நிபுணர்கள், ஆய்வாளர்கள், அவர்கள் எழுதியிருக்கிற புத்தகத்திலே இதுபற்றி எழுதியிருக்கிறார்கள், 'இது சகோதரர்களுக்கு செய்கிற மோசடியைவிட மோசமானது' என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், மாநில அரசு, மத்திய அரசு என்பது சகோதரனைப் போன்றது. அவர்கள் நமக்குப் பங்குதர கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், Corporation tax தர மறுத்துவிட்டார்கள். Corporation tax-லே பங்கு தருவோம், அதற்காக முயற்சிப்போம் என்று அறிவித்த ஒரே நிதி அமைச்சர், பெருமதிப்பிற்குரிய சிதம்பரம் அவர்கள் என்பதையும் நான் நன்றி உள்ளத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினமும் Corporation tax-னுடைய பங்கை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அதேபோன்று Consignment Tax—ஒப்படைப்பு வரி. இந்த வரி விதித்தாக வேண்டும். இதற்கு அரசமைப்புச் சட்ட ரீதியாகத் திருத்தங்கள் தேவை. இந்தத் திருத்தங்கள் எல்லாம் 1982-லேயே நிறைவேற்றப்பட்டுவிட்டன. 1982-லேயே திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டும்கூட இந்த நிமிடம் வரை மத்தியில் இருக்கிற அரசு, எந்த அரசாக இருந்தாலும், Consignment Tax அடிப்படையில் வரி வசூலிக்க நமக்கு இன்னும் வாய்ப்பை உண்டாக்கவில்லை. நம்முடைய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அன்புச் சகோதரர் திருநாவுக்கரசு அவர்கள், தேசிய மட்டத்திலே இதையெல்லாம் பேசவேண்டும் என்று சொன்னார். டெல்லியிலே இருப்பவர்களுக்கு ஒரு மனப்பான்மை இருக்கிறது. நீங்கள் எதை எடுத்தாலும் சரி, தேசியக் கொள்கை என்பார்கள். நீங்கள் கழிப்பிடத்தைக் கட்டுவதாக இருந்தாலும் சரி, அதற்கும் தேசியக் கொள்கை என்று சொல்வார்கள். தேசியக் கொள்கை என்பதன் பெயரால், National Policy என்பதன் பெயரால், மாநிலங்களை ஆட்டிப்படைப்பது என்பது அவர்களுடைய ஆதங்கம், அந்தரங்க அரசியல் திட்டம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவேதான், நமக்கிருக்கின்ற உரிமையை எந்தச் சூழ்நிலையிலும் நாம் விட்டுக்கொடுக்கக்கூடாது.

Consignment Tax-க்கு, அரசமைப்புச் சட்டத் திருத்தம் பெறவும் அவர்கள் முன்வந்தார்களா? எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி அமைச்சருடைய மாநாட்டிலே ஆற்றிய உரையில் தெளிவாகச் சொன்னார்.

"The problem of evasion by resorting to branch transfers and consignment sale has become very serious. This has led to loss of revenue for the State, prolonged litigations and friction between the Trade and Commercial Taxes Department. We, therefore, strongly support the recommendations of the Finance Minister that tax on consignment sales should be introduced and levied at the same point as the central tax. The necessary Constitutional amendment came into effect in February 1983 itself. A consensus was arrived at in the Conferences of Chief Ministers and Select Committee of Chief Ministers and also in the Inter State Council meeting. A decision for imposing tax on consignment goods was taken at the Chief Ministers' Conference in 1989 under the Chairmanship of the Prime Minister Thiru Rajiv Gandhi.

Inspite of all these, the Government of India have not yet come forward to give effect to this consensus by enacting suitable legislation"

என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி அமைச்சர்கள் மாநாட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அளவுக்கு முயற்சி எடுத்த பிறகும், இன்னும் அந்த வரி ஆதாரங்களை நமக்குத் தருவதற்கு அவர்கள் முன்வரவில்லை.

அதேபோன்றுதான் additional excise duty என்பது அதிகமான கலால் வரி என்பது Textile, tobacco, sugar இவற்றிற்கு ஒரு பெரிய Lobby டெல்லியில் இருக்கிறது. நானும் 10 ஆண்டுகள் டெல்லியில் இருந்தவன் என்பதாலே எனக்குத் தெரிகிறது. சில ஆலை முதலாளிகள், திட்டமிட்டு. ஜவுளிக்கு விற்பனை வரி கொடுக்கிற நிலை வரக்கூடாது என்கிறார்கள். இன்றையதினம் நீங்கள் எண்ணிப் பாருங்கள். எந்த நகரமாக இருந்தாலும், சரி அது பெரிய நகரமாக இருந்தாலும் சரி, சிறிய நகரமாக இருந்தாலும் சரி, எந்தக் கடைகள அதிகமாக இருக்கும் என்றால், ஒன்று மளிகைக் கடைகள் அதிகமாக இருக்கும். அதற்கடுத்து எந்தக் கடைகள் அதிகமாக இருக்கும் என்றால், ஜவுளிக் கடைகள்தான் இருக்கும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களே, அந்த ஜவுளிக் கடைக்கு வரி போட நமக்கு உரிமையே கிடையாது. அந்த உரிமை



நமக்கு மறுக்கப்பட்டிருக்கிறது; இதற்கு ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தம் தான் ஒரு காரணமாகும்.

பிற்பகல் 1-25

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த முதல்வர் அவர்களும் மற்றவர்களும் சொல்லிப் பார்க்கிறோம். நீங்கள் இந்த additional excise duty என்பதை விட்டுவிடுங்கள், விற்பனை வரியை நாங்கள் வசூலிப்பதற்கு அனுமதி தாருங்கள் என்று மீண்டும் மீண்டும் கேட்கிறோம், பலமுறை கேட்கிறோம், நியாயமாகக் கேட்கிறோம். இந்த நிமிடம்வரை எந்ததேசிய அரசாங்கமும் நம்முடைய கொள்கையை ஒத்துக்கொள்ளவில்லை. இதிலிருந்து ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். நமக்கு ஒரு நிதி ஆதாரத்தைத் தருவது என்றாலே அவர்களுக்கு எந்தக் கோணத்திலும் விருப்பம் கிடையாது. இந்த additional excise duty மூலம், 1997-98-ல் ரூபாய் 316.80 கோடி கிடைத்தது. 1998-99-ல் இது 211 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த வரியைப் போடுவதிலேயே மத்திய சர்க்கார் அக்கறை காட்டுவதில்லை. இந்தக் கூடுதல கலால் வரியை அந்தந்த மாநிலங்களே விதித்துக்கொள்ளலாம், நீக்கிவிட்டு, அந்தந்த மாநிலங்களே விற்பனை வரியை வசூலிக்கலாம் என்று நமக்கு அனுமதி கிடைக்குமானால் அந்த உரிமை, அதிகாரம் வருமானால். அதன் மூலமாக மட்டும் அதிகமாக 1,000 கோடி ரூபாய் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 1,000 கோடி ரூபாயும் கிடைக்குமானால், இங்கே உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப்போல, இந்த வரியைக் குறையுங்கள், இதை நீக்குங்கள், இதை மாற்றுங்கள், இதை அகற்றுங்கள், இதை இரத்துச் செய்யுங்கள் என்று சொன்னார்களே, இந்தக் குறைகளையெல்லாம் ஒரே வருஷத்திலே முடித்துவிடலாம். ஆனால், என்ன செய்வது? நாம், நிதி ஆதாரங்களுக்காக மத்தியில் போராட வேண்டிய நிலையில்தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறோம்.

நானும், நம்முடைய நிதிச் செயலாளர் அவர்களும் கடந்த மாதம் 20ஆம் தேதி நிதி அமைச்சர்கள் மாநாட்டிற்குச் சென்று இருந்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை அனுப்பி வைத்தார்கள். ஏனென்றால், நிதிக் குழுவினுடைய பரிந்துரைக்குப் பதிலாக, மத்திய சர்க்காருக்கு எவ்வளவு நிதி வசூல் ஆகிறதோ, அதில் 29 சதவீதத்தை மாநிலங்களுக்குக் கொடுப்பது, பிறகு அதை 33.33 சதவீதமாக

உயர்த்துவது, அதற்குப் பிறகு 40 சதவீதமாக உயர்த்துவது என்பது ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாகும். ஆனால், மாண்புமிகு உறுப்பிர்களே, இது ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகும், இந்த நிமிடம் வரை அமலுக்கு வரவில்லை. என்றைக்கு அமலுக்கு வரும் என்று இப்போது நிதித் துறை அமைச்சராக இருக்கிற பெருமதிப்பிற்குரிய யஷ்வந்த் சின்கா அவர்களைக் கேட்டேன், அவர் இந்தப் நாடாளுமன்றக் கூட்டத்திலேயே நிறைவேற்றித் தந்துவிடுகிறேன் என்று சொன்னார். அவருக்கு ஆசை இருக்கிறது. ஆனால் அவர் பதவியில் நீடிப்பாரா என்பதில் நமக்குச் சந்தேகம் இருக்கிறது, அரசியல் சூழ்நிலை அவ்வளவு மாறிக்கொண்டிருக்கிறது.

அண்மையில் மத்திய அரசு Surcharge விதித்திருக்கிறது. Surcharge விதித்திருப்பதன் மூலம், அதற்கு 3,000 கோடி ரூபாய் வருமானம் வுருகிறது. அதிலும் நமக்கு பங்கு வேண்டுமென்று கேட்டோம். தருவதாக அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். எனவே, நம்மைப் பொறுத்த அளவில், மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு நிதிகளைப் போராடிப் பெற வேண்டுமோ அதற்கான எல்லா முயற்சிகளிலும் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அவற்றில் வெற்றி கிட்டும் போது நிச்சயமாக நீங்கள் கேட்கின்ற சலுகைகளையெல்லாம், எவையெவை குறைக்க வேண்டுமென்று சொல்கிறீர்களோ அவையெல்லாம் குறைக்க நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ 145 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நல்ல முறையிலே படித்தேன், நல்ல முறையிலே ஆய்வு செய்தேன், அதுசம்பந்தமாகத் தகவல்களை எல்லாம் பெற்றிருக்கிறேன். எனவே, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தெரிவித்துவிட்டார்கள். உரிய நேரத்திலே நிதி ஒதுக்கீடு மசோதாவின்போது நல்ல முறையிலே எவை, எவைக்கு வரிச் சலுகை அளிக்க வேண்டுமென்பதைச் செய்வதாக உறுதியளித்துவிட்டார்கள். எனவே, அந்த வெட்டுத் தீர்மானங்களுக்குள்ளே நான் அதிகமாகச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

அருமைச் சகோதரர் திரு. சுந்தரம் அவர்கள் சிவசங்கரன் விவகாரம் குறித்துச் சொன்னார். செல்லுலார் ஃபோனுக்கு, ஒரு கம்பெனிக்குக்,



கொடுக்க விரும்புகிறீர்கள், அதனால்தான் 2 சதவீதம் என்று சொன்னால் சிவசங்கரன் அதிலே இருக்கிறார், அதனால் இந்தச் சலுகை என்று சொன்னார். இந்த சிவசங்கரனை இப்போது பயன்படுத்துவது யார்? சிவசங்கரனைக் காட்டி மெர்க்கன்டைல் பேங்கில் மக்களை ஏமாற்றிக்கொண்டிருப்பது யார் என்பது நாட்டுக்குத் தெரியும். அதைத்தான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். எந்த சிவசங்கரனிடத்திலேயிருந்து எளிதாக வங்கியை வாங்கிவிடலாம் என்று நாடார் சமுதாய மக்கள் நம்பினார்களோ, அந்த சிவசங்கரன் இப்போது செல்வி ஜெயலலிதாவோடு சேர்ந்துகொண்டு, அந்தச் சமுதாயத்திற்கே பெரிய துரோகத்தை விளைவித்துக்கொண்டிருக்கிறார், (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** முன்னாள் முதலமைச்சருக்கு நண்பனாக விளங்கிக்கொண்டிருக்கிறார். முன்னாள் முதலமைச்சருடைய நண்பர், இன்னாள் முதலமைச்சருக்கு எப்படி நெருக்கம் உள்ளவராக இருக்க முடியும்? இது சாதாரண விஷயம். அதுமட்டுமல்ல, செல்லுலார் தொலைபேசி இதிலே எங்களுக்கு ஏதாவது அதிகாரம் இருக்கிறதா? நம்முடைய சுந்தரத்திற்குச் சொல்கிறேன். அரசமைப்புச் சட்டத்திலே 7-ஆம் அட்டவணையில் யாருக்கு என்னென்ன அதிகாரம் இருக்கிறது என்பது 31-வது பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'Posts, telegraph, telephones, wireless, broadcasting and other like forms of communication' இவையெல்லாம் மத்திய சர்க்காருக்குரியது. பேரம் உங்களுக்குள்ளே நடக்கிறதே தவிர, எங்களுக்குள்ளே நடப்பதாகச் சொல்வது பழி, அபாண்டம் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இன்றையதினம் தேவையின்றி அரசு மீது பழி போட வேண்டாம், எதைச் சொல்வதாக இருந்தாலும் ஆதாரத்தோடு சொல்லுங்கள் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்துவது எனக்குத் தலையாய கடமையாகும்.

வரிவிதிப்புக் கொள்கையைப் பொறுத்த வரையில் ஒரு கருத்தை மட்டும் உங்களுக்குச் சொல்லி நான் முடித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். Titus Tacitus என்ற அறிஞன் ஓர் அற்புதமான கருத்தைச் சொன்னான்.

A peace of a nation cannot be secured without arms; nor arms without pie; nor pie without taxes

ஒரு நாட்டினுடைய அமைதி படையில்லாமல் காக்கப்படாது. அந்தப் படைக்குப் பணம் கொடுக்க வரி தேவை. எனவே, ஓர் அரசாங்கத்தின் மையமே இந்த வரியைப் பின்னணியாகக் கொண்டது.

அதைவிட இன்னொரு அற்புதமான கருத்தை அமெரிக்காவினுடைய குடியரசுத் தலைவராக இருந்த Franklin Roosevelt சொன்னார். அது எல்லோரும் உணர வேண்டிய கருத்தாகும்.

"Taxes after all are the due we pay for the privilege of the membership in the organised society``.

ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயத்தில் நாம் உறுப்பினர்கள் என்று உறுதிபடுத்திக்கொள்வதற்கு வரி வழங்க வேண்டுமென்று சொன்னார். எனவே, வரி விதிப்புக் கொள்கையில் கட்சிமாச்சரியமின்றி எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட நிருவாகத்தைப் பொறுத்தவரையில், சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது கொள்கை அடிப்படைப் பிரச்சினையாகும். அதைப் பற்றி பேசித்தான் இறுதியான முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், மனு நீதி நாட்கள் முறையாக நடத்தப்படுகின்றன. குறை தீர்க்கும் நாள் முறையாக நடத்தப்படுகிறது. மனு நீதி நாள் என்றால், மனு என்ற ஒருவர் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்து, ஜாதி அடிப்படையில், சமய அடிப்படையில், வாணஸ்ரம தர்மத்தின் அடிப்படையில், ஏற்றத்தாழ்வின் அடிப்படையில், நீதி சொன்னானே—அந்த மனு நீதியல்ல. மக்கள் கொடுக்கிற மனுவின் அடிப்படையில் பரிசீலித்து அளிக்கப்படுகிற நீதி—அதனாலே மனு நீதி என்று கலைஞர் அவர்கள் அதற்குப் பெயரிட்டார்கள். பழைய மனு நீதி என்று நாம் யாரும் தவறாக நினைத்துவிடக் கூடாது. அந்தத் திட்டம் ஒழுங்காகச் செயல்படுகிறது. இதிலே ஒன்றும் பிரச்சினையில்லை. பட்டா கொடுக்க வேண்டும், ஆக்கிரமிப்புகளைப் போக்க வேண்டும், வெள்ள நிவாரணம் அளிக்க வேண்டும், தீ



பிடித்தால் பணம் கொடுக்க வேண்டும். இப்படிச் சாதாரண பிரச்சினைகள்தான். ஆனால், பெரிய பிரச்சினைகள் மட்டும்தான் ஓர் அரசாங்கத்திற்கு பெருமை தரும் என்று எண்ணிவிடக் கூடாது. சில்லரைப் பிரச்சினைகள், சிறிய பிரச்சினைகளும்-அதிலே தலையிட்டால்தான் அந்த அரசாங்கத்திற்கு மரியாதை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இதற்காகத்தான் சொல்கிறேன். சோசலிசக் கொள்கையை, தத்துவத்தை வடித்துத் தந்தவர் Das Capital மூலம் Karl Marx ஆகும். அந்த சோசிசலிசக் கொள்கைக்குப் பிறகு, ஜனநாயகப் பொருளாதாரக் கொள்கையை வடித்துத் தந்தவர் Wealth of Nations-என்ற நூலின் மூலம் Adam Smith என்பவராகும். அந்த Adam Smith என்பவர் ஒரு சிறிய, ஒரே வாக்கியம் சொல்லியிருக்கிறார். A little help is a request to carry a State to the highest degree.

பிற்பகல் 1-35

ஒரு சின்ன உதவி ஒரு மாநிலத்தை மேல் மட்டத்திற்கு உயர்த்துவதற்கு உதவுகிறது. அவனுக்கு உரிய காலத்திலே பட்டாக் கொடுத்தோ, அவனுக்கு உரிய காலத்திலே நிவாரணம் கொடுத்தோ, உரிய காலத்திலே அவனுக்கு உதவி செய்கிறோமே, அது சின்ன உதவிதான்; பாலத்தைக் கட்டுவதுபோன்று, பள்ளியை அமைப்பது போன்று, பல்கலைக்கழகத்தைத் தொடங்குவது போன்று பெரிய பணி அல்ல; ஆனால், அரசின் உயர்வுக்கு அந்தச் சிறிய பணியும் ஆதாரமாக இருக்கிறது என்று ஆடம் ஸ்மித் சொன்னார். இதை மனதிலே வைத்துத்தான் எங்களுடைய அரசாங்கம் செயல்படுகிறது என்பதை நான் இந்த அவைக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மானியக் கோரிக்கை எண் 9 மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். கடந்த காலத்தைவிட எங்களால் முடிந்த அளவுக்குப் புதிய மாவட்டங்களை, புதிய கோட்டங்களை, புதிய வட்டங்களை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 5 புதிய மாவட்டங்கள், 8 கோட்டங்கள், 24 வட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு இருக்கின்றன, இந்த 3 ஆண்டு காலத்திற்குள். இதோடு முடிந்துவிட்டது என்று யாரும் கருதாதீர்கள்; சில வட்டங்கள் தேவை என்று சொன்னீர்கள்; சில கோட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டீர்கள். இவைபற்றி எல்லாம்

முதல்வர் அவர்களிடத்திலே நான் விவாதித்தேன். இவைபற்றி எதிர்காலத்திலே நிச்சயமாகப் பரிசீலித்து உதவி செய்யலாம் என்று என்னிடத்திலே சொல்லி இருக்கிறார்கள். நாங்கள் இந்த 2, 3 ஆண்டுகளுக்குள் 8 கோட்டங்கள், 5 மாவட்டங்கள், 24 வட்டங்கள் உருவாக்கி இருக்கிறோம். ஆனால், செல்வி ஜெயலலிதா ஆட்சியில் 5 ஆண்டுகளில் 3 மாவட்டங்கள், 6 கோட்டங்கள், 11 வட்டங்கள்தான் அவர்களால் தொடங்கப்பட்டன.

இந்த அரசு எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாவட்டங்களைப் பிரித்து அனுமதித்ததோடு மட்டுமல்லாமல், அதற்கான இடத்தையும் பெற்று, அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் நாங்கள் செய்துவிட்டோம். திருவள்ளூர் மாவட்டத்திற்கு நிலத்தின் மதிப்பு உள்பட 5.95 கோடி ரூபாய், திருவாரூர் மாவட்டத்திற்கு 7.20 கோடி ரூபாய், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு 11.90 கோடி ரூபாய், கரூர் மாவட்டத்திற்கு 7.66 கோடி ரூபாய், நாமக்கல் மாவட்டத்திற்கு 8.47 கோடி ரூபாய், தேனி மாவட்டத்திற்கு 5.62 கோடி ரூபாய், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 6.176 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இன்றையதினம் தொடங்கும் பணிக்கும் நாங்கள் தயாராகிவிட்டோம் என்பதை இந்த அவையிலே நான் சொல்ல விரும்புகிறேன். வருகிற 25.4.1999-ல் திருவள்ளூர் மாவட்டத்திற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டு கிறார்கள். 15-5-1999 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்திற்கும் 16-5-1999 அன்று திருவாரூர் மாவட்டத்திற்கும் அடிக்கல் நாட்டப் போகிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்கிறேன். எனவே, 'சொன்னதைச் செய்வோம்; செய்யக்கூடியதைத்தான் சொல்வோம்' என்ற அடிப்படையில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த அளவுக்கு, நேர்மையாக, திறமையாக, முனைப்போடு செயல்படுகின்ற அரசின் மானியக் கோரிக்கைகளுக்கு நீங்கள் எல்லாம் வெட்டுத் தீர்மானம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை; நீங்களாக அதைத் திரும்பப்பெற்று, இந்த அரசுக்கு பெருமையைத் தேடித் தருவீர்கள் என்பதில் நம்பிக்கை உண்டு. எனவே, நீங்கள் எல்லாம் வெட்டுத் தீர்மானத்தை திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையில் Corporation Tax என்று வாய் தவறிச்



சொல்லிவிட்டார்கள் என்று கருதுகிறேன்; அதை Corporate Tax ஆக எழுத வேண்டும்.

விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் — நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிச்சாமி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு.ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு.டி. மணி.

**திரு. டி. மணி**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு.ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு.கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை, திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.99,56,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1-40

## கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு.ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு .ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம்



பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 147,08,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 489,91,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (12-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

129. 1997-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி மதிப்பீடுகளுக்கு அனுமதியளித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கு ஏற்பளித்தல் குறித்த பண வரையறைகள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 10-12-1997-ஆம் நாளிட்ட 302-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1981-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

[1999 ஏப்ரல் 9

130. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டு கணக்குகள். [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

131. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (ஆங்கிலம்)

132. 1997-98-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

80. மானியக் கோரிக்கை எண்.4-தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள், நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

81. வணிகவரித் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

82. மானியக் கோரிக்கை எண்.11-மாவட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

83. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை ஆராய்ச்சியின் சீரிய படைப்புகள் (1998-99) (தமிழ்)

84. மதிப்பீட்டுக் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1998-99.

85. மனுக்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை, 1998-99.

86. மனுக்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை, 1998-99.

87. மனுக்கள் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1998-99.



# இணைப்பு-I

[57-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## மானியக் கோரிக்கை எண்-4

## தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள், நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

**தோற்றுவாய்**

தமிழகத்தில் 1998-99 ஆம் ஆண்டில் வரி விதிப்பின் மூலம் சுமார் ரூ. 6583.00 கோடி வருவாய் வணிக வரிகள் மூலமாக ஈட்டப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில், வரி விதிப்பின் மூலம் ஈட்டப்படும் வருவாய் ஆண்டுதோறும் கூடிக் கொண்டே வந்துள்ளது. தற்போது, அரசின் வருவாயில் 70 விழுக்காடு விற்பனை வரி மூலம் அரசுக்கு கிடைக்கிறது.

2. முனைவர் திரு. ராஜா செல்லையா அவர்களது தலைமையிலான குழு, 1994 ஆம் ஆண்டு அளித்த அறிக்கை பல்வேறு மாநிலங்களின் நிதி அமைச்சர்கள் கொண்ட ஒரு குழுவில் ஆய்ந்து விவாதிக்கப்பட்டது. அக்குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது:-

(1) வரி கட்டமைப்பைச் சீரமைத்தல் மற்றும் எளிமைப்படுத்துதல்.

(2) மாநிலங்களுக்கிடையே இணக்கமான வரி வீதங்களை உருவாக்குதல்.

(3) மதிப்புக் கூட்டுவரி முறையைப் படிப்படியாக அறிமுகப்படுத்துதல்.

3. மேற்சொன்ன வழிமுறைகளைக் கருத்திற்கொண்டு, தமிழகத்தில் வரி விதிப்புக் கட்டமைப்பில் பெரிய அளவில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. மாநிலம் முழுவதும் அனைத்து பொருட்களுக்கும் மேல்வரி மற்றும் கூடுதல் மேல்வரி அறவே நீக்கப்பட்டன. கூடுதல் விற்பனைவரி விதிப்பதற்கான விற்பனைத் தொகையைக் கணிசமாக உயர்த்தி, வரிக்கட்டமைப்பு சீரமைக்கப்பட்டது. அரசின் நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையைச் செம்மையாக செயல்படுத்தும் நோக்குடன் விற்பனைவரி அமைப்பு மற்றும் நடைமுறைகளில் மாற்றங்கள் செய்வது பற்றி ஆய்வு செய்ய திரு. சி. தங்கராசு, இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களைத்

[1999 ஏப்ரல் 9

தலைவராகக் கொண்டு, 1996-ல் விற்பனைவரி சீர்திருத்தத் குழு ஒன்று அரசால் அமைக்கப்பட்டது.

இக்குழுவின் பரிந்துரைகள் அரசால் ஆய்வு செய்யப்பட்டு, பின்வருவன உட்பட பெரும்பாலான பரிந்துரைகள்மீது ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:-

(1) பதிவுச் சான்றிதழ் புதுப்பித்துக் கொள்வதற்கான காலக்கெடு ஒவ்வொரு ஆண்டும், அந்த ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து ஜூன் 30 ஆம் தேதிவரை என்று இருந்தது. அக்காலக்கெடு தற்பொழுது அந்தந்த ஆண்டில் "செப்டம்பர் 30 ஆம் தேதிவரை" நீட்டித்து, அதற்கொப்ப தமிழ்நாடு வணிகவரி விதி 24(9-A) திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(2) உற்பத்தியில் நுகரப்படும் அல்லது பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு மட்டுமல்லாது உற்பத்திக்காகத் தேவைப்படும் பொருட்களுக்கும் கொள்முதல் வரிவிதிக்கும் வகையில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 7-A திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(3) மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956-ன் பிரிவு 5(3)-ன் கீழ் வழங்கப்படும் வரி விலக்கு சம்பந்தமாக, வெளிநாட்டு வணிகரின் சரக்குக் கொள்முதல் ஆணையைத் தாக்கல் செய்யுமாறு வற்புறுத்தத் தேவையில்லை என அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(4) தமிழகத்தில் அனைத்து மட்டத்திலிருக்கும் மக்கள் நிலையைக் கருதி, குறிப்பாக ஏழை எளியவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலை, வரிவிதிப்பினால் உயராமலிருக்கும் வகையில் அரசு வரிவிதிப்புக் கொள்கையை வகுக்கின்றது. உற்பத்தியையும், வேலை வாய்ப்பையும் பெருக்கும் தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் வரிவிதிப்பை அமைத்தால்தான் மக்கள் வாழ்க்கை முன்னேற்றமடைவதுடன், வருவாயும் பெருகும். இதனைக் கருத்தில் கொண்டு, அரசு தனது நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையை 1996-97-ல் வெளியிட்டது. வகுக்கப்பட்ட நீண்டகால வரிவிதிப்புக் கொள்கைகளாவன:



1999 ஏப்ரல் 9]

(1) வரிவீதங்களில் அதிக அளவில் வெளிப்படைத் தன்மையும் வரிவிதிப்பு மற்றும் வரிவசூலில் எளிமையையும் அளிக்கும் நோக்குடன் வரி வீதங்கள் மற்றும் வரி படிமுறைகளைச் சீரமைத்தல்.

(2) வரி விதிப்பில் நவீன முறைகளையும், நடவடிக்கைகளையும் அதிக அளவில் அறிமுகப்படுத்துதல்.

(3) இம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மேம்பாட்டைத் தூண்டுதல் மற்றும் உள்ளூர் கொள்முதல் மற்றும் உள்ளூர் தயாரிப்பு ஆகியவைகளை ஊக்குவித்தல்.

(4) வரி விலக்கு, இணக்க வரி மற்றும் சுயவரி மதிப்பு போன்ற வரி விதிப்பு நடைமுறைகள் என்ற வகையில், பெரும் எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

(5) அன்றாடம் பொது மக்கள் பயன்படுத்தும் வீட்டு உபயோகப் பொருட்களின்மீது விதிக்கப்படும் வரிச் சுமையினைக் குறைத்தல்.

5. அரசின் நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையின் அடிப்படையில், தொடர்ந்து அரசு வழங்கிய ஆண்டு வாரியான வரிச் சலுகைகள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1996-1997 | ரூ. | 353 கோடி |
| 1997-1998 | ரூ. | 143 கோடி |
| 1998-1999 | ரூ. | 81 கோடி |
| 1999-2000 | ரூ. | 25 கோடி (சுமார்) |

6. 1999-2000 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பின்வரும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன:—

**அ. மக்கள் நலன் தொடர்பானவை**

(1) (அ) மின்னணு படிப்பெருக்கி பொறிகள், படிப் பெருக்கிகள் உள்ளடங்கலான ரிப்போகிராபிக் நகல் பொறிகள், ஜெராக்ஸ் மற்றும் ஒளிப் படமெடுக்கும் பொறிகள் மற்றும் குறுகிய அளவிலோ, பெரிதுபடுத்திய அளவிலோ அல்லது மூலப்படிகளின் அதே அளவிலோ படிகளைப் பெறுவதற்கான பிற மின்னணு சாதனங்கள்.

(ஆ) மின்னணு அட்டவணையிடும் பொறிகள், வருகை அட்டை துளையிடு பொறிகள், அஞ்சல் முத்திரையிடு பொறிகள், முகவரியிடும்

பொறிகள், ஒரே சமயத்தில் பதிவாக்கும் கருவிகள் மற்றும் இதர மின்னணுப் பொருட்கள் உள்ளடங்கலாக (முதலாம் அட்டவணையில் வேறெங்கும் கூறப்படாத) பிற மின்னணு அமைப்பு முறைகள், கருவிகள், சாதனங்கள் மற்றும் இதர மின்னணுப் பொருட்கள்.

(இ) அனைத்து வகை மின்னணு தொலை அச்சுப்பொறி மற்றும் தொலை நகல் பொறிகள்.

(ஈ) மின்னணு தட்டச்சுப் பொறிகள்

(உ) ஒலித்தட்டை இயக்கச் செய்யும் கருவிகள் மற்றும் வானொலி இணைந்த கிராமப்போன்கள் உள்ளடங்கிய அனைத்துவகை கிராமப்போன்கள், கிராமப்போன் ஒலித் தட்டுக்கள், ஒலித்தட்டு அடுக்கிகள் மற்றும் ஒலித்தட்டு மாற்றிகள்.

(ஊ) கம்பியில்லா வான்வழி ஒலி அலைகளைப் பெற்று ஒலிக்கச் செய்கின்ற கருவிகளுடனோ அல்லாமலோ, சொல்வதைப் பதிவு செய்து எழுதுவதற்காக திரும்ப ஒலிக்கின்ற கருவிகள், சிருந்து ஒலிப்பேழை ஒலிப்புக் கருவிகள், ஒலிப்பேழை பதிவுக் கருவிகள், பேழை ஒலிப்புக் கருவிகள், அடக்க வட்ட தட்டு ஒலிப்புக் கருவிகள் (அவற்றில் ஏதேனும் ஒன்றுடன் சேர்ந்த அமைப்பு) உள்ளடங்கலாக ஒலியைப் பதிவு செய்கின்ற மற்றும் மீண்டும் ஒலிக்கச் செய்கின்ற சாதனங்கள் (சி பகுதியில் 49-வது இனம் நீங்கலாக) மற்றும் அவற்றுடன் பயன்படுத்தப்படும் அடக்க வட்டத்தட்டு, காந்த சக்தி ஒலி நாடாக்கள், நுண்ணிய ஒலி நாடாக்கள், நுண்ணிய ஃபிஷி.

(எ) தொலைக்காட்சிப் படம் எடுக்கும் கருவிகள், தொலைக்காட்சிப் படம் காட்டும் கருவிகள், குறிப்பிட்ட எல்லைக்குள் ஒளிபரப்பைக் காட்டுகிற தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் படம் எடுக்கும் கருவிகள், சிருந்து தொலைக்காட்சிப் பெட்டி, வீடியோ தொலைக்காட்சிகள், வீடியோ படம் எடுக்கும் கருவிகள், தொலைக்காட்சித் தூண்டமைப்புகள், வட்டில் வானலைக் கொடி (டிஷ் ஆண்டனா) மற்றும் திறன் பெருக்கிகள்.

(ஏ) மின்னணு அனலாக் டிஜிட்டல் நேரங் காட்டுகின்ற அமைப்புடன் சேர்த்தோ இல்லாமலோ உள்ள ஒலிப்பேழைப் படம் காட்டும் மற்றும் படம் பதிவு செய்யும் கருவிகள், காந்த அலையுடைய வெற்று ஒளி நாடாக்கள், அவற்றுடன் சேர்த்து பயன்படுத்துவதற்கான ஒளிப் பேழைகள் மற்றும் ஒளிப் பேழை கணிப் பொறிகள் (மின்னணு விளையாட்டுகள்);



ஆகிய பொருட்களுக்கு 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்படுகிறது.

(2) செல்லுலார் தொலைபேசிகளுக்கு விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(3) (அ) ரொக்கம் பதிவு செய்யும், அட்டவணைப் படுத்தும், கணக்கிடும்-பொறிகள் உள்ளடங்கலான மின்னணுப் பொறிகள்.

(ஆ) டிரான்சிஸ்டர் மற்றும் கையடக்க வானொலிப் பெட்டி, ஒன்றில் இரண்டாக செயல்படும் சாதனம், ஒலிப்பதிவு/மறு ஒலிப்புச் சாதனங்கள் மற்றும் ஒலிப் பேழைகள்.

(இ) தமிழ் தினசரி நாட்காட்டி

(ஈ) தொலையச்சுக் காகிதம், தட்டச்சுக் காகிதம், தட்டச்சு படிபெருக்கும் காகிதம், உயர் தன்மைக் காகிதம் (Bond Paper) ஆகிய பொருட்களுக்கு 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக வரி குறைக்கப்படுகிறது.

(4) (அ) மின்னணு அல்லாத படிபெருக்கி இயந்திரங்கள், படிபெருக்கி கருவிகள் மற்றும் படிகள் எடுக்க பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் படிகள் எடுக்க பயன்படுத்தப்படும் பிற கருவிகளும், அதற்குரிய உதிரிப் பாகங்கள் மற்றும் மை நாடாக்கள்;

(ஆ) மின்னணு அல்லாத அட்டவணையிடும் மற்றும் கணக்கிடும் இயந்திரங்கள் (Non-electronic Tabulating and calculating machines) மற்றும் அவற்றின் பாகங்கள், உதிரிகள் மற்றும் அவற்றில் பயன்படுத்தப்படும் மை நாடாக்கள்;

ஆகியவற்றிற்கு 20 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக வரி குறைக்கப்படுகிறது.

(5) வணிகச் சின்னம் இடப்பட்ட உலர்ந்த ரொட்டித் துண்டு (ரஸ்க்) மீது விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து, ரொட்டிக்கு இணையாக, 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(6) அடக்கமான பேரொளி குழல் விளக்குகள் (Compact Fluorescent lamp) மீது விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(7) அனைத்து வகை மோட்டார் வாகனங்களில் பொருத்தப்படும் பல்புகள் மற்றும் ஒலிப்பான்கள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(8) வாழ்த்து அட்டைகள், அழைப்பிதழ்கள் போன்றவை மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(9) விசை உழுக்கருவிகளின் இழுவைகள், இரும்பு வகையல்லாத உலோகங்களின் கழிவுகள், முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கம்பளியால் பின்னப்பட்ட பொருள்கள் சர்பத்துகள் ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(10) உடனடி சாம்பிராணி வில்லைகள் மற்றும் குச்சிகள்மீது விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(11) சித்த மருந்துகள் விற்பனைக்கு 17-7-1996 முதல் முன்தேதியிட்டு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சூரிய ஒளியால் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள் (Saree falls), காலணிப் பட்டிகள் (straps), பருத்திநூல் கயிறு, மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம், இறால் உண்ணும் உணவு, கூனி இறால் உண்ணும் உணவு, நீராவி, கரும்புச் சக்கை ஆகியவற்றிற்கு 1-4-1999 முதல் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

**ஆ. தொழில்துறை தொடர்பானவை**

(1) கணினிகள் மற்றும் புற உறுப்புகள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. அவற்றின்மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனைவரி நீக்கப்படுகிறது.

(2) தடையில்லா மின் வழங்கும் அமைவுகளுக்கு விற்பனைவரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(3) தங்கம், வெள்ளிக் கட்டிகளுக்கு விதிக்கப்படும் வரி 2 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. இவற்றின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனைவரி நீக்கப்படுகிறது.



(4) பழுதடைந்த அல்லது தேய்ந்த நகைகளுக்கு விதிக்கப்படும் கொள்முதல் வரி 2 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(5) இந்திய ரிசர்வ் வங்கியினால் நியமிக்கப்பட்ட அமைப்புகள் தங்கநகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்கும் தங்கத்திற்கு முழு விற்பனை வரி விலக்கும் அவ்வாறு விற்கப்பட்ட தங்கத்திற்கு, தங்கநகை ஏற்றுமதியாளர்களுக்கு பிரிவு 7-Aயின்கீழ் விதிக்கப்படும் கொள்முதல் வரியிலிருந்து விலக்கும் அளிக்கப்படுகிறது.

(6) வைரம், மரகதம், மாணிக்கம், இயற்கை அல்லது செயற்கை முத்துக்கள், வைடூரியம், நீலக்கல், சிவந்த ரத்தினம், பவளம், புஷ்பராகம் போன்ற விலை மதிப்புள்ள கற்களுக்கு விதிக்கப்படும் வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(7) ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதி செய்யத்தக்க உரிமம் போன்றவற்றிற்கு (REP Licences, etc.) விதிக்கப்படும் வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

(8) காஸ் (Gauze) பாண்டேஜ் துணிகளுக்கான (bandage) வரி விலக்கு வரம்பு ரூ. 50 இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்படுகிறது.

(9) தற்போது குடிமுறைப் பொறியியல் வேலைகளுக்கு (Civil Engineering Works) இணக்க (compound) முறையில் வரி செலுத்தும் விருப்பத்தேர்வு ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்டதுபோல் மற்ற வேலை ஒப்பந்தங்களுக்கும் இணக்க வரிமுறை அனுமதிக்கப்பட்டு, வரி வீதம் மொத்த விற்பனையளவில் 4 விழுக்காடு என்று நிர்ணயம் செய்யப்படுகிறது.

**இ. வணிக சமுதாயம் தொடர்பானவை**

(1) செயற்கை இழை நூலுக்கும், செயற்கை இழைகளுக்கும் (Man made fibre and yarn) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டங்களின்கீழ் 26-3-1999 வரை 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக அளிக்கப்பட்ட வரிக் குறைப்பு அதே நிபந்தனைக்குட்பட்டு காலவரையின்றி நீட்டிக்கப்படுகிறது.

[1999 ஏப்ரல் 9

(2) உணவு மற்றும் குளிர்பானங்கள் மற்றும் நகை வியாபாரிகளுக்கு தற்பொழுது உள்ள இணக்க வரி விதிப்பு முறை, விருப்புரிமையாக ஆக்கப்படுகிறது. இவ்விணக்க வரி விதிப்பு முறையில் வரி செலுத்த விருப்பமில்லாத வணிகர்கள்,

(i) ஆண்டு மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 25 இலட்சத்திற்குமேல் உள்ள உணவு மற்றும் குளிர்பான வணிகர்களைப் பொறுத்தமட்டில், 2 விழுக்காடு வீதம் வரியை வசூலித்து அரசுக்குச் செலுத்த வேண்டும்.

(ii) ஆண்டு மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 3 இலட்சத்திற்கு மேல் உள்ள நகை வணிகர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் நகைகள்மீது 4 விழுக்காடு வீதம் வரியை வசூலித்து அரசுக்குச் செலுத்த வேண்டும்.

(3) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் பிரிவு 3(4)-ன் கீழ் விதிக்கப்படும் வரி 2 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. மேலும் மாதம் ஒருமுறை வழங்க வேண்டிய படிவம் XVII, ஆண்டுக்கு ஒருமுறை வழங்கினால் போதுமானது.

(4) தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்படாத பொருட்கள் இதுவரை பகுதி D-வரிசை எண் 67-ன்படி 11 விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வந்தது. இனிமேல், அப்பொருட்கள் வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்கு இணையான பொருட்கள் இடம் பெற்றுள்ள பகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, பின்வரும் பொருட்கள் முதலாம் அட்டவணையில் அதற்குரிய பகுதிகளில் சேர்க்கப்பட்டு அதற்கு இணையான பொருட்களுக்கான வரிவீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(அ) பகுதி-A 2 விழுக்காடு

வணிகச் சின்னம் இல்லாத சுண்ட வத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல், போன்ற வணிகச் சின்னமின்றி விற்பனை செய்யப்படும் அனைத்து வத்தல்கள்.



1999 ஏப்ரல் 9]

(ஆ) பகுதி-B 4 விழுக்காடு

(1) கழிசலான் (condemned) கோணிப் பைகள்

(2) அந்துருண்டைகள் (Napthalene Balls)

(3) (அ) முடி மற்றும் உடலைச் சுத்தப்படுத்தப்படும் பொடிகளான- சிகைக்காய், பூந்திக் கொட்டை, இலுப்பைப் புண்ணாக்கு, பூலான் கிழங்கு, உசிலை இலைகள், கஸ்தூரி மஞ்சள் மற்றும் அவற்றுடன் சேர்க்கப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிப் பொருட்கள் ஆகியவற்றிற்கு.

(ஆ) முதலாம் அட்டவணை 'E' பகுதியில் பிரிவு 22-ல் சொல்லப்பட்டுள்ள இனங்களல்லாத தேய்த்துக் கழுவி சுத்தமாக்கும் பொடிகள்

(4) சணல் முறுக்கு நூல், சணல் மேசை விரிப்புகள், சணல் கதவடி விரிப்புகள், சணல் கைவினைப் பொருட்கள் மற்றும் சணல் சுவர் அலங்காரப் பொருட்கள்

(5) அனைத்து வகை கொசுவலைகள்

(6) ஓட்ஸ்

(7) அச்சிட்ட மற்றும் அச்சிடப்படாத காகித உறைகள்

(8) செம்மண் மற்றும் சிவப்பு சரளைக் கற்கள்

(9) (i) உடற் கட்டமைப்புக்கான சாதனங்கள் உள்ளடக்கிய உடற்பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் சாதனங்கள்

(ii) குழந்தைகளுக்கான விளையாட்டுத் திடல் உபகரணங்கள்

(10) (i) நிலக்கடலைப் பருப்பு, எள், அரிசிப் பொரி, வறுத்த பயறு, பட்டாணிப் பருப்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட இனிப்புகள்

(ii) வணிகச் சின்னத்துடனோ அல்லது வணிகச் சின்னமின்றியோ விற்கப்படும் முறுக்குகள்

(iii) வணிகச் சின்னமின்றி விற்கப்படும் அனைத்து வகையான சிப்ஸ்

[1999 ஏப்ரல் 9

11. வணிகச் சின்னமுடன் விற்பனை செய்யப்படும் சுண்டவத்தல், கத்தரிக்காய் வத்தல், கொத்தவரங்காய் வத்தல், மணத்தக்காளி வத்தல் மற்றும் வணிகச் சின்னமுடன் விற்பனை செய்யப்படும் அனைத்து காய்கறி வத்தல்கள்.

(இ) பகுதி-C 8 விழுக்காடு

(1) அகர் பத்திகள்

(2) இரும்பு மற்றும் எஃகினால் செய்யப்பட்ட அனைத்து வகை கம்பித் தடுப்புகள்

(3) காலி எரிவாயு சிலிண்டர்கள்

(4) சாவி சங்கிலிகள் மற்றும் சாவிப் பிடிப்பான்கள்

(5) (i) அறுவை சிகிச்சையின்போது பொருத்தப்படும் பொருட்கள், செயற்கை எலும்புகள், எலும்பு சிமெண்ட், அடிவயிற்றைத் தாங்கும் பட்டைகள், கழுத்துப் பட்டைகள், முழங்கால்மேல் பொருத்தப்படும் உறைகள்.

(ii) லேக்டோஸ் ஐ.பி./பீ.பி.

(iii) வெப்ப அளவிகள் (Thermometers)

(6) முதலாவது அட்டவணையில் வேறெங்கும் சொல்லப்பட்ட இனங்கள் தவிர இரும்பு அல்லாத உலோகங்கள் மற்றும் அவற்றின் உலோகக் கலவைகள்

(7) காகிதக் கைக்குட்டைகள்

(8) நிழற்படத் திரட்டு வைப்பேடு (Photo Album) முத்திரை வில்லைகள் திரட்டு வைப்பேடு மற்றும் அவைபோன்ற திரட்டு வைப்பேடுகள் (ஆல்பம்)

(9) பாட்டில்களில், பிளாஸ்டிக் பைகளில், குவளைகளில் மற்றும் சிறிய தவலைகளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் தண்ணீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் அல்லது எந்த ஒரு அடைப்பானிலும் வைத்து விற்கப்படும் தாது குடிநீர்.

(10) கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள், ஆணைப் புத்தகங்கள், ரசீது புத்தகங்கள், ஞாபகப்படுத்தும் குறிப்பேட்டுப் புத்தகங்கள்,



1999 ஏப்ரல் 9]

மடிப்பான்கள், கோப்பு உறைகள் மற்றும் காகிதம் அல்லது காகித அட்டையினால் செய்யப்பட்ட புத்தக உறைகள்.

(11) வணிகச் சின்னமின்றி விற்பனை செய்யப்படும் ஐஸ்கிரீம்கள்.

(ஈ) பகுதி-D 11 விழுக்காடு

(1) (i) வணிகச் சின்னமிட்டு பதப்படுத்தி அடைக்கப்பட்ட சுத்தமான இறைச்சி, ஆகாரத்திற்கான கோழி, மீன், கடல் உணவு மற்றும் முட்டைகள்.

(ii) வணிகச் சின்னமுடைய மற்றும் அடைக்கப்பட்ட சுத்தமான காய்கறிகள் மற்றும் பழங்கள்.

(2) (i) முதலாம் அட்டவணையில் வேறு எந்தவொரு இடத்திலும் சொல்லப்படாத உலர்ந்த பழங்கள் மற்றும் கொட்டைகள் மற்றும் மேல் ஓடு நீக்கப்பட்ட பாதாம் கொட்டை, பிஸ்தா, உலர்ந்த திராட்சைகள், அத்திப்பழங்கள், அப்ரிகாட், வால்நட் ஆகியன

(ii) உலராத பேரீச்சம்பழம்.

(உ) பகுதி-E 16 விழுக்காடு

(1) வணிகச் சின்னத்துடன் விற்பனை செய்யப்படும் உருளைக் கிழங்கு சிப்ஸ் போன்ற அனைத்து சிப்ஸ் வகைகள்.

(2) பழைய மற்றும் உபயோகித்த கண்ணாடி பாட்டில்கள்மீது கடைசி கொள்முதல் வரி.

(3) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மித அடர்த்தி நார்ப் பலகைகள் (Medium density fibre boards) மற்றும் ஒருங்கடுக்கான மெல்லிய மேல் பூச்சுடைய மித அடர்த்தி கொண்ட பிளாஸ்டிக் நார்ப் பலகைகள்.

(4) நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மித அடர்த்தி நார்ப் பலகைகள் (MDF Boards) மற்றும் ஒருங்கடுக்கான மெல்லிய மேல் பூச்சுடைய மித அடர்த்தி கொண்ட பிளாஸ்டிக் நார்ப் பலகைகள் மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வரிவிதிப்பு மாற்றங்களால் வரி வருவாயில் ஏற்படும் விளைவுகளை ஓர் ஆண்டுக்குப் பின் பரிசீலித்து எதிர்பார்த்த கூடுதல்

வரி வருவாய் கிடைக்கவில்லை என்றால், இவற்றில் தக்க மாற்றம் செய்ய நேரிடும்.

(5) வணிகராகப் பதிவு செய்ய மொத்த விற்பனைத் தொகை சென்ற நிதிநிலை அறிக்கையில் ரூ. 75,000-லிருந்து ரூ. 1,50,000 ஆக உயர்த்தப்பட்டது. வரி விதிப்பிலிருந்து விலக்குக்கான வரம்பையும் வணிகராகப் பதிவு செய்வதற்கான வரம்பையும் ஒரே சீராக ஆக்க முடிவெடுத்து, பதிவு செய்ய மொத்த விற்பனைக்கான வரம்பு ரூ. 3,00,000 ஆக உயர்த்தப்படுகிறது. இந்த மாற்றத்தால் 20,000-த்திற்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் பயனடைவார்கள்.

### 6. சமாதான் திட்டம்

வணிகவரி நிலுவைகளை முனைப்புடன் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 43 கோடியாக இருந்த வணிகவரி நிலுவை வசூல், 1998-99 ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்கள் வரை ரூ. 130 கோடியாக உயர்ந்துள்ளது. வரி நிலுவைகளைக் குறைக்க சட்ட மாற்றங்கள் செய்வது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. வணிகவரி பற்றிய மேல்முறையீடுகள் பல்வேறு மேல்முறையீட்டு நிலைகளில் பல்லாண்டுகளாகத் தேங்கிக் கிடப்பதால், அரசுக்கு வரவேண்டிய வருவாய் கோடிக்கணக்கில் நிலுவையில் உள்ளது. இந்தத் தொகையில் கணிசமான பகுதியை விரைவில் வசூலித்திட, மத்திய அரசு செயல்படுத்திய “சமாதான்” திட்டம் போன்ற ஒன்றை நமது மாநிலத்தில் செயல்படுத்துவது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### 7. புதிய வருவாய்க்குரிய திட்டங்கள்

1999-2000 ஆம் ஆண்டில் புதிய மற்றும் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன:

(1) தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு விதிக்கப்படும் விற்பனைவரி 4 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

(2) பான் மசாலா மீதான வரி 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

(3) சிகரெட் பிடிப்பதனால் விளையும் கேட்டினை பெருமளவு குறைப்பதற்காக பீடி நீங்கலாக சிகரெட் போன்ற ஆடம்பர புகையிலைப் பொருட்களுக்கு அண்டை மாநிலங்களில் உள்ளதுபோல் 5 விழுக்காடு ஆடம்பர வரி விதிக்கப்படும்.



### 8. மதிப்புக் கூட்டுவரி

மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax) விதிப்பைப் பொறுத்தவரை வணிகர்களின் கோரிக்கையை ஆழ்ந்து ஆய்வு செய்த பின்னர் இம்முறை பற்றியும் இதன் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் பற்றியும் வணிகர்களுக்கு விளக்கவும், இதனைச் செயல்படுத்தும் முறை பற்றி வணிகவரித் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் முடிவு செய்யப்பட்டு, இவ்வரிவிதிப்பு முறையைச் செயல்படுத்துவதை 31-3-1999 வரை நிறுத்தி வைக்கப்பட்டது. சென்னையிலும், மதுரையிலும் வணிகவரித் துறை அலுவலர்கள் மற்றும் வணிகச் சங்கப் பிரதிநிதிகளுக்கு புதுதில்லியிலிருக்கும் தேசிய பொது நிதி மற்றும் கொள்கை பயிற்சி நிலையத்திலுள்ள (NIPFP) வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இவ்வரிவிதிப்பு நடைமுறையை செம்மைப்படுத்த இன்னும் கால அவகாசம் தேவைப்படுமெனக் கருதப்படுவதால், இவ்வரிவிதிப்பு முறையை செயல்படுத்தும் திட்டத்தை மேலும் ஓராண்டு காலத்திற்கு அதாவது 31-3-2000 வரை நிறுத்தி வைக்க அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### 9. வணிகவரித் துறையின் அமைப்பும், செயல்பாடுகளும்

வணிகவரித் துறை, (1) வரிவிதிப்புப் பிரிவு (2) தணிக்கைப் பிரிவு (3) செயலாக்கப் பிரிவு (4) மேல்முறையீட்டுப் பிரிவு என நான்கு பிரிவுகளாகச் செயல்பட்டு வருகிறது.

வணிகவரி துணை ஆணையர்களின் மாதாந்திர ஆய்வுக் கூட்டங்களின் மூலமும் வணிகவரிக் கோட்டங்களுக்கு தாமே நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொள்வதன் மூலமும் வரி விதிப்புப் பிரிவு மற்றும் செயலாக்கப் பிரிவின் செயல்முறைகளை வணிகவரி சிறப்பு ஆணையர் கண்காணித்து ஆய்வு செய்கிறார். தணிக்கைப் பிரிவைப் பொறுத்தவரை, துறை தணிக்கை அலுவலர்களின் தணிக்கைப் பணி மற்றும் மாநில கணக்காயரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளைக் களையும் பணிகளைக் கண்காணிக்க வணிகவரி ஆணையரின்கீழ் ஓர் இணை ஆணையர் உள்ளார்.

### மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

இம்மாநிலத்தில் விற்பனைவரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு அது மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர்கள் ஆகியோரின் தீர்ப்புகளின் மீது எழும் மேல்முறையீடுகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகிறது.

[1999 ஏப்ரல் 9

விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்கள் பின்வரும் இடங்களில் செயல்படுகின்றன:—

(1) சென்னை (முதன்மை ஆயம்)

(2) சென்னை (கூடுதல் ஆயம்)

(3) கோயம்புத்தூர் (கூடுதல் ஆயம்)

(4) மதுரை (கூடுதல் ஆயம்)

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி, தீர்ப்பாயத் தலைவராக உள்ளார். கூடுதல் ஆயத்திற்கு சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினர் தலைமை தாங்குகிறார். துறை உறுப்பினர்களாக முதன்மை ஆயத்தில் இணை ஆணையர்களும், கூடுதல் ஆயங்களில் துணை ஆணையர்களும் உள்ளனர்.

**10. தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம்**

தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம், இதுவரை, தலைவர், துணைத் தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர் ஆக மூன்று பேர்களுடன் இயங்கி வந்தது. மாவட்ட நீதிபதி ஒருவர் நீதித் துறை உறுப்பினராக 1-12-1998 முதல் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது இத்தீர்ப்பாயம் முழுமையான உறுப்பினர்களுடன் இயங்கி வருகிறது.

**11. வணிகவரித் துறையில் தகவல் தொழில் நுட்பம்**

வணிகவரித் துறையில் அனைத்து நிலைய்ங்களிலும் கணிப்பொறிமயமாக்குதல் வேண்டும் எனும் நோக்கத்தோடும், வெளிப்படையான நிருவாகத்தை இத்துறையில் உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திலும் பெருமளவில் ஒருங்கிணைந்த கணிப்பொறி மயமாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு அதில் முதற்கட்டமாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களிலுள்ள 140 வரிவிதிப்பு வட்டங்கள், 18 உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 9 எல்லையோர சோதனைச் சாவடிகள், தலைமைச் செயலகத்திலுள்ள அரசுச் செயலர் அலுவலகம், வணிகவரித் துறை ஆணையர் அலுவலகம் மற்றும் சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள கணிப்பொறி மையம் ஆகியவை ரூ. 3.57 கோடி செலவில் முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய தகவலியல் மைய பொது தகவல் முறையக வலைதளத்தில் (Gistnic Web Site) வணிகவரித் துறை தொடர்பான பொது விவரங்கள், பதிவு செய்வதற்கான வழிமுறைகள், வரி செலுத்தும் முறை மற்றும் தற்பொழுது நடைமுறையிலுள்ள பொருட்களுக்கான வரிவீதங்கள் ஆகியவற்றை



1999 ஏப்ரல் 9]

பொதுமக்கள் அறிந்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. தேசிய தகவல் மையத்தின் மென்பொருள் குழு, கேட்பு வசூல் நிலுவை தொடர்பான ஒரு மென்பொருள் தொகுப்பை அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

**12. வருவாய் வசூல் நிலை**

1998-99 ஆம் நிதியாண்டில் தொழில் பின்னடைவு மற்றும் பொதுவான பொருளாதாரத் தேக்க நிலை போன்ற எதிர்மறைப் போக்குகள் இருந்தன. அத்தகு பொருளாதார மந்தநிலை இருந்த போதிலும் இத்துறையின் அயராத உழைப்பால் சுமார் ரூ. 6583.00 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்துறையால் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களின்கீழ், கடந்த சில ஆண்டுகளில் வசூல் செய்யப்பட்ட வருவாய் நிலை பின்வருமாறு:—

**வணிகவரித் துறையின் வருவாயும் செலவும்**

| ஆண்டு | வருவாய் (ரூபாய் கோடியில்) | செலவு (ரூபாய் கோடியில்) | வருவாயில் செலவின் விழுக்காடு |
|---|---|---|---|
| 1994-95 | 4164.84 | 45.64 | 1.10 |
| 1995-96 | 5023.37 | 52.52 | 1.05 |
| 1996-97 | 5751.19 | 59.93 | 1.04 |
| 1997-98 | 6062.68 | 70.24 | 1.15 |
| 1998-99 | 6583.00* | 57.65 | 0.88 |
| | | (டிசம்பர் 1998 வரை) | |

* கருவூலக் கணக்குடன் சரிபார்க்காதத் தொகை

(2) 1994-95 முதல் 1998-99 வரை வசூல் செய்யப்பட்ட வருவாய் விவரங்கள் பின்வருமாறு:-

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம், 1959

| ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 3,452.92 |
| 1995-96 | 4,118.57 |
| 1996-97 | 4,717.19 |
| 1997-98 | 4,963.06 |
| 1998-99 | 5,455.46 |
| | (கருவூலக் கணக்குடன் சரிபார்க்காதத் தொகை) |

[1999 ஏப்ரல் 9

(ஆ) மத்திய விற்பனைவரிச் சட்டம், 1956

| ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 477.19 |
| 1995-96 | 590.63 |
| 1996-97 | 672.06 |
| 1997-98 | 706.82 |
| 1998-99 | 779.31 |

(கருவூலக் கணக்குடன் சரிபார்க்காதத் தொகை)

(இ) தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், 1939 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம், 1961

| ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 87.89 |
| 1995-96 | 98.96 |
| 1996-97 | 107.82 |
| 1997-98 | 108.55 |
| 1998-99 | 90.95 |

(கருவூலக் கணக்குடன் சரிபார்க்காதத் தொகை)

(ஈ) தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டம், 1935

| ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 5.70 |
| 1995-96 | 6.67 |
| 1996-97 | 6.42 |
| 1997-98 | 6.52 |
| 1998-99 | 5.40 |

(கருவூலக் கணக்குடன் சரிபார்க்காதத் தொகை)



1999 ஏப்ரல் 9]

(உ) தமிழ்நாடு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம், 1981

| ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 35.86 |
| 1995-96 | 50.77 |
| 1996-97 | 60.69 |
| 1997-98 | 64.71 |
| 1998-99 | 68.85 |

(கருவூலக் கணக்குடன் சரிபார்க்காதத் தொகை)

(ஊ) தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

| ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1994-95 | 1.00 |
| 1995-96 | இல்லை |
| 1996-97 | 0.05 |
| 1997-98 | இல்லை |
| 1998-99 | இல்லை |

(எ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990

| ஆண்டு | மொத்த வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1994-95 | 105.27 |
| 1995-96 | 157.77 |
| 1996-97 | 185.96 |
| 1997-98 | 213.02 |
| 1998-99 | 182.63 |

(கருவூலக் கணக்குடன் சரிபார்க்காதத் தொகை)

[1999 ஏப்ரல் 9

**13. ஏனைய சிறப்பு அம்சங்கள்**

**(1) மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர்களின் பணி ஆய்வு**

மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர்கள ஆகியோரின் பணி குறித்த ஆய்வுக் கூட்டம் 17.7.1998 அன்று வணிகவரித் துறையின் அரசுச் செயலர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பழைய வழக்குகளைக் குறிப்பிட்ட கால வரையரைக்குள் முடிக்கவும், அனைத்து வழக்குகளையும் விரைவாக முடிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கவும், உரிய அறிவுரைகள் இக்கூட்டத்தில் வழங்கப்பட்டன.

**(2) விற்பனைவரி ஆலோசனைக் குழு**

வணிகர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்று கருத்துப் பரிமாற்றம் செய்து விற்பனைவரி நிருவாகத்தைச் சீர்மைப்படுத்தும் பொருட்டு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் விற்பனைவரி ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

**(i) மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு**

என்னுடைய தலைமையில் மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழு செயல்படுகிறது. மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழுக் கூட்டம், என்னுடைய தலைமையில் கடந்த 20-11-1998 ஆம் நாளன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் உறுப்பினர்கள் பல்வேறு பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அவைகள் பரிசீலனையில் உள்ளன.

**(ii) மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு**

மாவட்டங்களிலுள்ள விற்பனைவரி ஆலோசனைக் குழுவிற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே தலைவர் ஆவார். மாவட்ட ஆட்சியர்கள், வணிகர் கழகங்கள் மற்றும் வர்த்தகச் சங்கங்களை அவ்வப்போது கூட்டி மாவட்ட அளவிலான பிரச்சினைகளைக் கேட்டறிகிறார்கள்.

**(3) காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை மற்றும் தள்ளுபடி போன்ற தொழிலகங்களுக்கான சலுகைகள்**

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவித்து தொழிற் பெருக்கத்திற்கு வித்திடும் வகையில் மிக பின்தங்கிய வருவாய் வட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்களுக்கு, ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு, வரித் தொகையைக் கைவிட அனுமதித்தும்



1999 ஏப்ரல் 9]

புதிய தொழிலகங்கள், தொழில் விரிவாக்கங்கள், நலிந்து போன தொழிலகங்கள் போன்றவற்றிற்கு அவை செலுத்தவேண்டிய வரிகளை காலம் தள்ளி வட்டியின்றிச் செலுத்தும் சலுகையினையும் அரசு வழங்கி வருகிறது.

இவ்வகையில் தொழிலகங்களுக்கு 1998 ஆம் ஆண்டில் 31-8-1998 வரை ரூ. 372.37 கோடி வரியினைக் காலம் தள்ளிச் செலுத்தும் சலுகையாக (Deferal) வழங்கப்பட்டுள்ளது.

**(4) உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல்**

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் மொத்தத் தொகையில் 30 விழுக்காடு முதல் 70 விழுக்காடு வரை உள்ளாட்சி மன்றங்களின் தரத்திற்கொப்ப, மாநகராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்துகள் ஆகியவற்றிற்கு 31-3-1997 வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. உள்ளாட்சி மன்றங்களின் நிருவாகத்தை மேம்படுத்த அவற்றின் வருவாய் ஆதாரங்களை அதிகரிக்கும் பொருட்டு 1-4-1997 முதல் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் நிதி மானியம் ஒரே சீராக 90 விழுக்காடாக உயர்த்தப்பட்டது.

**(5) தமிழ்நாடு விற்பனைவரித் துறை நிருவாக சீர்திருத்தக் குழு**

வணிகவரித் துறை அலுவலர்களின் பணிப் பளு, பணி நடைமுறைகள், பயிற்சிகள், கணினிமயமாக்கல், பணிச் சூழல், அலுவலர்களுக்குத் தேவையான வசதிகள் ஆகியன குறித்து ஆய்வு செய்ய வணிகவரித் துறையின் அரசுச் செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. 3-4-1998 மற்றும் 25-6-1998 ஆகிய நாட்களில் நடந்த இக்குழுவின் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(6) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்**

ரூபாய் பத்து இலட்சத்திற்கு அதிகமாக விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள் கூடுதல் வரி செலுத்தும் வகையில் இருந்த சட்டத்தை, 1-8-1996 முதல் ரூ. 100 கோடி விற்பனைத் தொகையுள்ள வணிகர்கள் மட்டுமே கூடுதல் வரி செலுத்தும் வகையில் திருத்தப்பட்டது. அரசின் நிதி நிலையை கருத்திற் கொண்டு 1-4-1998 முதல் அத்தொகை ரூ. 25 கோடி விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள் கூடுதல் விற்பனை வரி செலுத்தும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டது.

(7) நிதிநில்லை அறிக்கைக்குமுன் தொழில் மற்றும் வணிகக் [1999 ஏப்ரல் 9
கழகங்களின் சார்பாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம்

தமிழக நிதிநிலை அறிக்கை வரலாற்றில் முதல் முறையாக 26-2-1999 ஆம் நாளன்று என்னுடைய தலைமையில் தொழில் மற்றும் வணிகக் கழகங்களின் சார்பாளர்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் சார்பாளர்கள் பங்கு கொள்ளும் வகையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பயனுள்ள ஆலோசனைகளை குறிப்பாக வரிவிலக்கு மற்றும் வரிக்குறைப்பு போன்ற ஆலோசனைகள் மட்டுமல்லாது அரசின் வருவாயைப் பெருக்குவதற்குரிய வழிவகைகளையும் கூறுமாறு கேட்டுக் கொண்டேன். 36 தொழில் மற்றும் வணிகக் கழகங்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் சார்பாக கலந்து கொண்ட சார்பாளர்கள் பலர் பயனுள்ள பல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

14. வணிகர் நல வாரியம்

வணிகர்களுக்கு உதவும் நோக்கத்துடன் 1989-ல் வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டது. பின்னர் இவ்வணிகர் நல வாரியம் 1997-ல் திருத்தி அமைக்கப்பட்டது. அரசு அலுவலர்களும், வணிகச் சங்க பிரதிநிதிகளும் வாரிய நிருவாகக் குழு உறுப்பினர்களாக உள்ளனர். இதுவரை 34 வணிகர் குடும்பங்களுக்கு ரூ. 10,25,000/- குடும்ப நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 5 வணிகர்களுக்கு சிறுநீரக அறுவைச் சிகிச்சை மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டமைக்காக ரூ. 83,000/- நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. 21 வணிகர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு கல்வி நிதி உதவியாக ரூ. 42,000/- வழங்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தின் 7-வது கூட்டம் கடந்த 21-12-1998 ஆம் நாளன்று தலைமைச் செயலகத்தில், இவ்வாரியத்தின் துணைத் தலைவராக உள்ள வணிகவரித் துறை செயலர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்வாரியத்தில் 31-12-1998 வரை 26,650 ஆயுட்கால உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களிடமிருந்து ஆயுட்கால உறுப்பினர் கட்டணமாக 31-12-1998 வரை ரூ. 41,61,325/- வசூலிக்கப்பட்டுள்ளது.

இணை மானியமாக அரசால் இவ்வாரியத்திற்கு ரூ. 35,48,575/- அரசு ஆணை எண் 99, வணிகவரி மற்றும் அறநிலையம், நாள் 24-3-1997-ல் வழங்கப்பட்டுள்ளது.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" -குறள்.



1999 ஏப்ரல் 9]

## இணைப்பு-II

(57ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### கோரிக்கை எண் 11
### மாவட்ட நிர்வாகம்

### கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000.

**1. முன்னுரை**

'மக்கள் நல அரசு' என்னும் கோட்பாட்டில் இந்த அரசு மாற்றிடமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், நலிந்தோர் வாழ்வில் நலமும், வளமும் உண்டாக்கவும் வளர்ச்சித் திட்டங்களும், நலப்பணித் திட்டங்களும் செயலாக்கப்படுகின்றன. பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்திடவும், சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளின் பொதுமக்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வழிவகை செய்திடவும், பின்தங்கிய பகுதிகள் முன்னேற்றம் காணவும் பல்வேறு சீரிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. சமுதாய முன்னேற்றத்தை உருவாக்குவதிலும், விரைவுபடுத்தப்பட்ட தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதிலும் அரசினுடைய பங்கு முக்கியமானதாகும். மாநிலம் அமைதியான, சுமூகமான முறையில் தொடர்ந்து முன்னேறுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. கடைநிலையிலிருந்து மேல்நிலை வரையுள்ள நிர்வாக இயந்திரம் செம்மையாகச் சுழன்றால்தான், இத்தகைய குறிக்கோள்களை பாராட்டத்தக்க அளவில் நிறைவேற்ற முடியும். இந்த நிர்வாக இயந்திரம், பொதுவாக எல்லா நிலைகளிலும் குறிப்பாக மாவட்ட அளவிலும் மிகப்பெரும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

2. மக்களின் குறைகளைப் போக்கி அவர்களின் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு காண்பதற்கு உதவும் பொருட்டு, இந்த அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நிர்வாக இயந்திரத்தை நல்லமுறையிலும், மக்களுக்குப் பயன்களை விளைவிக்கும் வகையிலும் பேணிக்காத்திடப் பின்வரும் வழிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன:-

(1) நடைமுறைகள் எல்லோரும் புரிந்து கொண்டு பின்பற்றத்தக்க வண்ணம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

(2) பல்வேறு நிலையிலுள்ள அலுவலர்களுக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(3) பலதரப்பட்ட அலுவலர்களைக் கொண்டிருக்கும் நிர்வாகக் கூட்டமைப்பில் அவரவர்களுக்குரிய அதிகார வரம்பும், செயல்பாடுகளும் நன்கு விளக்கப்பட்டு, நிர்வாகக் கட்டுப்பாடு முறையாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

(4) சில தனித்துவம் வாய்ந்த பணிகளை ஆற்றுவதற்கு நுட்பமான திறமையும், அலுவலர்களின் முழு ஈடுபாடும் தேவைப்படுவதால், எவ்விதப் பணியையும் ஏற்றமுடன் செய்து முடித்திட பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(5) எவ்வித அவசரப் பிரச்சனைகளையும் காலதாமதமின்றிச் சந்தித்து இணக்கமான தீர்வு காண ஏதுவாக, வாகன வசதி, தகவல் தொடர்பு வசதி போன்றவற்றை முழு அளவில் வருவாய்த் துறை நிர்வாகம் பெற்று இயங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

3. மாறிவரும் கால கட்டங்களில் அவ்வப்போது தேவைப்படும் பணிகளைச் செம்மையாக நிறைவேற்றி அரசின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு அரசு இயந்திரம் பொறுப்பாகவும், ஆற்றல் வாய்ந்ததாகவும் இருந்திட வேண்டும். மக்களாட்சி முறையில் அரசு பல்வேறு வகையான பணிகளையும் கடமைகளையும் மக்களுக்கு ஆற்றவேண்டியிருப்பதால், அதற்கேற்ப பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தங்களை இந்த அரசு நடைமுறைபடுத்தியிருக்கிறது. இதன் மூலம் வளர்ந்து வரும் சமுதாயத்தில், மக்களின் எதிர்பார்ப்புகளையும், விருப்பங்களையும் ஈடேற்றும் வகையில் அரசு நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகள் தத்தமது பணிகளைத் திறம்பட மேற்கொள்ளுவதற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப் படுகின்றன. ஆழ்ந்து சிந்தித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் நிர்வாக இயந்திரம் உணர்வுபூர்வமாகச் செயல்பட்டு மக்களுக்குப் பணிகளை வழங்கும் மையமாகவும், அரசின் கொள்கைகளுக்குச் செயல்வடிவம் வழங்கும் கருவியாகவும் இயங்கி வருகிறது. இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகச் சீர்த்திருத்தங்களும், மாவட்ட நிர்வாக அமைப்பின் பொறுப்புகளும், சாதனைகளின் சிறப்புகளும் பின்வருமாறு சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன:-

**2. துறைத் தலைமையிடம்:**

1786-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட வருவாய் வாரியம், கலைக்கப்பட்டு, ஐந்து புதிய துறைகள் உருவாக்கப்பட்டன. வருவாய் வாரிய உறுப்பினர்களால் கையாளப்பட்ட வருவாய்ச் செயல்பாடுகள், வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக அணையர் நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று ஆணையர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.



**3. மாவட்ட வருவாய் நிர்வாகம்:**

தலைமை நிலையில் வருவாய் நிர்வாகத்தின் முழுப் பொறுப்பும் வருவாய் நிர்வாக ஆணையரைச் சார்ந்ததாகும். வருவாய்த் துறை மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் மற்றும் கிராமங்கள் ஆகிய பல்வேறு நிலைகளில் உள்ள துறை அலுவலகங்கள் மூலம் பல்வேறு பணிகளை மேற்கொண்டு தன்னுடைய பொறுப்பான பங்கினை ஆற்றி வருகிறது. மாவட்ட நிலையிலான பொது நிர்வாகம், மாவட்ட ஆட்சித் தலைவர்களைச் சுற்றிச் சுழல்கிறது. இவர்களுக்கு உறுதுணையாக, மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் உள்ளனர். மாவட்ட அளவில் பல்வேறு துறைகளின் செயல்பாடுகளை, மாவட்ட ஆட்சியர்கள் ஒருங்கிணைத்துச் செயல்படுகிறார்கள். பொதுமக்கள் தற்பொழுது, அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சட்டங்களின்கீழ் தங்களுடைய உரிமைகள் குறித்து நன்கு அறிந்திருப்பதுடன், அரசுத் துறைகளின் செயல்பாடுகளை விழிப்புடன் கவனித்தும் வருகின்றனர். தங்களுடைய குறைகளைக் களைந்துகொள்வதற்காக மாவட்டாட்சியரையும், வருவாய்த் துறையையும் பொதுமக்கள் அணுகுகின்றனர். எனவே, இரண்டு தனிப்பட்ட திட்டங்களான "மனுநீதித் திட்டம்" மற்றும் "பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்" ஆகியவை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டாட்சியர் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் இப்பணியில் முக்கிய பங்கேற்கின்றனர்.

**(அ) மனுநீதித் திட்டம்:**

(i) மக்களின் குறைகளுக்குத் தீர்வு காண்பதற்கென 1969 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட "மனுநீதித் திட்டத்தை", இந்தியாவிலேயே முதன் முதலில் அறிமுகப்படுத்திய பெருமை தமிழகத்தையே சாரும். இத்திட்டத்தின்கீழ், நிர்வாகம் பொது மக்களிடம் சென்று குறைகளை அறிந்து, இயன்ற வரைவில் அந்த இடத்திலேயே குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சி செய்கிறது.

(ii) மனுநீதித் திட்டம் மாதம் ஒருமுறை, இரண்டாவது புதன்கிழமை நடத்தப்படுகிறது. மாவட்டாட்சியர்கள்/மாவட்ட வருவாய் அலுவலர்கள் தவிர, கோட்டாட்சியர்கள் மற்றும் இதர அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களும் இந்தத் திட்டத்தை செயல்படுத்துகின்றனர். மனுநீதித் திட்டத்தின் மூலம் எந்த ஒரு கிராமமும் விடுபடாது பயனடையுமாறு மூன்றாண்டு காலச் சுழற்சியில் மூன்றாண்டுக்குள், எல்லா கிராமங்களிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மனுநீதி நாட்களில் பெறப்படும் மனுக்கள், வருவாய்த் துறை சம்பந்தப்பட்டவை மட்டுமல்லாமல் இதர துறைகள் சம்பந்தப்பட்டதாகவும் உள்ளதால், அனைத்துத் துறையைச் சார்ந்த அலுவலர்களும் முழு ஈடுபாட்டுடன் இந்நிகழச்சியில் பங்கேற்கின்றனர்.

(iii) மனுநீதித் திட்டம் நடத்தப்படும் நாளுக்கு 4 வாரங்களுக்கு முன்னரே ஒரு அலுவலர் கிராமத்திற்குச் சென்று விளம்பரம் செய்து மனுக்கள் பெறுகிறார். மனுக்களுக்கான பதில்களும் தயாரிக்கப்படுகின்றன. மனுநீதித் திட்ட நாளன்று, மனுதாரர்களுக்கு பதில் அளிக்கப்படுகிறது. மேலும், மனுநீதித் திட்ட நாளன்று பெறப்படும் மனுக்கள்மீது முடிந்தவரை பதில்களை அன்றே அளிக்கமுடியுமா என்று ஆய்வு செய்து, அதன்படி பதில்களும் அளிக்கப்படுகின்றன. தலத்திலேயே முடிவு எடுக்க இயலாத மனுக்கள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் விசாரணை செய்யப்பட்டு மனுநீதித் திட்டம் முடிந்த ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு முடிவான பதில் கொடுக்கப்படுகின்றது.

(iv) பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள்மீது 100 நாட்களுக்கு மேல் முடிவெடுக்கப்படாமல் இருக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. 100 நாட்களுக்கு மேல் சில மனுக்களின்மீது முடிவெடுக்கப்படாத நிலை எழுமானால், அம்மனுக்களின் முன்னேற்றம் குறித்து, அலுவலகத்தின் தலைமை அலுவலரால் நாள்தோறும் ஆய்வு செய்யப்படுகிறது. 200 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ள மனுக்கள் "நிக்நெட்" மூலம் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு, அதன் முன்னேற்றம் குறித்து மாவட்டாட்சியர் தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்கின்றார்.

(v) ஒவ்வொரு மாதமும், இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து வருவாய் நிர்வாக ஆணையர் ஆய்வு செய்கிறார். வருவாய் நிர்வாக ஆணையர், இத்திட்டத்தின்மீது தகுந்த அறிவுரைகளை



மாவட்டாட்சியர்களுக்கு வழங்குவதுடன் அரசுக்கும் காலாண்டு அறிக்கை ஒன்றை அனுப்புகின்றார்.

| | |
|---|---|
| 1998 ஆம் ஆண்டில் மனுநீதித் திட்டம் நடத்தப்பட்ட கிராமங்கள் | 2,940 |
| வரப்பெற்ற மனுக்கள் | 2,52,203 |
| முடிவு செய்யப்பட்ட மனுக்கள் | 2,42,184 |
| கோரிக்கை ஏற்கப்பட்ட மனுக்கள் | 1,47,854 |
| கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் | 94,330 |
| நிலுவையிலுள்ள மனுக்கள் | 10,019 |

**(ஆ) பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்:**

ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. அந்த நாளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்க் கோட்டாட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்கள் தங்கள் தலைமையிடத்திலேயே தங்கி இருந்து பொதுமக்கள் தொடுக்கும் மனுக்களைப் பெற்று, குறைகளைப் போக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கின்றனர். இத்திட்டம் முறையாகச் செயல்பட அரசு விரிவான நெறிமுறைகளை வகுத்துள்ளது. குறை தீர்க்கும் நாளில் பெறப்படும் மனுக்கள் மீது ஒருங்கிணைந்து முடிவெடுக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியாக அதற்கென ஒரு துணை ஆட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்குத் தனியாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. அவர் மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள 'நிக்நெட்' கணிப்பொறியின் உதவியுடனும், குறை தீர்க்கும் நாளன்று பெறப்படும் மனுக்களின் மீது மாவட்டத்திலுள்ள அனைத்து அலுவலகங்களிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்.

| | |
|---|---|
| 1998 ஆம் ஆண்டு பெறப்பட்ட மொத்த மனுக்கள் | 2,65,543 |
| முடிவு செய்யப்பட்ட மனுக்கள் | 2,42,777 |
| கோரிக்கை ஏற்கப்பட்ட மனுக்கள் | 1,36,147 |
| கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் | 1,06,630 |
| நிலுவையிலுள்ள மனுக்கள் | 22,766 |

[1999 ஏப்ரல் 9

## 4. ஆட்சி எல்லைகளைச் சீரமைத்தல்

பொதுமக்களிடமிருந்து விலகி விடாமல் அருகில் சென்று மாவட்ட நிர்வாகம் செயல்படவும், அவர்களுடைய குறைகள் மற்றும் தேவைகளுக்கு உதவும் வகையிலும், பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் காலங்களில் ஆதரவு அளிக்கவும், மக்கள் நலப் பணிகள் தாமதமின்றி நடைபெறவும், முந்தைய பெரிய மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் முதலியன சீரமைக்கப்பட்டு, மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயல்பட புதிய மாவட்டங்கள், கோட்டங்கள், வட்டங்கள் முதலியன உருவாக்கப்படுகின்றன.

2. 1998-99 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய கோட்டங்கள், வட்டங்கள், உள்வட்டங்கள் மற்றும் கிராமங்களை அரசு புதிதாக உருவாக்கியுள்ளது:-

| வ. எண் (1) | மாவட்டத்தின் பெயர் (2) | புதியதாக உருவாக்கப்பட்ட கோட்டத்தின் பெயர் (3) | புதியதாக உருவாக்கப் பட்ட வட்டத்தின் பெயர் (4) | புதியதாக உருவாக்கப் பட்ட உள் வட்டத்தின் பெயர் (5) | புதியதாக உருவாக்கப்பட்ட கிராமத்தின் பெயர் (6) |
|---|---|---|---|---|---|
| 1. | சேலம் | ஆத்தூர் | வாழப்பாடி | - | - |
| 2. | நீலகிரி | - | குந்தா, பந்தலூர் | - | - |
| 3. | புதுக்கோட்டை | - | இலுப்பூர், மணமேல் குடி | கோட்டைப் பட்டிணம் சிங்கவனம் | - |
| 4. | விருதுநகர் | - | காரியபாப்- பட்டி | மல்லாங்- கிணறு | - |
| 5. | வேலூர் | - | காட்பாடி | - | - |
| 6. | நாகப்பட்டினம் | - | திருக்- குவளை | திருக்- குவளை | - |
| 7. | தூத்துக்குடி | - | எட்டயபுரம் | நாலாட்டின் புதூர், காமநாயக்- கன்பட்டி | - |



1999 ஏப்ரல் 9]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 8. | திருச்சிராப்பள்ளி | - | தொட்டியம் | - | - |
| 9. | திருநெல்வேலி | - | ஆலங்குளம் | பன்மொழி, இலத்தூர், ஆயக்குடி, புதுப்பட்டி, வெங்கடா- பட்டி | - |
| 10. | திருவாரூர் | - | - | - | புல்லவ- ராயன் குடிகாடு |

ஆக, 1998-99 ஆம் ஆண்டில் மட்டும் 1 புதிய வருவாய்க் கோட்டமும், 11 புதிய வட்டங்களும், 11 புதிய உள்வட்டங்களும், 1 புதிய வருவாய்க் கிராமமும் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளன.

3. தற்போதுள்ள மாவட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| மாவட்டங்கள் | - | 29 |
| கோட்டங்கள் | - | 73 |
| வட்டங்கள் | - | 206 |
| உள்வட்டங்கள் | - | 1121 |
| கிராமங்கள் | - | 17,274 |

4. புதிய கோட்டங்கள், வட்டங்கள் மற்றும் உள்வட்டங்கள் ஏற்படுத்தப்படும்போதே, தேவையான உள்ளமைப்பு வசதிகள், வாகனங்கள், தொலைபேசிகள், மரச்சாமான்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் வாங்க அரசு ஒப்பளிப்பு வழங்குகிறது. இவ்வகை வசதிகளுக்காக, 1998-99 ஆம் நிதி ஆண்டில் தொடராச் செலவினமாக ரூ.57.92 இலட்சமும், தொடரும் செலவினமாக ரூ.120.46 இலட்சமும் வழங்க அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 5. கிராம நிர்வாகம்:

கிராமங்களில் முழுநேர கிராம நிர்வாக அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கிராம நிர்வாக அலுவலர்களின் மொத்தப்

[1999 ஏப்ரல் 9

பணியிடங்கள் 12,506. இவர்களில் 7,176 பேர் தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலம் நியமனம் பெற்றவர்கள். உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி 14-11-1980 அன்று முழுத் தகுதி உடைய 5,109 முன்னாள் கிராம அலுவலர்கள் தேர்வுக்குழு மூலம் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

2. 20-2-1982-க்குப் பிறகு கல்வித் தகுதி பெற்ற 1,438 முன்னாள் கிராம அலுவலர்களை தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று நிரந்தர கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. இதுவரையில் 1,126 முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தண்டனை, இறப்பு போன்ற காரணங்களுக்காக மீதமுள்ளோர் நியமனம் செய்யப்படவில்லை.

(அ) முன்னாள் கிராம அலுவலர்கள் ஓய்வு காலப் பயன்கள்:

14-11-1980 அன்று பணியிழந்த முழுத் தகுதி பெற்ற முன்னாள் கிராம அலுவலர்களுக்கு, கிராம நிர்வாக அலுவலர்களாக பணி நியமனம் வழங்கியதோடு, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் அரசு 23-8-1996 அன்று ஆணையிட்டுள்ளது. பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.175 மற்றும் அதற்குரிய படிகளைச் சேர்த்து ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்தது. அது தற்பொழுது, மாதம் ரூ.250 ஆக 22-7-1998 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 14-11-1980 இல் பணியிழந்து பிறகு காலஞ்சென்ற முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பங்களுக்கு மாதம் ரூ.100 குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்தது. அது தற்பொழுது 22-7-1998 முதல் மாதம் ரூ.150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசின் இத்திட்டத்தினால் 12,260 முன்னாள் கிராம அலுவலர்களும் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் பயனடைந்துள்ளனர்.

(ஆ) கிராம நிர்வாக அலுவலர்கள் கிராமக் கணக்குகளைப் பராமரித்தல், நிலவரி முதலிய அரசுக்குச் சேர வேண்டிய தொகைகளை வசூலித்தல், அரசு நிலங்கள், கட்டடங்களைப் பராமரித்தல் உள்ளிட்ட நிர்வாகம் தொடர்பான பல்வேறு பணிகளை



1999 ஏப்ரல் 9]

ஆற்றி வருகிறார்கள். பொதுமக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கும், நிர்வாகத்திற்கு அடிப்படை கிராமங்கள்தான் என்பதாலும் அத்தகைய அடிப்படை நிர்வாகமாகக் கருதப்படும் கிராம நிர்வாகத் திறனை மேம்படுத்துவதில் அரசு அக்கறை கொண்டு, அதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து வருகிறது.

**கிராம உதவியாளர்கள்**

பகுதி நேர கிராம உதவியாளர்களாகப் பணியாற்றிய அனைவரும் 1-6-1995 முதல் முழு நேர கிராம உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களது ஊதிய விகிதம் ரூ.1800-20-2040 என 1-1-1996 முதல் மாற்றி அமைக்கப்பட்டது. தற்போது 26,247 கிராம உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**6. வருவாய்த் துறைக் கட்டடங்கள்:**

பொதுமக்கள் தங்களுடைய குறைகளை உடனுக்குடன் போக்கிக் கொள்வதற்கேதுவாக எளிதில் வந்துபோக, அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வருவாய் அலுவலர்களுக்கான (அதாவது மாவட்டாட்சியரிலிருந்து கிராம நிர்வாக அலுவலர்கள் வரை) குடியிருப்புகள் கட்டும் பணியை அரசு முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொண்டுள்ளது.

(அ) பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்:

29 மாவட்டங்கள், 21 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், அவைகளுக்காக் கட்டப்பட்ட அரசுக் கட்டடங்களில் அமைந்துள்ளன. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மட்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதர ஏழு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் அரசுத் துறைக்கு/அரசு நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டங்களில் இயங்கி வருகின்றன.

எட்டு மாவட்டங்களில் பெருந்திட்ட வளாகக் கட்டுமானப் பணிகள் குறித்த தற்போதைய நிலை பின்வருமாறு:

[1999 ஏப்ரல் 9

| வ. எண் (1) | மாவட்டம் (2) | நிலம் கையகப் படுத்த உத்தர விடப்பட்ட நிலப் பரப்பு (ஏக்கரில்) (3) | நிலச் சொந்தக் காரர் களுக்கு அனுமதிக்கப் பட்ட இழப்பீட்டுத் தொகை (4) | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட அனுமதிக்கப் பட்ட தொகை (5) | தற் போதைய நிலை (6) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | திருவள்ளூர் | 846.19 | 85.30 | 510.00 | ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப் பட்டு வருகின்றன. |
| 2. | திருவாரூர் | 234.78 | 150.00 | 570.00 | " |
| 3. | நாகப்பட்டினம் | 151.54 | 600.00 | 590.00 | " |
| 4. | கரூர் | 880.90 | 207.00 | 560.00 | " |
| 5. | நாமக்கல் | 518.75 | 288.00 | 559.00 | " |
| 6. | தேனி | 556.82 | 22.00 | 540.00 | " |
| 7. | திருவண்ணாமலை | 235.88 | 151.00 | 525.00 | " |

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, அரசால் இறுதி முடிவு எடுக்கப்படும் நிலையில் உள்ளது.

**ஆ. வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்:**

தமிழ்நாட்டில், 73 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் 59 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதர 14 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், வாடகைக் கட்டடங்களில் உள்ளன. இவற்றுள், பின்வரும் 13 இடங்களில் வருவாய்க் கோட்ட அலுவலகக் கட்டடங்கள்



1999 ஏப்ரல் 9]

கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது:-

1. கள்ளக்குறிச்சி
2. லால்குடி
3. உடையார்பாளையம்
4. திருச்செந்தூர்
5. பெரம்பலூர்
6. திருச்செங்கோடு
7. மதுராந்தகம்
8. திருத்தணி
9. உத்தமபாளையம்
10. திருவாரூர்
11. குளித்தலை
12. பொன்னேரி
13. விழுப்புரம்

பெரம்பலூரில் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது. திருச்செங்கோடு, உத்தமபாளையம் மற்றும் திருவாரூரில் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. திருத்தணி மற்றும் குளித்தலையில் ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன. ஆத்தூரில் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை இனி மேற்கொள்ளப்பட உள்ளது.

**இ. வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்:**

மொத்தமுள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில், 170 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இதர 36 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றுள், பின்வரும் 12

இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிட்டுள்ளது:—

1. பேரையூர்
2. குன்னம்
3. செந்துரை
4. அரவக்குறிச்சி
5. போச்சம்பள்ளி
6. பாப்பிரெட்டிபட்டி
7. திருவையாறு
8. ஒட்டன்சத்திரம்
9. சிவகாசி
10. கடலாடி
11. அம்பத்தூர்
12. தாம்பரம்

இவற்றுள், பேரையூர் மற்றும் அரவக்குறிச்சி தவிர்த்த, இதர 10 வட்ட அலுவலகக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. பேரையூர் மற்றும் அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள 24 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் இனி மேற்கொள்ளப்படும்.

ஈ. குடியிருப்புகள்:

**(1) மாவட்டாட்சியர்கள்:**

29 மாவட்டங்களில் 18 மாவட்டாட்சியர்களுக்கு அரசுக் கட்டடங்களில் ஏற்கெனவே குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. விழுப்புரத்தில் மாவட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் கட்ட அரசு நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் அளித்து, கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. தூத்துக்குடியில் மாவட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் கட்ட திட்டம் மற்றும் வரைபடம் பரிசீலனையில் உள்ளது. சென்னையில் மாவட்டாட்சியர் தகுந்ததோர் இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். ஏனைய 8 மாவட்டங்களில் மாவட்டாட்சியர்களுக்கான குடியிருப்புகள் பெருந்திட்ட வளாகங்களுள் அமையும்.



**(2) மாவட்ட வருவாய் அலுவலர்கள்:**

சென்னையைத் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் உள்ளனர். 16 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அரசுக் கட்டடங்களில் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலருக்கான குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடியில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்ட அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கான பணி இனி மேற்கொள்ளப்படும்.

**(3) வருவாய்க் கோட்ட அலுவலர்கள்:**

73 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் 58 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய வருவாய்க் கோட்டாட்சியர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கை இனி மேற்கொள்ளப்படும்.

**(4) வட்டாட்சியர்கள்:**

206 வட்டங்களில், 167 வட்டாட்சியர்களுக்கு அரசு குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அரசாணை (நிலை) எண் 443, வருவாய், நாள் 3-6-1998-ல் 1998-99 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் பல்லடம் வட்டாட்சியருக்கு குடியிருப்பு கட்டடம் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்திலுள்ள ஐந்து வட்டாட்சியர்கள் நீங்கலாக ஏனைய 33 வட்டாட்சியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(5) வருவாய் ஆய்வாளர்கள் :**

1121 வருவாய் ஆய்வாளர்களில், 1080 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புகள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள 20 வருவாய் ஆய்வாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் தேவை எழவில்லை. ஏனைய வருவாய் ஆய்வாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(6) கிராம நிர்வாக அலுவலர்கள் :**

மாநிலத்தில் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் வழங்க அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. மலைப்பகுதிகளிலுள்ள கிராமங்கள், கடலோரப் பகுதியிலுள்ள கிராமங்கள் மற்றும் பிரச்சினை உருவாக வாய்ப்புள்ள கிராமங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு, அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் கட்ட தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மலைப்பகுதியில் 60 குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு 20 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, மீதி 40 குடியிருப்புகளில் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

**7 வருவாய்த் துறைக்கு உள்ளமைப்பு வசதிகள் :**

(அ) மோட்டார் வாகனங்கள்

வருவாய் அலுவலர்களுக்கு வாகனங்கள் வழங்குவது அவசியம் என்பதை அரசு கருத்தில்கொண்டு, கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக, 1998-1999 ஆம் ஆண்டில் 14 சிருந்துகளும் 101 ஈப்புகளும் வாங்குவதற்கு 3.61 கோடி ரூபாய் வழங்கி உள்ளது. மேலும், 1998-99 ஆம் ஆண்டில் புதிதாக உருவாக்கப்பட்ட கோட்டங்களுக்கும் வட்டங்களுக்கு ஈப்பு வாங்க, 38.50 இலட்சம் ரூபாய் அரசு அனுமதித்துள்ளது.

(ஆ) இரு வழித் தகவல் தொடர்புத் திட்டம்

இயற்கை இடர்பாடுகள், சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினைகளால் ஏற்படும் நெருக்கடிகளின் போது உடனுக்குடன் எளிதில் தொடர்புகொள்வதற்கு ஏதுவாக அரசு இரு வழித் தகவல் தொடர்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. முதல் கட்டமாக இரு வழித் தகவல் தொடர்புச் சாதனம் 36 வட்டங்களிலும், 19 கோட்டங்களிலும் மற்றும், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திலும் அமைக்கப்பட உள்ளது. இதற்கு தொடராச் செலவினமாக 99.25 இலட்சம் ரூபாயும் தொடரும் செலவினமாக 11.50 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.



(இ) மின்னணுத் தொலைபேசித் திட்டம்

தொலைபேசித் தொடர்புத் திட்டத்தை மேம்படுத்தவும், பணிகளை விரைவாகவும் சிறப்பாகவும் ஆற்றுவதற்கும், திண்டுக்கல், நாகப்பட்டினம், கடலூர், வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் PABX-ஐ EPABX-ஆக மாற்றம் செய்ய, 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ், ரூ.10 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

221801

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.